உ

கடவுள் துணை.

வான்மீகர் அருளிச்செய்த

ஆரூட சாஸ்திரம்-கருடம்

மூலமும் - உரையும்.

டி. சாரதா புத்தகசாலை தலைவர்,

த. துரைசாமி முதலியாரவர்களால்,

சென்னை, புவனேஸ்வரி அச்சுக்கூடத்தில்,

பதிப்பிக்கப்பட்டது.

இதன் விலை] 1928. [அணா 8

V. PR. PL
M.K.
Paganeri
6.2.35

YOUNG MEN CHETTIARS' TAMIL ASSOCIATION,
PAGANERI.

PAGANERI

3968

உ

கடவுள் துணை.

வான்மீகர்

ஆரூடசாஸ்திரம்

௱௩ய.

மூலமும் - உரையும்.

இஃது.

மதுரைமாநகரம்,

கவிராஜ - கந்தசாமிபிள்ளை அவர்களால்,

எழுதிய - உரையுடன்,

டி. சாரதா புத்தகசாலை தலைவர்,

த. துரைசாமி முதலியார்.

அவர்களால்

சென்னை.

புவனேஸ்வரி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1928.

ரிஜிஸ்டர் காபிரைட்.

நெ. 23, பாளையப்பன் தெரு, மிண்ட் போஸ்ட்

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்:— வான்மீக மஹாரிஷியால் அருளிச்செய்த வான்மீகர் ஆரூட சாஸ்திரம் ௱௬௰-க்கு, கவிராஜ-கந்தசாமி பிள்ளை அவர்களால் விருத்தி உரையும் – ஆரூட சக்கரம் முதலானதுகள் எழுதப்பெற்று அடியிற்கண்ட ... அச்சிட்டிருக்கிறபடியால் இதை என் அனுமதி யில்லாமல் ...வர் அச்சிட லாகாதென கனம்பொருந்திய கவர்ன் மெண் படிக்கு ரிஜிஸ்டர் காப்பிரைட் செய்யப்பட்டிருக்கிறது.

இப்படிக்கு,

டி. சாரதா புத்தகசாலை,

த. துரைசாமி முதலியார்,

...ன் தெரு, மின்ட் பில்டிங் போஸ்டு, மதராஸ்.

முகவுரை.

ஆதியில் பகவான் சகல ஜீவர்களையும் சிருஷ்டித்து அவரவர்கட்கு அறிவையும் தந்திருக்கின்றனர். ஆனால் மனிதர்கள் தமது மனதின்படியே செய்த பாபபுண்ணியத்தின்படியே சுகதுக்க மனுபவிப்பதற்கிசைந்தவிதமே தினந்தோறும் வருகிற அஸ்வனி, பரணி, கிர்த்திகை ரோகணி மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம், பூரம் உத்திரம் அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதையம், புரட்டாதி, உத்திரட்டாதி ரேவணி யென்னும் இருபத்தேழு நட்க்ஷத்திரங்களில் தக்க நட்க்ஷத்திரத்திலாகிலும் பிறந்தாலும், மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம் சிங்கம், கன்னி துலாம் விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் தன்னும் பன்னிரெண்டு ராசியிலும் சூரியன் சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது யென்னும் ஒன்பது கிரகங்களும் சஞ்சரிக்கும் போது அவரவர்க்கிடைந்த சுப அசுபல லாபனுக்கிடைந்த சுகதுக்கத்தை அனுபவிக்கும் பலனைத் தெரிந்து கொள்வதற்கு அவரவர்கள் ஜனன காலத்தில் ஜாதகம் எழுதிக்கொள்ளவேண்டும். அவ்விதமாய் எவர்களுக்கு ஜனன ஜாதகமிருக்கின்றதோ அவர்களுக்கு மாத்திரம் நடந்த பலனும், நடக்கும் பலனும், நடக்கப்போகும் பலனையும் விபரமாய்ச் சொல்லலாம், ஆனால் ஜாதகமில்லாதவர்களுக்கு ஆரூடத்தினால் அவரவர்கள் நினைத்ததையும், நினைக்கும் காரியம் ஆகுமா ஆகாதா வென்பதையும் கவனிப்பதற்காகவே பலவித ஆரூட சாஸ்திரங்கள் ஏற்பட்டிருந்தாலும், அவைகளில் ஒன்றுக்கொன்று சரியாய் ஒத்துவாராமலுமிருப்பதினால் அவரவர்கள் நினைத்த நினைத்த காரியத்தை முடிப்பதற்கு நாள் நாழிகை இன்னதென ஏற்படாமல் விசாரிக்கின்றார்கள். இதற்காகவே பற்பல ஓலை சுவடிகளாகிய ஆரூடசாஸ்திரத்தில் ஆராய்ந்து பார்த்ததில் அதில் வான்மீக ஆரூடமே சரியானதென்று சகலரும் நிச்சயஞ் செய்து பலன் சொல்லிக்கொண்டு வந்ததினால் அதுவே சரியென்று சகலரும் சரியென்று சம்மதித்தார்கள் ஆனால் அதுமூல பாடமாயிருந்ததினால் அவையவைகட்குத் தகுந்த உரையெழுதியும், சக்கரங்களமைத்தும் அவைகளில் குறிப்பித்திருக்கும் வான்மீகம், துவிதரம் கெடபமெனும் மூன்று வாக்கியமும் பனிரெண்டுராயிலும் அமைந்திருப்பதினால் அவைகளில் எதைத்தொடுகின்

றோர அதை கவனித்து அவர்கள் நினைத்தகாரியங்களை மனதில் நினைத்துக்கொண்டு அந்தக் காரியங்கள் ஆகுமா ஆகாதாவென்று இந்த ஆரூட சக்கரத்தின் பனிரெண்டு இராசியிலொன்றைத் தொட்டால், அதில் குறிப்பித்திருக்கும் வான்மீகம், துவாரம், கெற்பமென்னும் மூவகை விபரங்களில் சொல்லியபடியே பலன்களைப்பார்த்துக் கொள்ளவும் ஆகையால், இந்த வான்மீகர் ஆரூட சக்கிரத்தின் மகிமையைக் கவனிப்போர் ஓர் புஷ்பத்தினால் இராசி வீட்டைத்தொட்டுப்பார்த்து அதன் பலாபலனை வான்மீகர் திருவருளால் உண்மையனைத்தும் ஒழுங்காய் கவனித்துக் கொண்டு சுகானந்தமாய் ஜீவித்திருப்பீர்களென கோருகிறேன்.

இப்படிக்கு,

கவிராஜ கந்தசாமி பிள்ளை.



விளம்பரம்.

வான்மீகர் ஆரூடசாஸ்திரம் 150-பாடல் மூலமும் உறை	0 3 0
ஷை மூலம்	0 1 0
அகஸ்த்தியர் பஞ்சபச்சி சாஸ்திரம் மூலம் உறை	0 12 0
கமலமாமுனி அருளிச்செய்த அஸ்த ரேகை சாஸ்திரம்	1 0 0
சகாதேவ சாஸ்திரம்	0 4 0

டி. சாரதாபுத்தகசாலை,

நெ. 23, பாளையப்பன் தெருவு,

மின்ட் போஸ்டு, சென்னை.

உ

சுந்திரகணேஸர் துணை.

3908

வான்மீகர்

ஆருட சாஸ்திரம்-ஈரும்.

மூலமும்-உரையும்.

சுந்தரகணேஸர் துதி.

வெண்பா

சீராருந்தேவா சிவனாருட்சுதனே
பேராருஞ் ஜோதிஷத்தைப்பேசுதற்கு---நேராரும்
எந்தன்குருவாய் எனக்கருளுமெய்ஞ்ஞான
சுந்தரகணேஸர் துணை.

சித்தர்கள் ஸ்தோத்திரம்.

அறுசீரடி ஆசிரிய-விருத்தம்.

திருவளரு மெய்ஞ்ஞான கவகோடி சித்தர்களே
தெளிந்தஞான
பெருமைமிகும் வான்மீகாரூடத்திற் குறையும்
பொருத்தமாக
கருணையுறமுமதருளா லெழுதுகின்றேன் கவிராஜ
கந்தசாமி
குருவாகவந்தமர்ந்து ஜோதிஷத்தின் விபரமெண்முன்
கூறுவீரே.

உ

கடவுள் துணை.

வான்மீகர் ஆரூடசாஸ்திரம்-௱௫௰

மூலமும்-உரையும்.

இராசி விவரம்.

மீனமிதுனங் கன்னியுடன் விளங்குந் தனுசுங்கெற்பமாதம்
ஆனதுலாமகரஞ்ரெண்டு ஆ ந்துவாரமென்பார்கள்
கானமேவுஞ்சிங்கமுடன் கதித்தரிடபந்தேள்கும்பம்
வானோர்புகழும்வால்மீக மறவார்பத்திர வாக்கியமே.

மீனம் சவ கெற்பம்	மேஷம் சவ துவாரம்	ரிஷபம் சது வான்மீகம்	மிதுனம் ருவ கெற்பம்
கும்பம் சது வான்மீகம்	இராசி		கடகம் ருஉ துவாரம்
மகரம் ருவ துவாரம்	ஆரூட		சிங்கம் ரு வான்மீகம்
	சக்கிரம்.		
தனுசு ருஉ கெற்பம்	விருச்சிகம் ருவ வான்மீகம்	துலாம் ருவ துவாரம்	கன்னி ரு கெற்பம்

இ-ள். ஜோதிட கணிதவல்லோன் ஆசனத்திலமர்ந்து, ஆரூடஞ் சொல்வதற்காக நினைந்தால் மேற்குறிப்பித்தபடி சக்காத்தை ஓர் பலகையிலெழுதி வைத்துக்கொண்டு ஆரூடங்கேட்க வருபவர்களை ஓ

புஷ்பத்தால் மேற்குறிப்பித்த 12-வீடுகளில் ஒன்றை தொடச்சொல்லி அந்தந்த காரியங்களின் பலாபலன்கள் முடியும், முடியாது, பின்னால் பொறுத்து முடியுமென்று கூறப்படும், அதன் விபரம், பனிரெண்டு ராசிகளாகிய மீனம், மிதுனம், கன்னி, தனுசு இந்த நான்குராசிகளும், கெற்பமாகவும், துலாம், மகரம், கடகம் மேஷம் இந்த நான்கு ராசிகளும் துவாரமென்பதாகவும், சிங்கம், ரிஷபம், விருச்சிகம், கும்பம் இந்த நான்கு ராசிகளும், வான்மீகமெனவும் குறிப்பித்தெழுதி வைத்துக்கொண்டு பலன் சொல்லவேண்டும், எ-று. 1

இன்னகையிலிருப்பது.

கலிவிருத்தம்.

ஒருவன்கைதனிலொன்றையெடுத்துமே
இருகைமூடியுமிக்கையிலேதென்றால்
மருவுகெற்பந்துவாரம்வலக்கையே
பெருதுவான்மீகம்பேசுமிடக்கையே.

இ-ள். ஆருடங்கேட்க வந்தவன் தனதுகையில் ஓர் வஸ்துவை மறைத்து வைத்துக்கொண்டு எந்தக்கையி லிருக்கின்றது சொல்லென்று கேட்டால், இராசிவீடுகளிற் குறிப்பித்திருக்கும், கெற்பம், துவாரமாயிருந்தால் வலதுகையிலிருக்கிற தென்றும், வான்மீகமாயிருந்தால் இடதுகையி லிருக்கிறதென்றும், சொல்லவேண்டும், எ-று. 2

நிறம்.

என்னவர்னமிதென்றுவினவிடில்
மின்னுகெற்பம் வெளுப்பெனலாகுமே
மன்னவாசல்மஞ்சள்செகப்பென
கன்னவால்மீகம்கார்நிறம்பச்சையே.

இ-ள். ஆருடங்கேட்க வந்தவர் ஒன்றை நினைத்து, அவை என்னவர்ணமென்று கேட்டால், மேற்குறிப்பித்த இராசிவீடுகளில் ஒன்றைதொடச்சொல்லிப் பார்த்து, அந்த வீடு கெற்பமாயிருந்தால், வெள்ளை நிறமென்றும், துவாரமாயிருந்தால், மஞ்சள் நிறமென்றும், சிகப்பு நிறமென்றும், வால்மீகமாகில், கறுப்புநிறமென்றும், பச்சை நிறமென்றும் சொல்லுவாய், எ-று. 3

நோய்.

நோயையுன்னி யொருவன்வினவிடில்
நோயதில்லையாம் கெற்பமதாயிடில்
நோயுண்டாக்கும் துவாரமரணமாம்
நோயில்வால்மீகம் நொந்துபின ழக்குமே.

இ-ள். வியாதியைப்பற்றி ஆரூடங்கேட்க வந்தவரை மேற்குறிப்பித்த இராசி வீடுகளில் ஒன்றைதொடச்சொல்லி அந்த வீடு கெற்பமாயிருந்திடில் வியாதியில்லையென்றும் துவாரமாயிருந்திடில் மரணபயங்கரமான வியாதியென்றும் வான்மீகமா யிருந்திடில் வியாதியால் மெலிந்து பிழைத்துக்கொள்ளுவா ரென்றுஞ்சொல்லவேண்டும் என்றவாறு. 4

நட்டம்.

கெட்டதோர்பொருள் சொல்லெனக்கேட்பீரால்
நட்டமில்லை நலந்தரும் கெற்பமே
விட்டவாசலில் மீளவுங்காணலாம்
கட்டவால்மீகம் காண்பதுமில்லையே.

இ-ள். ஏதேனும் ஒருபொருளைப் போக்கடித்துவிட்டவர் அதை பலவிடத்திலுந் தேடிக்காணாமல் அலைந்து கைப்பொருள் நட்டமாயிற்றென ஆரூடஞ்சொல்லென்று கேட்டால், மேற்குறிப்பித்த இராசி வீடுகளில் ஒன்றை தொடச்சொல்லிப் பார்த்து, அந்தவீடு கெற்பமாயிருந்தால் அந்தப்பொருளுக்கு நஷ்டமில்லை நலமுடனே கிடைக்குமென்றும், துவாரமாயிருந்தால், அப்பால் எவ்விதமாயினும் பின்னால் கிடைக்குமென்றும், வான்மீகமாயிருந்தால் அந்த பொருளைக் காணமுடியாதென்றும் சொல்லவேண்டும், எ-று. 5

இன்னாரின்னாரெனப் பொருள்சொல்லென
துன்னுகெற்பம் துவாரமதாயிடில்
மின்னமிங்கிருந்தா ரெனப்பேசலாம்
பின்னவால்மீகம் பெண்ணென்றுரைத்திடே.

இ-ள். அந்தப்பொருள் எவரிடமிருக்கிறதென்று கேட்டால் துவாரமாயிருந்தால் முன் அந்த ஸ்தானத்தில் இருந்தவரெனவும் வான்மீகமாயிருந்தால் பெண் என்றும் சொல்லவேண்டும், எ-று 6

கையகத்தினிற் கெற்பமதாயிடில்
உய்யவாசலி லுள்ளவராமென
பொய்யிலாப்புரம் போனவர்கைவசம்
ஐயமில்லையறிந்துநீ செப்பிடே

இ-ள். அந்தப்பொருள் எங்கிருப்பவரிடமிருக்கிறதென்றுகேட்டால் கெற்பமாயிருந்தால் வாசலிலிருப்பவரென்றும் அவர் அப்பால் சென்று விட்டாரெனவும் சந்தேக மில்லாமற் சொல்வாய், எ-று. 7

அஞ்சன்மேனி யழகியவால்மீகம்
மஞ்சட்பொன்னிய மாகுந்துவாரமே
மிஞ்சுகெற்பம் வெளிர்நிறம்காட்டுமாம்
கொஞ்சமென்மொழி யாயிழைகூறிடாய்.

இ-ள். வான்மீகமானல் கறுத்த நிறமுடையவரென்றும், துவாரமானல், மஞ்சள் நிறமும் பொன்நிறசாயலுடையதென்றும், கெற்பமாயிருந்தால் வெள்ளை நிறமென்றும் சொல்வாய், எ-று. 8

பெண்ணோடாணைப் பிரித்துவினவிடில்
நண்ணுகெற்பந் துவாரமதாயிடில்
பெண்ணதாகும் பெரியதிரண்டுமேல்
மன்னில்வான்மீக மாணென்றுரைத்திடே.

இ-ள். ஆணோ! பெண்ணோவென்று ஆருடங்கேட்டால், துவாரமும் கெற்பமுமாயிருந்தால் பெண்ணென்றும் வான்மீகமாயிருந்தால் ஆணென்றுஞ் சொல்லுவாய், எ-று 9

குழந்தை ஆணோ பெண்ணோ.

பெண்ணோவாணோ பெறுமென்றுகேட்டிடில்
யெண்ணுவான்மீக மேந்திழையாகுமாம்

கண்ணுகெற்பம் துவாரமதாயிடில்
திண்ணமாணென்று செப்புந்தெளியவே.

இ-ள். பிறக்குங் குழந்தை பெண்ணோ! ஆணோவென்று ஆரூடங் கேட்க வந்தவரை மேற்குறிப்பித்த இராசிவீடுகளில் ஒன்றை தொட சொல்லி பார்த்தால் வான்மீகமாயிருந்தால் பெண் குழந்தையென்றும் கெற்பமாயிருந்தாலும் துவாரமாயிருந்தாலும், ஆண் குழந்தையென்று சொல்லுவாய், எ-று. 10

பகை.

பகையையஞ்சிப் பயந்துடன்கேட்பாரால்
உடையகெற்ப மொருக்காலும்வாராது
நடைபயின்றிடுங் நாளுந்துவாரமே
அடைவில்வந்திடு மானவான்மீகமே.

இ-ள். எதிரிகளின் சேனைக்குப் பயந்துவந்து ஆரூடங் கேட்பாராகில், மேற்குறிப்பித்த இராசிவீடுகளில் ஒன்றை தொடச்சொல்லிப் பார்த்து கெற்பமாயிருந்தால் எதிரிகள்சேனை எப்போதும் எதிர்த்து வராதெனவும், துவாரமாயிருந்திடில், எதிர்த்து வருவதற்கு தயாராயிருக்கிறதென்றும், வான்மீகமாயிருந்திடில் உடனே எதிர்த்துவருமென்றும் சொல்வாய், எ-று. 11

பொருவது.

அறுசீர்க்கழிநெடில்.

பொருவதுமுளதோவென்று பொருந்தவே நின்றுகேட்கில்
பெருகியகெற்பமாகில் பிரிந்துபோம் பின்புண்டாகும்
வுருகவேதுவாரமாகி லுறவதாண்டேகுமென்க
செரிவதுசெய்வான்மீகம் தேர்ந்துநீ தெளிந்துகூறே.

இ-ள். யுத்தம் நேரிடுமோவென்று ஆரூடங்கேட்க வந்தவர்களை மேற்குறிப்பித்த இராசிவீடுகளில் ஒன்றை தொடச் சொல்லிப்பார்

தால் இது கெற்பமாகில், அந்த சமயத்தில் எதிரிகள் பிரிந்திருந்து பிறகு ஒன்றாய்ச் சேர்ந்து எதிர்த்து வருவாரென்றும், துவாரமாயிருந்தால், பந்துத்வமான உறவினராய் சமாதானமாவாரென்றும், வான்மீகமாயிருந்தால், யுத்தம் நடக்குமென்று சொல்லுவாய்; எ-று. 12

கலிவிருத்தம்.

வெற்றியே யெவர்க்கென்றுவினவிடில்
பற்றிக்கெற்பம் பகைவரேவெல்லுவர்
சாற்றுதுவாரஞ் சரியெனக்காட்டிடு
மற்றுந்தன்படை வெற்றிவான்மீகமே.

இ-ள். தனது சண்டையில் ஜெயம் எவர்களுக் காகுமென்று ஆரூடங் கேட்கவந்தவர்களை மேற் குறிப்பித்திருக்கும் இராசி வீடுகளில் ஒன்றை தொடச்சொல்லிப் பார்த்தால், அது கெற்பமாயிருந்தால் பகைவரே வெல்லுவா ரென்றும், துவாரமாயிருந்தால், சரிசமானமாகுமென்றும், வான்மீகமாயிருந்தால், தமது சேனையே எதிரிகளை ஜெயிப்பார்களென்றும் சொல்லுவாய், எ-று. 13

மழை.

அறுசீர்க்கழிநெடில்.

மழையதுவேண்டித்தானே மானிடர்கேட்பாராகில்
மழையதுகெற்பந்தன்னில் மண்ணின்மேற்பெய்வதில்லை
மழையதுதுவாரமாகில் மண்ணிலேமிகுதியாகும்
மழையதுவான்மீகந்தான் யாசறப்பின்னுண்டாமே.

இ-ள், மழை பொழியுமாவென்று ஆரூடங் கேட்கவந்தவரை மேற்குறிப்பித்த இராசிவீடுகளில் ஒன்றை தொடச் சொல்லிப் பார்த்தால், இது கெற்பமானால் பூமியில் மழை பொழியாதெனவும் அது துவாரமாயிருந்தால் பூமியில் விசேஷமாய் மழை பொழியுமெனவும், அது வான்மீகமாயிருந்தால் யாதொரு குறைவுமில்லை பின்னல் நல்ல மழைபொழியு மெனவும் சொல்லுவாய், எ-று. 14

கீழ்நீர்.

கலிவிருத்தம்.

கீழ்நீர்காண்பெனக் கேட்டதுரைத்திடில்
கீழ்நீர்காணுமே கெற்பமதாயிடில்
கீழ்நீர்காணும் கெடுகரையாகிடில்
வாழ்நீர் கெங்கையாம் வான்மீகமோதிடே

இ-ள். பூமியில் ஜலபபெருக்கு ஓடுமாவென்று ஆரூடங்கேட்டால், மேற்குறிப்பித்திருக்கும் இராசிவீடுகளில் ஒன்றை தொடச்சொல்லிப் பார்த்தால், அது கெற்பமாயிருந்தால், பூமியில் ஜலப்பெருக்கு ஓடுமென்றும் துவாரமாயிருந்தால் ஜலம் பெருக்காகாதெனவும் வான்மீகமாயிருந்தால் கங்காநதியைப்போல ஜலப் பெருக்கோடுமென்றும் சொல்வாய், எ-று. 15

ஆற்றுப்பெருக்கு.

ஆற்றுநீர்வரவுதன்னை அங்கவர்கேட்பாராகில்
ஆற்றுநீர்வரவுமில்லை யானதோர்கெற்பமாகில்
வேற்றுநீர் சற்றுவந்து விரைவுடன்வற்றும்வாசல்
காற்றுவான்மீகந்தானுங் கடும்பெருக்காகுமேலே.

இ-ள். ஆற்றின் ஜலப்பெருக்கு எவ்விதமாகுமென்று ஆரூடங்கேட்டால், மேற்குறிப்பித்த இராசி வீடுகளில் ஒன்றை தொடச்சொல்லிப் பார்த்து, அது கெற்பமாயிருந்தால் ஆற்றில் ஜலப்பெருக்கு இல்லையென்றும், துவாரமாயிருந்தால் வேற்று ஜலம் ஆற்றில் வந்து விழுந்து சீக்கிரத்தில் வற்றிப்போகுமென்றும், அது வான்மீகமாயிருந்தால் ஆற்றில் ஜலப்பெருக்கு அதிகமாகுமென்றும் சொல்லுவாய், எ-று. 16

பயம் நடுக்கம்,

பயமொடுகலகந்தன்னைப் பயந்தவர்கேட்பாராகில்
நயமுளகெற்பந்தன்னில் நடுக்கமொன்றில்லையாகும்

சயமுடை துவாரந்தன்னில் சற்றுமேவந்துபோகும்
இயருடை வான்மீகந்தான் சூழ்ந்துமேபிணியுண்டாமே.

இ-ள். ஏதேனும் ஓர் கலகத்திற் சிக்கிக்கொண்டு பயப்படுகின்ற வர்கள் ஆரூடங் கேட்க வந்தால் மேற்குறிப்பித்த இராசிவீடுகளில் ஒன்றை தொடச் சொல்லிப் பார்த்தால், அது கெற்பமா யிருந்தால் யாதொரு பயமும் தனக்கில்லையென்றும் துவாரமா யிருந்தால், கொஞ் சம் பயங்கரமுண்டாகி பிறகு விலகுமென்றும், அது வான்மீகமா யிருந்தால் பயங்கர மதிகரித்து அதனாலே வியாதியஸ்தராவார்களென் றும் சொல்லுவாய், எ-று. 17

சிறைதவிர்ந்திடுமோவென்று சேர்ந்துமே கேட்பாராகில்
அறைபடுங் கெற்பமாகி லகப்படும் விடுதியுண்டு
நிறையது துவாரமாகில் நிலைசிறை நீக்கிவைக்கும்
நறைபடுவான்மீகந்தான் நாட்செலுமென்றுகூறே.

இ-ள். சிறைச்சாலையிலிருப்பவர் விடுதலையாவதைக் குறித்து, ஆரூடங் கேட்கவந்தவர்களை மேற்குறிப்பித்திருக்கும் இராசி வீடுக ளில் ஒன்றை தொடச்சொல்லிப் பார்த்தால், அது கெற்பமா யிருந் தால் நல்ல ஸ்தானமாகிய விடுதியிலிருப்பாரென்றும், அது துவார மாகில் சிறைச்சாலையிலிருந்து உடனே விடுதலை யாவாரென்றும் அதுவான்மீக மாகில், சிறைச்சாலையிலிருந்து விடுதலை யாவதற்கு வெகுநாட் செல்லுமென்றும் சொல்லுவாய், எ-று. 18

போனவர் வரவு.

போனவர் வரவுதன்னைப் பொற்கொடிவினவினாலே
ஆனதோர் கெற்பமாகி லழகுடனிருப்பாரங்கே
தானது துவாரமாகில் தடைபடும்நாளே செல்லும்
வானவான்மீகமாகில் வந்தனரென்று கூறே.

இ-ள். வெளிதேசம் போனவர் வருகையைக்குறித்து ஆரூடங் கேட்க வந்தவர்களை மேற்குறிப்பித்த ராசிவீடுகளில் ஒன்றைதொடச்

சொல்லிப் பார்த்தால் அது கெற்பமாயிருந்தால் சென்ற இடத்தில் க்ஷேமமா யிருப்பாரென்றும், அது துவாரமாயிருந்தால் போனவர் வருவதற்கு வெகுநாள் செல்லுமென்றும், அது வான்மீகமா யிருந்தால் போனவர் வந்துவிட்டாரென்று சொல்லுவாய், எ-று. 19

குடிபுக.

கலிவிருத்தம்.

வீடுகட்டிக் குடிபுகவேண்டினல்
நாடுங்கெற்பம் நலமெய்துமென்னலாம்
ஓடுந்துவார மொழுங்கறக்கேடுறும்
தேடும்வான்மீகந் திருமால்மணேயெனே

இ-ள். புதிதாய் கட்டியவீட்டில் குடித்தனஞ் செய்ய சுகாசுகபலனெவ்விதமாகுமென்று வந்து கேட்பவர்களை மேற்குறிப்பித்த இராசிவீடுகளில் ஒன்றை தொடச்சொல்லிப் பார்த்து அது கெற்பமாயிருந்தால் சுகமாயிருக்கலாமென்றும், அது துவாரமாயிருந்தால் பலவிதமாகக் கஷ்டநஷ்டத்தை விளைத்துக் கெடுதிசெய்யுமென்றும், அது வான்மீகமாயிருந்தால் மஹாலக்ஷ்மி கிருபையால் தனந்தான்ய சம்பத்துடனே திருமாலருளால் பெருமையாய் வாழ்ந்திருப்பார்களென்றும் சொல்லுவாய், எ-று. 20

கலியாணம்.

அறுசீர்க்கழிநெடில்.

மணமதுசெய்யவேண்டி வந்தவர்கேட்பாராகில்
குணமது கெற்பந்தன்னில் கொண்டதுநல்லதாகும்
மணவியவா சலாகில் மணமதுமத்திபந்தான்
கணமதுவான்மீகந்தான் கஷ்டமாய்நின்றபோமே.

இ-ள். கலியாணஞ் செய்வதற்காக ஆரூடங்கேட்க வந்தவர்களை மேற்குறிப்பித்த இராசிவீடுகளில் ஒன்றை தொடச்சொல்லிப்பார்த்தால் அது கெற்பமாகில் நன்மையென்றும், அது துவாரமாகில் மத்

திபமென்றும் அது வான்மீகமானல், பலவித கலக கஷ்டத்தினல் அந்த சமயத்தில் ஆகாதுயென்றம் சொல்லுவாய், எ-று. 21

பிள்ளை பிறக்க.

கலிவிருத்தம்

பிள்ளைவேண்டியே பேதையுரைத்திடில்
கொள்ளைகெற்பம் குமாரனுதித்திடும்
முள்ளதுவார முதித்துமரணமாம்
கள்ளவான்மீகம் காட்டுமலடியே.

இ-ள். தனக்குக் குழந்தை பிறக்குமாவென்று ஆருடங்கேட்கும் பெணகளை மேற்குறிப்பித்த இராசி வீடுகளில் ஒன்றைதொடச் சொல்லிப்பார்த்தால் அது கெற்பமாயிருந்தால் பிள்ளை பிறக்குமென்றும், அது துவாரமாயிருந்தால் பிறந்து மரணமாகுமென்றும், அது வான்மீகமா யிருந்தால் பிள்ளைப்பெருத மலடியென்றுஞ் சொல்லுவாய் எ-று. 22

பொருத்தம்

கொண்டதோர்பொருத்தந்தன்னை குணமுடனறியவேண்டில்
கண்டமத்திபமதாகுங் கடுகியகெற்பமாகில்
பெண்டிருங்கொழுனர்தம்மில் பேதமாந்துவாரமாகில்
பண்டுவான்மீகமாகில் பசுங்கொடிவிரதையாமே.

இ-ள் கலியாணப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் வாழ்வுபொருத்தம் எவ்விதமா யிருக்குமென்று ஆருடங்கேட்கவந்தவர்களை மேற்குறிப்பித்த இராசிவீடுகளின் ஒன்றை தொடச்சொல்லிப்பார்த்தால் அது கெற்பமாயிருந்தால் மத்திய பலனுயிருக்குமென்றும், அது துவாரமாகில் புருஷனுக்கும் மனையாளுக்கும் குணபேதமாய் சச்சரவுசெய்துக்கொண் டிருப்பாரென்றும், அது வான்மீகமாகில், புருஷனும் மனைவியும் ஒருவர்மீதொருவர் ஆசாபாச நேசவிஸ்வாசமா யிருப்பதுடன் மனையாள் பதிவிரதையாகும் புருஷவிஸ்வாசியாகவு மிருப்பாளென்றுஞ் சொல்லுவாய் எ-று. 23

நினைத்தகாரியம் முடித்த.

நினைத்ததுமுடிக்கவென்று நின்றவர்கேட்பாராகில்
நினைத்ததுமுடிப்பதில்லை நிரைகெற்பமுதயமாகில்
நினைத்தது துவாரமாகி னிலைசிலநாளிற்கூடும்
நினைத்ததுவான்மீகந்தான் நிச்சயப்கூடுமென்றே.

இ-ள். ஒரு காரியத்தைக்குறித்து அந்தகாரியம் ஆகுமா? ஆகாதா? என்று ஆரூடங்கேட்க வந்தவர்களை மேற்குறிப்பித்த இராசிவீடுகளில் ஒன்றை தொடச்சொல்லிப் பார்த்தால் அதுகெற்பமாயிருந்தால் நினைத்த காரியம் முடியாதென்றும், அது துவாரமானால் நீ நினைத்த காரியம் சிலநாள் பொறுத்து முடியுமென்றும், அதுவான்மீகமாயிருந்தால் நீ நினைத்தகாரியம் உடனே முடியுமென்றும் சொல்லுவாய், எ-று. 24

கன்றுகாலி.

கர்ப்பனகன்றுகாலி கணக்குடன்கேட்பாராகில்
வர்பமாம்கெற்பந்தன்னி லாங்கவை யொன்றுமாவா
நிற்பனதுவாரமாகி நிரைபடவருமெமேறு து
வற்பெயர்வால்மீகந்தான் வருவது மாதமொன்றே.

இ-ள். பசுவும் கன்றும் கிடைக்குமா வென்று ஆரூடங் கேட்க வந்தவர்களை மேற் குறிப்பித்த இராசிவீடுகளில் ஒன்றை தொடச்சொல்லிப்பார்த்தால் அது கெற்பமா யிருந்தால், அந்த சமயத்தில் கிடைக்காதென்றும், அது துவாரமாயிருந்தால் உடனே கிடைக்குமென்றும், அது வான்மீகமா யிருந்தால், ஒரு மாதத்தில் கிடைக்குமென்றும் சொல்வாய், எ-று. 25

பிணி.

பிணியொடுவினவிநின்று பேணியேகேட்பாராகில்
அணிதருங்கெற்பந்தன்னி லன்றுடன்தீருமென்க

நினைத்தகாரியம் முடிக்க.

நினைத்ததுமுடிக்கவென்று நின்றவர்கேட்பாராகில்
நினைத்ததுமுடிப்பதில்லை நிரைகெற்பமுதயமாகில்
நினைத்தது துவாரமாகி னிலைசிலநாளிற்கூடும்
நினைத்ததுவான்மீகந்தான் நிச்சயங்கூடுமென்றே.

இ-ள். ஒரு காரியத்தைக்குறித்து அந்தகாரியம் ஆகுமா? ஆகாதா? என்று ஆரூடங்கேட்க வந்தவர்களை மேற்குறிப்பித்த இராசிவீடுகளில் ஒன்றை தொடச்சொல்லிப் பார்த்தால் அதுகெற்பமாயிருந்தால் நினைத்த காரியம் முடியாதென்றும், அது துவாரமானால் நீ நினைத்த காரியம் சிலநாள் பொறுத்து முடியுமென்றும், அதுவான்மீகமாயிருந்தால் நீ நினைத்தகாரியம் உடனே முடியுமென்றும் சொல்லுவாய், எ-று. 24

கன்றுகாலி.

கற்பனகன்றுகாலி கணக்குடன்கேட்பாராகில்
வற்பமாய்கெற்பந்தன்னி லாங்கவை யொன்றுமாவா
நிற்பனதுவாரமாகி நிரைபடவருமென்றோது
வற்பெயர்வால்மீகந்தான் வருவது மாதமொன்றே.

இ-ள். பசுவும் கன்றும் கிடைக்குமா வென்று ஆரூடங் கேட்க வந்தவர்களை மேற் குறிப்பித்த இராசிவீடுகளில் ஒன்றை தொடச் சொல்லிப்பார்த்தால் அது கெற்பமா யிருந்தால், அந்த சமயத்தில் கிடைக்காதென்றும், அது துவாரமாயிருந்தால் உடனே கிடைக்குமென்றும், அது வான்மீகமா யிருந்தால், ஒரு மாதத்தில் கிடைக்குமென்றும் சொல்வாய், எ-று. 25

பிணி.

பிணியொடுவினவநின்று பேணியேகேட்பாராகில்
அணிதருங்கெற்பந்தன்னி லன்றுடன்தீருமென்க
மணிவிரல்தெரிவையாகி லனேகநாள் சென்றுதீரும்
அணியவான்மீகமாகி லயன்விதிபொல்லாதாமே.

இ-ள். வியாதியஸ்தர்கள் தமது சரீரத்திலிருக்கின்ற வியாதி தீருமாவென்று ஆரூடங்கேட்டால் அவர்களை மேற்குறிப்பித்த இராசிவீடுகளில் ஒன்றை தொடச்சொல்லிப் பார்த்தால் அது கெற்பமா

யிருந்தால் அப்போதே அந்தவியாதி நீங்கி சவுக்கிய மாகுமென்றும், அது துவாரமாகில், வெகுநாள் பொறுத்து வியாதி நீங்கி சரீரசவுக்கியமாகுமென்றும், அது வான்மீகமா யிருந்தால், பிரம்மா விதித்த வாழ்நாள் வரையிலும் கஷ்டமென்றும் சொல்லுவாய், எ-று. 26

யாத்திரை.

யாத்திரைபோவதுண்டோ வென்றுபின்னுரைத்தாராகில்
மாத்திரைகெற்பந்தன்னில் மற்றவர்போகமாட்டார்
பூத்தநல்துவாரமானால் பொற்கனமாகுமென்று
மேத்தவவான்மீகந்தானு மிசையுடன்போவரன்றே.

இ-ள். பிரயாணமாய் போவதற்காகுமாவென்று ஆரூடங்கேட்க வந்தவரை மேற்குறிப்பித்த இராசிவீடுகளில் ஒன்றை தொடச்சொல்லிப் பார்த்தால் அது கெற்பமாயிருந்தால் அச்சமயத்தில் பிரயாணமாய்ப் போகமுடியாதென்றும், அது, துவாரமானால் கையிற்பொருள் சேர்ந்தபின் பேரவாரென்றும், அது வான்மீகமானால், உடனே பிரயாணமாய்ப் போவாரெனவும் சொல்லுவாய், எ-று. 27

வழியதுபோகில்கெற்பம் வலியதோரிடக்கூறுகுஞ்
சுழிதருந்துவாரமாகில் துணிந்தனகருமமாக
அழிவிலாச்செயங்கொண்டேபின் அணுகிடும்வான்மீகந்தான்
விழிதுயின்மாதேமேலோர் விளம்பினர்மூன்றுகூறே.

இ-ள். யாத்திரைவாசிகளைக் குறித்து ஆரூடங்கேட்க வந்தவர்களை மேற்குறிப்பித்த இராசிவீடுகளில் ஒன்றை தொடச்சொல்லிப் பார்த்தால், அது கெற்பமாயிருந்தால் பலவித கஷ்டமாகுமென்றும், அது துவாரமாயிருந்தால் துணிந்து மனதைரியமாய்ப் பிரயாணஞ் செய்யலாமென்றும், அது வான்மீகமானால் யாதொரு கஷ்டநஷ்டமில்லாமலும் மனபயங்கரமில்லாமலும் யாத்திரைசெய்து வருவதற்காகுமென்றும் சொல்லுவாய், எ-று. 28

சேவகம்.

சேவகநாட்டாலாகுஞ் சிறப்பொடுகெற்பந்தன்னில்
மேவவர்வழியேபோகில் விடிவதேயில்லைகண்டாய்
யாவவர்துவாரமாகி லதுசிலநாளேயாகும்
மேவவர்வான்மீகந்தான் மேன்மையாமென்றுகூறே.

இ-ள். உத்தியோகத்திற்குப் போவதற்காக ஆரூடங்கேட்க வந்தவர்களை மேற்குறிப்பித்த இராசி வீடுகளில் ஒன்றைத்தொடச்சொல்லிப் பார்த்தால், அது கெற்பமாகில் போகும் போதே உத்தியோகங் கிடைக்காதென்றும், அது துவாரமானால் சில நாள் பொறுத்து உத்தியோகங் கிடைக்குமென்றும், அது வான்மீகமானால் மிகவும் உத்தமமென்றும் நாடிய உத்தியோகம் உடனேகிடைத்து அதனால் நன்மையுண்டாகுமென்றும் சொல்லுவாய், எ-று. 29

களவு.

வேறு.

கள்ளர்தம்மை வரவுகருதினன்
மெள்ளவந்தனர் மேவியகெற்பமாம்
நல்லவாசத்தி லுள்ளவராமென
மெள்ளவான்மீக மேவுவதில்லையே.

இ-ள். திருடர் பிரவேசிப்பாரோவென ஆரூடங்கேட்க வந்தவர்களை மேற்குறிப்பித்த இராசிவீடுகளில் ஒன்றைத் தொடச்சொல்லிப் பார்த்தால் அது செற்பமாயிருந்தால் திருடர் பிரவேசித்தாரென்றும் அது துவாரமானால் அவர்களைச் சேர்ந்தவர்களென்றும் அதுவான்மீகமானால், திருடர் பிரவேசிப்பதில்லை யென்றும் சொல்லுவாய், எ-று

பொருள்பெற

ஒருவனற்பொரு ளுன்னிவுரையென
தருதலில்லையாம் கெற்பமுதித்திடில்
மருவவந்திடுவான் பொருள் துவாரமே
பொருளடங்கல் பொருதுவான்மீகமே.

இ-ள். ஒருவரிடத்திலிருக்கும் பொருள்வாங்கி வருவதற்காக நினைத்துக்கொண்டுவந்து ஆரூடங் கேட்பவர்களை மேற்குறிப்பித்த ராசி வீடுகளில் ஒன்றை தொடச் சொல்லிப் பார்த்தால் அது கெற்பமாயிருந்தால், கொடுக்கமாட்டாரென்றும், அது துவாரமானால் கொஞ்சங் கிடைக்குமென்றும், அதுவான்மீகமானால் எல்லாப் பொருளும் குறையாமல் கொடுப்பார்களென்றும் சொல்லுவாய், எ-று. 31

நினைத்தபொருள்

பரவைவஸ்து பரிவுடன்கெற்பமாம்
திரவைகல்முத லாகும்துவாரமே

பறவைகாய்முத லாகுங்கிழங்குடன்
நிரவையுன்னி யுரைப்பர்வான்மீகமே.

இ-ள். ஒருவர் தமது மனதில் நினைத்தபொருளைச் சொல்வா யென்று கேட்கஆரூடங் குறிப்பித்த இராசிவீடுகளில் ஒன்றை தொடச் சொல்லிப்பார்த்தால் அது கெற்பமாயிருந்தால் பறவையைச் சார்ந்த வஸ்துக்களென்றும், அது துவாரமாயிருந்தால் கல்லைச்சார்ந்த வஸ் துக்களென்றும், அதுவான்மீகமானால், காய் கிழங்கு முதலான வஸ் துக்களென்றுஞ் சொல்லுவாய், எ-று 32

வேசியில்புக.

வேசியில்புகவேண்டி வினவிடில்
காசில்சண்டை கலக்கமும்கெற்பமாம்
நாசவான்மீகம் நற்பொருள்போக்குமாம்
பேசலாகும் பெருகுந்துவாரமே.

இ-ள் தாசிவீட்டுக்குப் போவதற்காக ஆரூடங்கேட்க வந்தவர் களை மேற்குறிப்பித்த இராசிவீடுகளில் ஒன்றை தொடச்சொல்லி பார்த்தால் அது கெற்பமாயிருந்தால், பணத்தின் விஷயமாய்க் கலக மும் சண்டையு மாகுமென்றும், அதுவான்மீகமானால் கைப்பொருள் பலவிதமாய்ச் செலவாகுமென்றும், அது துவாரமானால், மிகவும் நன் மையென்றும் மனமகிழ்ச்சி அதிகரிக்குமென்றும் சொல்லுவாய், எ-று.

பணம் வேண்டல்

பணத்தைவேண்டி மருவிவினவிடில்
கணத்தில்கூடும் கெற்பமுதித்திடும்
பினத்தின்காலம் பிாளயவான்மீகம்
இனத்தில்நற்றடை யெய்திப்பின் கூடுமாம்.

இ-ள். பணம்வாங்கி வருவதற்காக செல்பவர் வந்து ஆரூடம் கேட்டால் மேற்குறிப்பித்த இராசிவீடுகளில் ஒன்றை தொடச் சொல்லிப் பார்த்தால், அது கெற்பமாயிருந்தால் உடனே கிடைக்கு மென்றும், அது வான்மீகமாயிருந்தால் கிடைப்பது கஷ்டமென்றும் அது துவாரமாயிருந்தால், அந்த சமயத்தில் கிடைக்கத் தவறினு லும் சிலநாள் பொருத்தாயினும் கிடைக்குமென்று சொல்லுவாய் என்றவாறு. 3

குணம்

நற்குணக்குறியாமோ நவிலெண
சொற்டனத்திலு மில்லையாம்துவாரமே

பற்பலகுணம்பார்க்கப் பார்கெற்பமாம்
துற்குணமிலே தோன்றும்வான்மீகமே.

இ-ள். ஒருவர் குணமெப்படியென்று வந்து ஆரூடங் கேட்பவர்களை மேற்குறிப்பித்த இராசி வீடுகளில் ஒன்றை தொடச்சொலிப் பார்த்தால்அது துவாரமானால்துர்க்குண முடையோரென்றும்,கெற்பமானால் நற்குணமுந் துர்க்குணமும் பற்பலவிதமாய்சமயத்திற் கிசைந்தவிதமாய் பொருந்தி யிருப்பாரென்றும், வான்மீகமாயிருந்தால், துர்க்குணமில்லாமல் நற்குணமாகவே யிருப்பாரென்றும் சொல்லுவாய், என்றவாறு. 35

நாலுகால் நடைநட்டம்.

நாலுகால்நடை நட்டமதாயிடில்
ஓடிவந்திடுமுன்னது கெற்பமே
தேடிகாணுதுதேருந்துவாரமே
வாடி சின்னாள்வருகும் வான்மீகமே.

இ-ள். ஆடு, மாடு, கழுதை, குதிரை, நாய், பூனை முதலாகிய நாற்கால் மிருகங்களைக்காணாமல் தேடியலைந்து பார்த்துக்கொண்டு வருபவர்கள், வந்து, ஆரூடங்கேட்டால், மேற்குறிப்பித்த இராசிவீடுகளில் ஒன்றை தொடச்சொல்லிப் பார்த்தால், அது கெற்பமாயிருந்தால் தானாக ஓடி வந்திடுமென்றும் அது துவாரமாயிருந்தால் எவ்விதமாய்த்தேடி யலைந்தாலும் கிடைக்கரதென்றும், அது வான்மீகமாயிருந்தால், அந்த நாற்கால் ஜீவன்கள் எங்கிருந்தாலும் சிலநாள் பொருத்தாகிலும், அகப்படுமென்று சொல்லுவாய், எ-று. 36

வட்டி முதலிய-

பொன்னைகேட்கப் பொருந்திவினவிடில்
பொன்னையீவர் புகுந்திடும்கெற்பமே
பொன்னதில்லையாம் போனவர்வான்மீகம்
பொன்னின்வட்டிப் பொருக்கும்துவாரமே.

இ-ள். பொன்னாபரணங்களை வாங்கப்போகின்றவர்கள் வந்து ஆரூடங் கேட்டால் மேற்குறிப்பித்த இராசிவீடுகளில் ஒன்றை தொடச்சொல்லிப்பார்த்தால் அது கெற்பமாயிருந்தால் போனவுடனே கிடைக்குமென்றும், வான்மீகமாயிருந்தால் கிடைக்காதென்றும்அது துவாரமாயிருந்தால் வட்டிசெலுத்திய பின் கிடைக்குமென்றும் சொல்லுவாய், எ-று. 37

மண்.

மண்ணைவேண்டி யொருவன்வினவிடில்
மண்ணதில்லையாம் மாப்பெரும்வான்மீகம்

திண்ணமாகும் துவாரம் திருமணை தந்திடும்
எண்ணம்கூடா தழிந்திடும்கெற்பமே.

இ-ள். ஒருவன் மண்ணைக்குறித்து ஆரூடங்கேட்டால் மேற் குறிப்பித்த இராசிவீடுகளில் ஒன்றை தொடச்சொல்லி பார்த்தால், அது வான்மீகமாயிருந்தால் கிடைக்காதென்றும், அது துவாரமா யிருந்தால் கிடைக்குமென்றும் கெற்பமாயிருந்தால் கஷ்ட நஷ்டமாகு மென்று சொல்லுவாய், எ-று.

மரக்கலம் செலவந்துவினவிடில்
உறக்கமாகு முயர்கெற்பமுற்றிடில்
நிறக்கச்செல்லும் நிறைபாய்துவாரமே
சிறக்கமாய்மரம் சீர்கெட்டுப்போகுமே.

இ-ள் கப்பல் போவதற்காக ஆரூடங் கேட்கவந்தவர்களை மேற் குறிப்பித்த இராசிவீடுகளில் ஒன்றை தொடச்சொல்லிப் பார்த்தால் அது கெற்பமா யிருந்தால் தாமதித்திருக்கு மென்றும், அது துவார மானால் செழிப்புடன் செல்லுமென்றும், அது வான்மீகமானால் நட த்துதற்கு முடியாதென்றும் சொல்லுவாய், எ-று. 39

வியாச்சியம்.

இன்றுவியாச்சியம் எவர்செயிப்பாரென
நன்று துவாரம் நவின்றவர்க்காகுமாம்
சென்றுவான்மீகம் செயிப்பரெதிரியே
நின்றுவியாச்சியம் நிறைகெற்பமேசமம்.

இ-ள் இன்றைய தினத்தின் வியாஜ்ஜியத்தில் எவர்கள் ஜெயிப் பார்களென வந்து கேட்பவர்களை மேற் குறிப்பித்த இராசிவீடுகளில் ஒன்றை தொடச்சொல்லிப் பார்த்தால், அது துவாரமானால் தாங் களே ஜெயிப்பாரென்றும், அது வான்மீகமானால், எதிரிகள் ஜெயிப்பா ரென்றும், அது கெற்பமாயிருந்தால், வாதி பிரதிகளாகிய இருவர் பக்கமும் சமமாக நின்றுவிடுமென்றும் சொல்லுவாய், எ-று. 40

---

0 மண்-பூமி, கழுணி-மனை.

என்சீர் விருத்தம்.

ஆசிரியா ஆரூடசக்கரத்தில்
ஆமேடமிதுனநண்டு சிங்கங்கன்னி
பேசுதுலாதேள்வில் மகரகும்பமீனம்
பெருமையுறும் ராசியினிலிருபத்தேழு
மாசிலாநக்ஷத்ர மடைந்திருக்கும்
மார்க்கமும்பாதாபேத விபரந்தன்னை
வீசுபுகழென்குருவே கந்தஸ்வாமி
விபரமாயெந்தனுக்கு போதிப்பீரே

3908

இ-ள். சுவாமி ஆரூட சக்கரத்தில் அமைந்திருக்கும் பனிரெண்டு இராசிகளாகிய மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனமென்னும் ஸ்தானத்தில் அஸ்வனி, பரணி, கிர்த்திகை, ரோகணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம், பூரம் உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி யென்னும் இருபத்தேழு நக்ஷத்திரங்களமைந் திருக்கும் பாதமேதத்தின் விபரமும் அடியேன் கவனிக்கும் மார்க்கத்தை விபரமாய் போதிப்பீர் எ-று. 41

போதிப்பேன்வான்மீகர் ஆரூடத்தில்
பொதுவாகமனிதரெல்லாம் வாழ்வதற்கு
நீதியாய்ச்சொல்லிவிட்டார் யானுனக்கு
நிகழ்த்துவேன் சித்தர்களின்சகாயத்தாலே
ஆதிநூலாகுஞ் ஜோதிஷசாஸ்திரத்தை
ஆராய்ந்துயானுனக்கு விபரமாக
ஓதுவேனுன்மனதில் கவனித்தோர்ந்தால்
ஒளிவிளக்குஜோதியைப்போல் தோற்றும்பாரே.

இ-ள். குருவிஸ்வாசமுடைய சிஷ்யனே மகத்வம் பொருந்திய வான்மீகமுனிவர் சகல மனிதர்கட்கும் பொதுவாக அவரவர் கவனித்துத் தமது வாழ்நாளின் கால நிலையைக்கவனிப்பதற்காக ஆரூட சக்கரத்தில் இருபத்தேழு நக்ஷத்திரங்களமைந்திருக்கும் சரம், ஸ்திரம், உபயமென்னும் பனிரெண்டு ராசிகளிலும், வான்மீயம், துவாரம் கற்பமெனும் கணித ஆரூடத்தை எழுதிவைத்துக் கொண்டு நாடிவந்தவருக்குப் பலன்சொன்னல் சரியாயிருக்கும் எ-று. 42

மீனம்	மேஷம்	ரிஷபம்	மிதுனம்
பூரட்டாதி-$\frac{1}{4}$ உத்திரட்டாதி-1 ரேவதி-1 ஆக-$2\frac{1}{4}$ மீனராசி உபயம் நாழிகை-$4\frac{1}{4}$ கெர்ப்பம்	அஸ்வனி-1 பரணி-1 கிர்த்திகை-$\frac{1}{4}$ ஆக-$2\frac{1}{4}$ மேஷராசி சரம் நாழிகை-$4\frac{1}{4}$ துவாரம்	கிர்த்திகை-$\frac{3}{4}$ ரோகணி-1 மிருகசீரிடம்-$\frac{1}{2}$ ஆக-$2\frac{1}{4}$ ரிஷபராசி ஸ்திரம் நாழிகை-$4\frac{3}{4}$ வான்மீகம்	மிருகசீரிடம்-$\frac{1}{2}$ திருவாதிரை-1 புனர் பூசம்-$\frac{3}{4}$ ஆக-$2\frac{1}{4}$ மிதுனராசி உபயம் நாழிகை-$5\frac{1}{4}$ கெற்பம்
கும்பம் அவிட்டம்-$\frac{1}{2}$ சதயம்-1 பூரட்டாதி-$\frac{3}{4}$ ஆக-$2\frac{1}{4}$ கும்பராசி ஸ்திரம் நாழிகை-$4\frac{3}{4}$ வான்மீகம்	இருபத்தேழு நக்ஷத்திரங்களிலும் சந்திரன் நிற்கும் இராசியை கணக்கெடுத்து மேற்குறிப்பித்த ஸ்தானங்களை தொடச் சொல்ல அவரவர் பலன் சொல்லவும்.		கடகம் புனர்பூசம்-$\frac{1}{4}$ பூசம்-1 ஆயில்யம்-1 ஆக-$2\frac{1}{4}$ கடகராசி சரம் நாழிகை-$5\frac{1}{2}$ துவாரம்
மகரம் உத்திராடம்-$\frac{3}{4}$ திருவோணம்-1 அவிட்டம்-$\frac{1}{2}$ ஆக-$2\frac{1}{4}$ மகரராசி சரம் நாழிகை-$5\frac{1}{4}$ துவாரம்			சிம்மம் மகம்-1 பூரம்-1 உத்திரம்-$\frac{1}{4}$ ஆக-$2\frac{1}{4}$ சிம்மராசி ஸ்திரம் நாழிகை-$5\frac{1}{4}$ வான்மீகம்
தனுசு மூலம்-1 பூராடம்-1 உத்திராடம்-$\frac{1}{4}$ ஆக-$2\frac{1}{4}$ தனுசுராசி உபயம் நாழிகை-$5\frac{1}{2}$ கெற்பம்	விருச்சிகம் விசாகம்-$\frac{1}{4}$ அனுஷம்-1 கேட்டை-1 ஆக-$2\frac{1}{4}$ விருச்சிகராசி ஸ்திரம் நாழிகை-$5\frac{1}{4}$ வான்மீகம்	துலாம் சித்திரை-$\frac{1}{2}$ சுவாதி-1 விசாகம்-$\frac{3}{4}$ ஆக-$2\frac{1}{4}$ துலாராசி சரம் நாழிகை-5 துவாரம்	கன்னி உத்திரம்-$\frac{3}{4}$ அஸ்தம்-1 சித்திரை-$\frac{1}{2}$ ஆக-$2\frac{1}{4}$ கன்னியாராசி உபயம் நாழிகை-5 கெற்பம்

இராசி நிலைகளாவன.

விருத்தம்.

தனுசொடுமீனங்கன்னி சாற்றியமிதுனங்கற்பம்
மனுதுலாங்கடகமேடம் மகரமேதுவாரமாகும்
இனியதேற்கும்பஞ்சிங்கம் இடபம்வாமியமதாகும்
கனியதேன்குழலினாளே கண்டுகொள்குறிப்பாய்தானே.

மீனம் உபயம் கெற்பம்	மேஷம் சரம் துவாரம்	ரிபஷம் ஸ்திரம் வான் மீகம்	மிதுனம் உபயம் கெற்பம்
கும்பம் ஸ்திரம் வான்மீகம்	இராசி ஆரூட சக்கிரம்.		கடகம் சரம் துவாரம்
மகரம் சரம் துவாரம்			சிங்கம் ஸ்திரம் வான்மீகம்
தனுசு உபயம் கெற்பம்	விருச்சிகம் ஸ்திரம் வான்மீகம்	துலாம் சரம் துவாரம்	கன்னி உபயம் கெற்பம்

இ-ள். தரணியில் வாழும் மனிதர்கள் தாங்கள் நினைத்த காரியத்தின் ஜெயாபஜெய விபரத்தை கவனித்துணர்வோமென்று வந்தால், ஜோதிட கணிதசாஸ்திரியானவர் சுத்தமான ஸ்தானத்திலமைத்திருக்கும் ஆசனத்திலமர்ந்து, மேலே குறிப்பித்திருக்கும், இராசி ஆரூட சக்கரத்தை ஓர் பலகையில் எழுதி நவக்கிரகபூஜை செய்து வால்மீக முனிவரை சித்த சுத்தி பக்திவைராக்கியமாய்ப் பூஜித்து, ஆரூடங் கேட்க வருபவர்களை தமது காரியத்தை மனதில் நினைத்துக்கொண்டு ஓர் புஷ்பத்தால் மேற்குறிப்பித்த பனிரெண்டு வீடுகளில் ஒன்றை தொடச்சொல்லி, அந்தந்தகாரியங்களின் பலன்களை முடியும், முடியாது, பின்னால் முடியுமென்று சொல்வதற்கிசைந்த விபரம். எவ்விதமானால் மேலேகுறிப்பித்திருக்கும் பனிரெண்ராசிடு வீடுகளில் தனுசு, மீனம், கன்னி, மிதுன மென்னும் நான்கு வீடுகளும் கெற்ப மெனவும்

துலாம், கடகம், மேஷம், மகரம் இந்த நான்கு வீடுகளும் துவாரமா கவும் விருச்சிகம், கும்பம், சிங்கம் ரிஷபம் இந்த நான்கு வீடுகளும் வாமியமாகவும் குறிப்பித்தெழுதிவைத்துக் கொண்டு பலன்சொல்ல வேண்டும் எ-று. 43

ஒரு காரியத்தை குறித்து கேட்டால்

கலிவிருத்தம்.

மனத்திலுன்னி மகிழ்ந்தொருகாரியம்
நினைத்ததாகும் நிறைகெற்பமாகிடின்
சினத்தவாமியம் சேரநோய்செய்திடும்
கனத்ததுவாரமுங் கைவரத்தாகுமே.

இ-ள். ஆரூடங் கேட்கவருபவர் ஏதாயினும் ஓர் காரியத்தை நினைந்து வந்து கேட்பார்களானால் இராசிசக்கரத்தில் குறிப்பித்த பனிரெண்டு வீடுகளில் எதையாகிலும் புஷ்பத்தால் தொட்ச்சொல்லி அதிலிருப்பது, கெற்பமானால், நினைத்தகாரியம் முடியு மென்றும், வாமியமாகில் நோய் செய்யு மென்றும் துவாரமாகில் கைவசமாகு மென்று சொல்லவேண்டியது எ-று. 43

தமதுகையில் ஒரு பொருளை வைத்துக்கொண்டுகேட்டால்

ஒருபொருளைதைக் கைதனில்மூடியே
இருகைதன்னிலிருக்குங் கையேதெனின்
மருவுங்கெற்பந்துவாரம் வலக்கைதான்
இருக்கும்வாமியப் இடக்கையென்றேமொழி

இ-ள். எவர்களாகிலும் ஜோதிடன் சமர்த்தைக் கவனிப்பதற்காக வந்து ஓர் பொருளை தனது இரண்டு கைகளிலொன்றில் வைத்து மூடிக்கொண்டு நான் கொண்டுவந்த பொருள் எந்தக்கையிலிருக்கின்றதென்று சொல்லென்றால் கெற்பமும், துவாரமுமானால் வலக்கையென்றும், வாமியமானால் இடக்கையென்றும் சொல்லவும் எ-று. 44

போக்கடித்தபொருளை யாரெடுத்தாரென்றால்.

இன்னமும்பொருள் ஏந்தியதாரெனில்
துன்னுங்கெற்பம் துவாரமதாயிடின்
உன்னில்சென்று முன்னுற்றவாண்கொண்டனன்
பின்னும்வாமியம் பெண்ணவள்கொண்டதே.

இ-ள். ஆரூடங்கேட்க வருபவர் தாங்கள்போக்கடித்த பொருளை யெடுத்தவர்கள் ஆரென்று கேட்பார்களானல் கெற்பமும் துவாரமு மானல் ஆண்பிள்ளை யெடுத்தானென்றும், வாமியமானல் பெண்பிள்ளை யெடுத்தானென்றும் சொல்வாய் எ-று. 45

அந்தப்பொருளை எடுத்தவர்கள் இருப்பிட மறிவது.

கொண்டபெண்பிறர் ஊரவள்வாமியம்
எண்டுவாரம தித்தலத்துள்ளவர்
அண்டிவகற்பம் அடுத்தவன்கொண்டனன்
கண்டுதானிக் களவையளவிடே

இ-ள். மேற்குறிப்பித்த பொருளை எடுத்தவர் உள்ளூரா அயலூ ராவென்று கேட்பார்களானல் வாமியமானல் அயலூர்ப்பெண்கொண்டு போனளென்றும், துவாரமானல் உள்ளூரிலுள்ளவர் கைக்கொண்டா ரென்றும் கெற்பமானல் தன்னைச் சேர்ந்தவர் எடுத்துக்கொண்டா ரென்றும் சொல்ல வேண்டும் எ-று. 46

அளவு அறியும் விபரம்.

அளவுதன்னையறிய வினவிடில்
அளவுநெடியவர் வாமியமாகுமே
அளவுகெற்பங் குறுகர்துவாரமாம்
அளவுதன்னையறிந்து குறித்திடே.

இ-ள். மேற் குறிப்பித்தபொருளை யெடுத்தவர்கள் நெடியவரோ? குறுகலானவரோ? சமமானவரோ வென்று கேட்பார்களானல், வாமிய மானல் நெடியவரென்றும், கெற்பமானல் குறுகலானவரென்றும், துவாரமானல் சமமானவரென்றும் குறிப்பாய்ச் சொல்ல வேண்டும்.

நிறமறியும் விபரம்.

என்னுமென்னிற மேதுரைப்பாயெனில்
மின்னுங்கெற்பம் வெளுப்பெனலாகுமே
மன்னுதுவாரமோ மஞ்சள்சிவப்பென்னுங்
கன்னிவாமியங்கார் நிறப்பச்சையே.

இ-ள். நிறம் என்னவென்று கேட்டால் கெற்பமாகில் வெண்மை யென்றும் துவாரமாகில் மஞ்சள் சிவப்பென்றும், வாமியமாகில் கறுப் புபச்சை யென்றும் சொல்லவும் எ-று. 48

குறியதோ? நெடியதோ? வென்று அறிய.

குறியதோடு நெடியகுறித்திடில்
அறுமைதானென்னுங் கெற்பமதாகுமே
நெறிகொள்வாமியஞ் செப்பில்நெடிதெனும்
மறுதுவாரமளவு தானுள்ளதே.

இ-ள். காணமற்போன பொருள்சின்னதா? பெரிதா? சமமானதா வென்று கேட்டால், கெற்பமானல், குறுகலான பொருளென்றும், வாமியமானல் நெடிய பொருளென்றும், துவாரமானல் சமரசமான பொருளென்றும் கூறவும் எ-று. 49

வந்திருந்தவரில் எடுத்தவரின்னரென்றறிவது.

மன்னுமின்னேரெடுத்தவர் யாரெனில்
துன்னுங்கெற்பந் துவாரமதாயிடில்
உன்னிவந்திங்கிருந்தவன் கொண்டனன்
பின்னர்வாமியம் பெண்ணவள்கையிலே.

இ-ள். வந்தவருக்குள் யாரெடுத்தாரென்று கேட்பார்களானல், கெற்பமுந் துவாரமுமாகில் வந்தவருக்குள் ஆண்பிள்ளையெடுத்துவைத் திருக்கின்றனென்றும், வாமியமாகில் பெண்பிள்ளை யெடுத்துவைத் திருக்கின்றளென்றும் சொல்லவேண்டும் எ-று. 50

காணமற்போனபொருள் கிடைக்கும் கிடைக்காதென்பது

கேட்டவஸ்துவருமோ வென்றகேட்பரேல்
கட்டமில்லை நலந்தருங்கெற்பத்தில்
விட்டதுவாரமோ மீளவுங்காணலாம்
கட்டவாமியங் காணவுமில்லையே.

இ-ள். காணமற் போனபொருள் கிடைக்குமா? கிடைக்காதா வென்று கேட்டால், கெற்பமானல் அந்தப்பொருளுக்கு கஷ்டமில்லை யென்றும் எவ்விதமானலுங் கிடைக்குமென்றும், துவாரமானல் ஒரு வாரத்திற்குள் மீண்டுங்காணலா மென்றும் வாமியமானல் போனபொருள் கண்ணினல் காணமுடியாதென்றுஞ் சொல்வாய் எ-று. 51

பெண்கேட்கப் போவதற்கு.

மங்கைதன்னைமணஞ் செய்யப்பேசிடில்
பொங்குவாமியம் போகவுங்கிட்டுமே

தங்குதுவாரமோ தையல்சேராளெனும்
வெங்குகெற்பம் விசனமுண்டாக்குமே.

இ-ள். திருமணஞ் செய்வதற்காக ஒரு பெண்ணை மனதில் நினைத்துக்கொண்டு அந்தப்பெண் இந்த மணமகனுக்குக் கிடைக்குமாவென்று கேட்பார்களானால் வாமியமானால் போனவுடன் கிடைக்குமென்றும் துவாரமானால் அந்தப்பெண் கிடைக்காதென்றும் கெற்பமானால் சண்டை சச்சரவினால் மனதிற்கு விசனமுண்டாகு மென்றுஞ் சொல்வாய் எ-று. 52

கலியாணஞ் செய்ய.

மணமதுசெய்யவந்தவர் கேட்பரேல்
குணமதுகெற்பங் கொள்வ துநன்மையாம்
பணமதுவாரம் பற்றிடில் துக்கமாம்
க்ஷணமதுவாமியம் சார்வதுமில்லையே.

இ-ள். கலியாணஞ் செய்யலாமாவென்று வந்தவர் கேட்பாரானால் கெற்பமானால் உடனே கலியாணஞ் செய்யலாம், அதனால், மனமகிழ்வும் வாழ்வு சம்பத்தும் நன்மையுமுண்டாகுமென்றும், துவாரமானால் இப்போது நடக்கமாட்டாதென்றும் புகல்வாய் எ-று. 53

குழந்தை உண்டோ இல்லையோ வென்றறிய.

மக்கட்பேறுவருந்தி வினவிடின்
மக்கள்வாமியம் மெய்யேமலடியாம்
மக்கள்துவாரம் பெறுவர்மரித்திடும்
மக்கள்கெற்பம் பெறுவர்மதிக்கவே.

இ-ள். இந்தப்பெண்ணுக்குப் பிள்ளைகளுண்டாவென்று கேட்பாராயின் வாமியமானால் மலடியென்றும் துவாரமானால் குழந்தை பிறந்து இறந்துவிடுமென்றும், கெற்பமானால் யாவரும் மதிக்கத்தக்க குழந்தையைப்பெறுவாளென்றும் சொல்வாய் எ-று. 54

குழந்தை ஆண்பெண் விபரம் அறிய.

உற்றகெற்ப முறைத்திடில்ஆணெனும்
மற்றவாமியமென்பது மங்கையாம்
பற்றதுவாரம் பலியாக்கெடுதியே
கர்த்தன்சொன்ன கருத்தென்றறியுமே.

இ-ள். குழந்தைபிறப்பது ஆணோ? பெண்ணோ? வென்று கேட்பார்களானால் கெற்பமானால் ஆண்குழந்தை பிறக்கு மென்றும் வாமியமாகில் பெண்குழந்தை பிறக்குமென்றும் துவாரமாகில் கருப்பங்கலங்கிச் சிதைந்து போகுமென்றும் சொல்வாய் எ-று. 55

குழந்தை சிவப்பு கறுப்பென்றறிய.

வெள்ளைக்கர்ப்பம் விரைந்து கறுக்குமே
ஒள்ளிவ்வாமிய முள்ளுஞ்சிவக்குமே
பொள்ளைத்துவாரம் பொருந்திவெளுக்குமே
கள்ளரிக்குழலேயிதை கண்டுகொள்

இ-ள். பிறக்கிற குழந்தையோ அல்லது பிறந்திருக்கிற குழந்தையோ அவைகள் கறுப்போ சிவப்போவென்று கேட்கில், கற்பமானால் கறுப்புநிறமுள்ள குழந்தையென்றும் துவாரமானால் வெண்மை நிறமுள்ள குழந்தையென்றும் கவனித்துச்சொல்லவும் எ-று. 56

மழை வருங் குறிப்பறிய.

பெய்யுந்துவாரம் பெருமழைபெய்திடும்
வைய்யும்வாமியம் நற்றுளியில்லையே
உய்யும்கெற்பம் ஒருமழையுண்டெனும்
ஐயன்மெய்யனறிய உரைத்ததே.

இ-ள். ஆரூடங் கேட்கவருபவர்கள் இன்றையதினம் மழைபொழியுமா? பொழியாதா வென்று கேட்பார்களரனால், துவாரமானால் பெருமழைபெய்யு மென்றும், வாமியமானால் துளிகூடமழை பெய்யாதென்றும், கெற்பமானால் ஒருமழை பெய்யுமென்றுஞ் சொல்லுவாய்.

கிணறு வெட்ட.

கிணறுவெட்டிட கேட்கவருவோர்முன்
உணருங்கெற்பத்தி லுற்றநீர்தானில்லை
மிணருந்துவாரத்தில் மெத்தவேநீருண்டு
கணறும் வாமியங் கல்லுமண்ணும்வரும்.

இ-ள். கிணறு வெட்ட வேணுமென்று ஆரூடங்கேட்பாரானால் தகுந்த ஜலம் இருக்காதென்றும், துவாரமானால் மெத்தத்தண்ணீருண்டென்றும், வாமியமானால் கல்லும் மண்ணுமாகவே இருக்கு மென்றும் புகல்வாய் எ-று. 58

வித்து விதைக்க.

பூமிதன்னில் பொருந்தவிதைத்திடில்
பூமிகற்பத்தில் பொன்னேந்திவாழலாம்
பூமிதுவாரம் பொலிவரைசாற்றுமே
பூமிவாமியம் பொன்றிடுங்கன்றிடே.

இ-ள். பூமியில் விதைவிதைக்க வேணுமென்று ஆரூடங்கேட்க வந்தவர்களுக்கு முன் கெற்பமாகில்விளைவாகி அதினால் அதிகதிரவியலாபங் கிடைக்குமென்றும், துவாரமாகில் அரைவாசி விளையும் வாமியமாகில் பயிர்கள் சாவியாய்ப் போகுமென்றும் சொல்வாய் எ-று. 59

விளைவுகேட்டால் சொல்லும் விபரம்.

விளைவுதன்னை விரும்பியுரைத்திடில்
தளையுங்கெற்பமூர் தழைந்துவிளையுமே
புளையில்வாமியம் போதவிளையுமே
பளையதுவாரமும் பாதியிற்பாதிபோம்.

இ-ள். தமதுவயலில் உழுது விதைத்த தானியப் பயிர்கள் விளையுமா? விளையாதாவென்று ஆரூடங்கேட்பாரானால் அவர் தொட்டது கெற்பமானால் நன்றாய்ச்செழித்து விளையுமென்றும், வாமியமானால் திடமாகவிளையு மென்றும் துவாரமானால் கால்வாசி விளையுமென்றும் சொல்வாய் எ-று 60

வியாபாரஞ் செய்வதினால் இலாப நஷ்டமறிவது.

வாணிபத்தைமகிழ்ந்து வினவிடில்
ஊணிவாமியம் ஓத்ததுரெட்டியாம்
தீணியோடுதுவாரமும் மத்திபம்
பேணிக்கெற்பம் பெறுவதொன்றில்லையே.

இ-ள். வியாபாரஞ் செய்வதினால் இலாபங்கிடைக்குமா வென்று ஆரூடங்கேட்கவந்தவர்கள் தொட்டது வாமியமானால் ஓட்டிக்கிரட்டிப் பாய் இலாபங்கிடைக்கு மென்றும், துவாரமானால் மத்திப மென்றும் கெற்பமானால் ஒன்றுங் கிட்டாதென்றும் புகலுவாய் எ-று. 61

மணியம் உத்தியோகங்கிடைக்குமா வென்பது.

மணியந்தன்னை மகிழ்ந்துவினவிடில்
மணியம்வாமியம் வருமேயவர்க்கெனும்

துணியுங்கெற்பமோ தூரவருமெனும்
பணியுந்துவாரமோ பலியாதுநாளுமே.

இ-ள். ஆரூடங்கேட்கவருபவர் தங்களுக்கு மணியமாகிலும், மற்ற எந்த உத்தியோகமாகிலும் கிடைக்குமா கிடைக்காதாவென்று வினவிடில் அவர்கள் தொட்டராசி வாமியமானல் அவன்கோரிய வேலை கிடைக்கு மென்றுங் கெற்பமானல் சிறிதுநாள் சென்றால் கிடைக்கு மென்றும், துவாரமானல் கிடைக்க மாட்டாதென்றும் சொல்வாய்.

கல்வியாகிய வித்தியாலாபம் கவனிப்பது.

கல்விதன்னைக் கடுகவினவிடில்
கல்விதுவாரங் கடுகவருமெனும்
கல்விகெற்பங்கடுஞ் செவியேபுகாக்
கல்விவாமியம் கற்றளவாகுமே.

இ-ம். தமது பிள்ளையை வித்யாசாலையில் விடுத்து கல்விவருமா வென்று கேட்பவர்கள் தொட்டது துவாரமானல்சீக்கிரங் கற்றுவிருத்தியடைவானென்றும், கெற்பமானல் கற்கக்கற்க மறதியுண்டாகிவாசிக்கமுடியாதென்றும், வாமியமானல், கற்கயுமில்லையே நிற்பானென்றும் சொல்லுவாய் எ-று. 63

ஜெயில் சிறை நீங்குவது.

சிறையையுன்னியே சிக்கெனக்கேட்டிடில்
சிறையிற்கெற்பஞ் சிறையதாந்திண்ணமே
சிறையில்துவாரஞ் சிறைதான்விடும்விடும்
சிறையில்வாமியஞ் சீரபிறகெய்துமே.

இ-ள். சிறைச்சாலையிலகப்பட் டிருப்பவனுக்கு விடுதலையாகுமா வென்று கேட்டிடில் கெற்பமாகில் சிறையிலேயிருப்பது உண்மையென்றும், துவாரமாகில் விடுதலையாகு மென்றும், வாமியமானல் கொஞ்சகாலையில் விடுதலையாகுமென்றும் சொல்வாய் எ-று. 64

கலகத்தின் காரணம் கவனிப்பது.

காடுகலகம்நமக்கு முண்டோவெனில்
கேடுமில்லையே கெற்பமதாயிடில்
போடுதுவாரத்தில் போயதுமீளுமே
நீடுகேடென்று வாமியமாகுமே.

இ-ள். கலகம் உண்டோ இல்லையேயென்று ஆரூடம் கேட்க வந்தவர்கள் தொட்டது கெற்பமானால் கலகமில்லையென்றும், துவாரமானால், கலகம்போய் மீளுமென்றும், வாமியமானால் கலகம் உண்டென்றுஞ் சொல்வாய் எ-று. 65

சண்டையில் ஜெயம் அறிவது.

வெட்டுஞ்சண்டை விரும்பியுரைத்திடில்
கட்டுங்கெற்பங் கரும்படைதோல்வியாம்
தட்டும்வாமியந் தன்படைவெல்லுமே
முட்டுந்துவாரமிருவரு மொத்துப்போம்.

இ-ள். சண்டையில் வெற்றி தோல்வியெனும் ஜெயாபஜெயம் கவனிப்பதற்காக வந்து ஆரூடங் கேட்பவர்கள் தொட்டது கெற்பமாகில் அபஜெயமென்றும், வாமியமாகில் தனது சேனை ஜெயிக்குமென்றும், துவாரமாகில் இருதிறத்தார்களும் சமாதானமாய்விடுவார்களென்றும், சொல்லுவாய் எ-று. 66

இறந்தது உண்மையாவென்றறிய.

உன்னிச்சென்றங் கொருவனிறந்தது
மன்னுங்கெற்பம் மரித்ததுமில்லையே
முன்னித்துவார முறத்தமரணமாம்
இன்னும்வாமிய மிறந்ததுமுண்மையே

இ-ள். ஒருவன் இறந்தது உண்மையாவென்று ஆரூடங் கேட்பவர்கள் தொட்டது கெற்பமானால் நீ சந்தேகப்பட்டு நினைத்து வந்து கேட்டவன் உயிரோடிருக்கிறானென்றும், துவாரமானால் பலத்தமரணமென்றும், வாமியமானால் அவன் இறந்தது உண்மையென்றும் சொல்லுவாய் எ-று. 67

வியாதியின் குறி அறிய.

நோய்குறிதனை நோக்கியேகேட்டிடில்
நோய்களில்லையாங் கெற்பமதாயிடில்
நோய்கள்முத்தி யழிந்திடும்வாமியம்
நோய்கள்தீரா துவாரத்தைதொட்டதே.

இ-ள். தமது வியாதி நீங்குமாவென்று ஆரூடங்கேட்க வந்தவர்கள்தொட்டது கெற்பமாகில் நோய் நீங்கிவிடுமென்றும், வாமியமாகில்

வியாதிமுத்தி மேனிமெலிந்து மிகவருந்தியபிறகு சவுக்கியமாகு மென்றும், துவாரமாகில் பிணி அதிகரித்து மருந்துகள் புசித்தாலும் பிரயோசன மில்லாமல் வந்தநோய் தணியாதுவென்றும் சொல்லுவாய் எ-று. 68

வீடுகட்டுவதற்கு குறிப்பறிய.

இல்லங்கட்ட இசைந்துவினவிடில்
இல்லங்கெற்ப மியல்போடிருக்கலாம்
இல்லத்தேகி விறப்பார்துவாரமே
இல்லம்வாமியம் இருவர்நோய்பூசலே.

இ-ள். வீடுகட்ட உத்தேசித்துக்கொண்டு ஆருடங்கேட்க வந்தவர்கள் தொட்டது கெற்பமானல் மங்களகரமாய் வீடுகட்டலா மென்றும், துவாரமானல் வீடுகட்டப்போனல் மரணமென்றும் வாமியமானல் புருஷன்பெண்சாதி இருவர்களுக்கும் சண்டை சச்சரவும், கலகமும், வியாதியு முண்டாகு மென்றும் சொல்வாய் எ-று. 69

வீடுகட்டி குடிபோவதற்கு அறிவது.

வீடுகட்டிக்குடிப்புக கேட்பரேல்
நாடுகெற்பம் நலத்தோடிருக்கலாம்
வாடுஞ்சிந்தை வருத்தந்துவாரமிப்
பாடுவாமியம் பன்னோயுண்டாக்குமே.

இ-ள். வீடுகட்டிக் குடிபோவதற்கு ஆருடங்கேட்க வந்தவர்கள் தொட்டது கெற்பமாகில் நன்மை குடி போகலாமென்றும், துவாரமானல், அவ்வீட்டிற்குப் போனல் மனவியாகூல முண்டாகு மென்றும் வாமியமானல் வியாதியுண்டாகுமென்றும் சொல்லுவாய் எ-று. 70

ஊர்ப்பயணம் போவதற்கு அறிய.

வழியைஉன்னி வருந்திவினவிடில்
ஒழியுந்துவாரம் ஊருக்குப்போமெனும்
மொழியநோய்கொளும் போமிடமவாமியம்
அழியுங்கெற்பம் கொடித்தடைபோகிலோ.

இ-ள். ஊர்ப்பிரயாணம் போவதற்காக உத்தேசித்து ஆருடங்கேட்கவருபவர்கள் தொட்டது துவாரமானல் பிரயாணம் போகலா

மென்றும், வாமியமானால் போன இடத்தில் வியாதி யுண்டாகு மென்றும், கெற்பமானல் கொடித்தடையாயிருப்பதால் போகக் கூடாதென்றும் சொல்லுவாய் எ-று. 71

ஊருக்குப் போனவர் வருகை அறிவது.

விருத்தம்.

போனவர்வருகைகேட்கில் பொருந்தியேயிருப்பார்கெற்பம்
ஆனதோர்வாமியத்தில் அமர்ந்துபின்வருவாரென்றும்
கானமாந்துவாரமாகில் கடிதுடன்வருவாரென்று
தேனமர்குழலினளே செப்புநீஉண்மைதானே.

இ-ள். ஊருக்குப் போனவர் எப்போதுவருவாரென்று கேட்டால் கெற்பமானல் போன இடத்தில் இருக்கிறாரென்றும், வாமியமானல் சிலநாளிருந்துவிட்டு வருவாரென்றும், துவாரமாகில் இன்றைபதினமே வருவாரென்றும் சொல்லுவாய் எ-று. 72

மனிதர்களின் கால நிலே.

அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

முன்செய்தவினையாலே இச்சன்மந்தன்னிலே
மூண்ட துன்பம்
இன்னதெனவறியாமல் ஈஸ்வரனேநிந்தித்தால்
ஏற்காதென்று
நன்மையுடன்ஜோதிஷ நூலாராய்ந்தாலவரவர்க்கு
நடக்குந்தன்மை
அன்புடனேகண்டுணர்ந்தால் அவரவர்கள்பலாபலனே
அறிகுவாரே.

இ-ள். பிர்மசிருஷ்டியால் பூமியில் ஜெனித்தமானிடர்முன் செய்த சுகமனுபவிக்கும் போது தமது கர்மபலனுல் சமர்த்தால் பொருள் சேகரித்து உண்டுடுத்தி சவுக்கியமாயிருக்கின்றோமென்று மனோகர்வமாய் தன்னைப்போன்ற மனிதர்கள் கஷ்ட நஷ்ட மடைந்தால் அவர்களைப் பரிகாசிப்பதும், முயற்சியுடையோ ரிகழ்ச்சி யடையாரெனுந் தன்மையாய் அறிவைப்பெருக்கி ஆலோசனை மிகுத்து பொருள் சேகரஞ் செய்யும் தன்மையைக் கவனியாமல், சோம்பரென்பரென்பவர் தேம்பித்திரிவாரென்னும் விதமாய் சதாகால முயற்சியில்லா மலிருப்ப

தினல் ஏழையாயிருக்கின்றார்களென்று வாய்ப்பறை யடித்துக் கொண்டு மனோகர்வமாயிருப்பார்கள். தங்களுக்கு வறுமைநோய் சூழ்ந்து கஷ்டப்படும் போது தமது முயற்சியெல்லாம் பாழாகி, திகைத்து, திடுக்கிட்டு ஐயோ ஈதென்ன துன்பம் பகவானென்னை இவ்வித கஷ்டப்படுத்துகின்றாரே யென்று துயரப்படுவார் இது தான் மதியீனம். அதெவ்விதமெனில் அவரவர்கள் முன் ஜெனனத்தில் செய்தவினையள வின்படியே தான் சுகதுக்கங்கள் நேரிடும் எ-று. 73

மனிதர் ஜெனிக்கும்போது கிரகநிலை யமைந்திருப்பது.

அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

பருதிமதிசெவ்வுபுதனும் குருசுக்ரசனிபாம்பு
 பனிரெண்ராசி
நெருங்கியேஅவரவர்கள் நட்பாக்ஷிபகைஉச்சம்
 நீசமாக
வருகையிலேஜாதகர்க்கு தகுந்தபடிசுபாசுபங்கள்
 வழங்குவார்கள்
தருணமேஇதையறிந்து உண்மைதனைகவனிப்பீர்
 தரணியோரே.

இ-ள். உலகிற்பிறந்த மனிதர்கள் முன் ஜனனத்தில் செய்தவினையளவின்படியே கர்ப்பத்திலிருந்து பூமியில் பிறக்கும்போது, மேஷம், ரிஷபம் மிதுனம் கடகம், சிங்கம் கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு மகரம், கும்பம், மீனமென்னும், பனிரெண்டு ராசி சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன் சனி, ராகு, கேது வென்னும், ஒன்பது கிரகங்களும் தாங்களிருக்கும் ஸ்தானபலன் போல் சுக துக்கத்தை யனுபவிக்கச் செய்வார்கள் அவர்களிருக்கும் ஸ்தானங்கள் பகை, நீசமானால் கஷ்ட நஷ்ட மடையச் செய்வார்கள் நட்பாக்ஷி யுச்சஸ்தானமாயிருந்தால் சுகலாபத்தைத் தருவார்கள் எ-று. 74

நவக்கிரகங்கள் நட்பாக்ஷி சமம், பகை, நீச உச்சஸ்தானங்கள்.

மீனம் சூரி-நட்பு சந்-பகை செவ்-நட்பு புத-நீசம் குரு-ஆக்ஷி சுக்-உச்சம் சனி-சமம் ரா-கே-நட்பு	மேஷம் சூரி-உச்சம் சந்-சமம் செவ்-ஆக்ஷி புத-சமம் குரு-நட்பு சுக்-சமம் சனி-நீசம் ரா-கே-பகை	ரிஷபம் சூரி-பகை சந்-உச்சம் செவ்-சமம் புத-நட்பு குரு-பகை சுக்-ஆக்ஷி சனி-நட்பு ரா-கே-நீசம்	மிதுனம் சூரி-சமம் சந்-நட்பு செவ்-பகை புத-ஆக்ஷி குரு-பகை சுக் நட்பு சனி-நட்பு ராகு-கேது-நட்பு
கும்பம் சூரி-பகை சந்-சமம் செவ்-சமம் புத-சமம் குரு-சமம் சுக்-நட்பு சனி-ஆக்ஷி ரா-கே-பகை	பனிரெண்டு ராசியிலும் கிரகங்கள் அமைந்திருக்கும் ஸ்தான விசேஷம் இதன்படியே நவக்கிரகங்கள் ஜாதகர்க்குப் பலன் தருவார்கள்.		கடகம் சூரி-நட்பு சந்-ஆக்ஷி செவ்-நீசம் புத-பகை குரு-உச்சம் சுக்-பகை சனி-பகை ராகு-கேது-பகை
மகரம் சூரி-பகை சந்-சமம் செவ்-சமம் புத-சமம் குரு-நீசம் சுக்-நட்பு சனி-ஆக்ஷி ரா-கே-நட்பு			சிம்மம் சூரி-ஆக்ஷி சந்-நட்பு செவ்-நட்பு புத-நட்பு குரு-நட்பு சுக்-பகை சனி-பகை ராகு-கேது-பகை
தனுசு சூரி-நட்பு சந்-சமம் செவ்-நட்பு புத-சமம் குரு-ஆக்ஷி சுக்-சமம் சனி-சமம் ரா-கே-நட்பு	விருச்சிகம் சூரி-நட்பு சந்-நீசம் செவ்-ஆக்ஷி புத-சமம் குரு-நட்பு சுக்-சமம் சனி-பகை ரா-கே-உச்சம்	துலாம் சூரி-நீசம் சந்-சமம் செவ்-சமம் புத-நட்பு குரு-பகை சுக்-ஆக்ஷி சனி-உச்சம் ரா-கே-நட்பு	கன்னி சூரி-சமம் சந்-நட்பு செவ்-பகை புத ஆக்ஷி குரு-பகை சுக்-நீசம் சனி-நட்பு ரா-கே-நட்பு

வால்மீகர் ஆரூடத்தின் மகிமை.

அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

பன்னிரண்டுராசியிலும் கிரகங்கள்சஞ்சரித்துப்
பலன்கொடுக்கும்
தன்மைதனையனுசரித்து வால்மீகமாமுனிவர்
தரணியோர்க்கு
நன்மைதரும்பலர்பலனை தெளிவுடனேயோதுதற்கு
நவின்றவாக்யம்
அன்புடனேகவனித்தா லுண்மைதனையுணர்வீர்கள்
அறிவுள்ளோரே.

இ-ள். மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனமென்னும் பனிரெரெண்டு ராசியிலும், சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு, கேது வென்னும் ஒன்பது கிரகங்கள் சஞ்சரிக்கும் போது அவரவர்கட்கிசைந்த பலனைக்கொடுத்தாலும், வால்மீக மகாமுனிவர் லோகோபகாரமாக சகலரும் எளிதிலுணரும் படியாயமைத்த ஆரூடத்தை சித்தசுத்தி வைராக்கியமுடனே கவனித்துப் பார்த்தால் விபரமாய் விளங்கு மென்றுணர்வீர்கள் எ-று. 75

இராசி நிலைகளின் விபரம்.

சித்திரைமாதம்	மேஷராசி
வைகாசிமாதம்	ரிஷபராசி
ஆனிமாதம்	மிதுனராசி
ஆடிமாதம்	கடகராசி
ஆவணிமாதம்	சிம்மராசி
புரட்டாசிமாதம்	கன்னியா ராசி
ஐப்பசிமாதம்	துலா ராசி
கார்த்திகைமாதம்	விருச்சிகராசி
மார்கழிமாதம்	தனுசுராசி
தைமாதம்	மகரராசி
மாசிமாதம்	கும்பராசி
பங்குனிமாதம்	மீனராசி

இவ்விதமே ஒவ்வொருமாதத்திற்கும் இராசி யென்றமைத்துக் கொண்டு குறிப்பித்த அந்தந்த இராசியில் கிரகங்கள் சஞ்சரிக்கும் பலனை கவனித்துச் சொல்வதில் வால்மீகர் குறிப்பித்த ஆருடத்தின் மகிமையானது உடனுக்குடனே தெளிவாய்க் காண்பிக்கு மென்றுணர்வீர்கள்

ஆருடராசி விவரம்.

சந்த விருத்தம்.

மகிழுங்கன்னி மீனம்மிதுனம்
விளங்குந் தனுசுகெற்பவதாம்
மகரம்மேடம் துலாராசி
மதிக்கும்கடகம் துவாரமதாம்
வகையாய்சிங்கம் கும்பம்தேள்ரிஷபம்
வான்மீகந் தானெனத்தெளிந்து
ஜெகத்தோர்க்காருடம் புகல்வீர்
ஜோதிஷத்திற் சிறந்தோரே.

இ-ள். அறிவிற் சிறந்தவர்களே ஆருட சாஸ்த்திரத்தில் சிறந்த வால்மீகர் ஆருடசக்கரத்தின் விவரத்தைக் கவனிக்க வேண்டுமானால் முன்குறிப்பித்த பனிரெண்டு ராசிகளில், கன்னி, மீனம், மிதுனம், தனுசு ஆகிய இந்த நான்கும் கெற்ப மென்றும், மகரம், மேடம், கடகம் துலாமென்னும் இந்த நான்கும் துவாரமென்றும், சிங்கம் கும்பம், விருச்சிகம், ரிஷபம் இந்த நான்கு இராசிகளும், வான்மீகமென்றும் குறிப்பிட்டுச் சொல்லி, அவைகள் பொருந்தியிருக்கும் இராசிகளை யோர்பலகையிலாவது கடிதத்திலாவது எழுதிவைத்துக்கொண்டு, வான்மீகமுனிவரை சித்தசுத்தி பக்தி வைராக்கியத்துடன் பூஜித்து, நவக்கிரகங்களாகிய, சூரியன் சந்திரன் செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, ராகு கேது வென்னும், நவக்கிரகங்களை தியானஞ் செய்து ஆருடங்கேட்க வந்தவர்களை பனிரெண்டு ராசியிலொன்றை தொடச்சொல்லி அந்தஸ்தானம் கெற்பமோ, துவாரமோ வான்மீகமோவென தெரிந்துக் கொண்டு ஆருடங்கேட்க வந்தவர்களுக்கு பலாபலன்களை விபரமாய்ச் சொல்லவும் எ-று.

பனிரெண்டுராசி நிலைகளின் சக்கரம்.

மீனம் உபயம் கெற்பம்	மேஷம் சரம் துவாரம்	ரிஷபம் ஸ்திரம் வான் மீகம்	மிதுனம் உபயம் கெற்பம்
கும்பம் ஸ்திரம் வான்மீகம்	ஆரூட சக்கிரம்.		கடகம் சரம் துவாரம்
மகரம் சரம் துவாரம்			சிங்கம் ஸ்திரம் வான்மீகம்
தனுசு உபயம் கெற்பம்	விருச்சிகம் ஸ்திரம் வான்மீகம்	துலாம் சரம் துவாரம்	கன்னி உபயம் கெற்பம்

தான் நினைத்த காரியம் முடியுமா முடியாதாவென்பது.

ஆரூடங்கேட்போர் கெற்பந்தொடுவாராகில்
அவர்நினைத்தகாரியங்கள் முடியுமென்றும்
சீரூடனேவான்மீகந் தொடுவாராகில்
சித்தம்நொந்துநோய்செய்யும் முடிந்திடாது
பேரூடனே துவாரமதைத் தொடுவாராகில்
பெருமையுடனினைத்தது கைவசமேயாகும்
காருண்யவால்மீக முனிவர்பாதம்
கருத்திலெண்ணி சதாகாலம்பூசிப்பீரே.

இ-ள். தாங்கள் நினைத்த காரியம் முடியுமா முடியாதா வென்று ஆரூடங் கேட்கவந்தவர்கள் கையினுல் ஒரு புஷ்பத்தால் மேற்குறிப்பித்த சக்கரத்தின் பனிரெண்டு வீட்டிலெதையாகிலும் ஒன்றை தொடச்சொல்லி, அவர்கள் தொட்டது கெர்ப்பமானுல், தாங்கள்நினைதத காரியம் முடியுமென்றும், வான்மீகத்தைத் தொடுவாரானுல் தாங்கள் நினைத்தகாரியம் முடியாது மனவியாதி அதிகரிக்குமென்றும், துவாரத்தைத் தொடுவாரானுல் அவர்கள் நினைத்தகாரியம் உடனே கைவசமாகுமென்றும் சொல்வாய் எ-று.

தான் கொண்டு வந்த பொருள் எந்தகையிலிருக்கிற தென்று கேட்டால் சொல்வது.

கையிலுள்ளபொருள் தன்னை மூடிக்கொண்டு
கவனித்துச்சொல்வீ ரெங்கிருப்பதென்றால்
துய்யமுடன்கெற்பமும் துவாரமானால்
சொல்லுவாய் வலக்கையிலிருக்குதென்று
பையவேவான்மீகந்தன்னைத் தொட்டால்
பக்ஷமுடன் இடக்கையிலிருக்குதென்றும்
ஐயமிலா துரைத்திடுவாய் கண்டாற்போல
அறைந்திட்டார் ஜோதிஷரென்றோதுவாரே.

இ-ள். எவர்களாகிலும் ஜோதிஷனுடைய சமர்த்தைக் கவனிப்பதற்காக ஏதாயினும் ஓர் பொருளை எடுத்து தமதுகையில் வைத்து மூடிக்கொண்டு எந்தக்கையிலிருக்கின்றது சொல்வாயென்று கேட்டால் அவர்களையே இந்த ஆரூடச்சக்கரத்தில் ஏதேனு ஓர் வீட்டைதொடச் சொல்லிப்பார்த்தால், அவர்கள் தொட்டது கெற்பமும் துவாரமுமானால் அது வலக்கையிலிருக்கிற தென்றும், வான்மீகத்தைத் தொட்டால் இடக்கையிலிருக்கிற தென்றும் சொல்லுவாய் எ-று. 79

கேட்கும் பொருள் நிறமறிவது.

அன்புடனே தான் கேட்கும்பொருள்நிறத்தை
ஆரூடத்தாலறிந்து சொல்வீரென்றால்
இன்பமுடன்சக்கரத்தைத் தொடவேசொல்லி
இசைந்தகெற்பந் தொட்டாலேவெளுப்பென்றோது
பொன்னிறமஞ்சள்சிவப்பு துவாரமென்றும்
பொருந்துமேவால்மீகந் தொடுவாரானால்
நன்மையுடன்கறுப்புபச்சை நிறந்தானென்று
நவிலுவாய்உண்மையென்றே நம்புவாரே.

இ-ள். ஆரூடங் கேட்கவந்தோர் தாங்கள் நினைத்த பொருளின் நிறமென்ன வென்று கேட்டால், அவர்கள் தொட்டது கெற்பமானால் வெண்மை நிறமென்றும் துவாரமானால் பொன்னிறமாகிய மஞ்சள், சிவப்பு நிறமென்றும் வால்மீகம் தொடுவாராகில் கறுத்தபச்சை நிறமென்றும் சொல்லுவாய் எ-று. 80

நினைத்த பொருளின் உள் நிறம் அறிவது.

நினைத்தபொருள் உள்நிறத்தைச் சொல்வாயென்றால்
நிலைமையுடன்சக்கரத்தை தொடவேசொல்லி
நினைத்துகெற்பந்தொட்டால் கறுப்புபச்சையாகும்
நிலைமையாய் துவாரத்தைத்தொட்டாரானால்
கனத்தவெண்மைநிறமென்று தெரிவிப்பாய்நீ
கருதுவான்மீகம்மஞ்சள் சிவப்புவர்ணம்
மனத்திலேஐயமிலா துரைப்பாய்நீயே
மாநிலத்தோருந்தனையே புகழுவாரே.

இ-ள். தமது மனதில் நினைத்தபொருளின் உள்நிறத்தைச் சொல் வீரென்றால், அவர்கள் தொட்டது கெற்பமானால் கறுப்பு நிறமும், பச்சை நிறமென்றும், துவாரமானால் வெண்மை நிறமென்றும், வான் மீகமானல் மஞ்சள் நிறமென்றும், சிவப்பு நிறமென்றும் சொல்வாய்.

குறித்தபொருள் சிறிதோ பெரிதோ என்பது.

தான்நினைத்தபொருள்சிறிதோ பெரிதோவென்றால்
தகுந்தபடிசொல்வதற்கு கெற்பந்தொட்டால்
தான்சிறியவஸ்துவென்று திடமாய்ச்சொல்லு
சமரசமாம் துவாரத்தைத்தொடுவதாலே
வான்மீகந்தொட்டாலே நெடியவஸ்து
வழுத்துவாய் ஆரூடங்கேட்கவந்தோர்
மேன்மையுடனுன்வார்த்தை உண்மையென்றே
மேதாவியென்றுனையே புகழுவாரே.

இ-ள். ஆரூடங் கேட்கவந்தவர்கள் தாங்கள் நினைத்தபொருள் சிறிதோ பெரிதோ வென்று கேட்டால் அவர்கள் தொட்டது கெற்ப மானால் சிறியவஸ்துவென்றும், துவாரத்தை தொட்டால் சமரசமென் றும், வான்மீகத்தைத்தொட்டால் நெடியவஸ்துவென்றும் சொல்வாய்.

மனதில் நினைத்த காரியத்தின் முடிவை அறிய.

அன்புடனே தன்மனதில் நினைத்தகாரியம்
ஆகுமோ ஆகாதோவென்றுகேட்டால்
முன்னமேகெற்பத்தை தொட்டாரானால்
முடியாது நினைத்திட்டகாரியந்தான்

இன்பமாய்துவாரத்தைத் தொடுவாரானல்
இன்னுஞ்சிலநாள் பொறுத்துமுடியுமென்றும்
தன்மையுடன்வான்மீகந் தொடுவாரானல்
தவறுமல்முடியுமென்று சாற்றுவாயே.

இ-ள். தமது மனதில் நினைத்தகாரியம் முடியுமா முடியாதா வென்று கேட்போர்கள் தொட்டது கெற்பமானல் முடியாதென்றும், துவாரமானல் இன்னுங் கொஞ்சகாலத்திற்குப் பிறகு முடியுமென்றும் வான்மீகமானல் உடனே முடியுமென்றும சொல்வாய் எ-று. 83

தமக்கு இஷ்டமான இடத்திற்கு

போகலாமா? போகக்கூடாதா வென்பது அறிய.

தான்நினைத்தஇடத்திற்கு போவதற்கு
தன்மையுடன்கேட்போர் கெற்பத்தைத்தொட்டால்
மேன்மையாய்போமிடத்தில் நிலைபேறுண்டாம்
மென்மேலும்கீர்த்தியுடன் புகழுண்டாகும்
தான்தொட்டராசியே துவாரமானல்
தகாதங்கேபோனல் நிலைபெருதென்றோது
வான்மீகந்தனைதொட்டால் சித்திபெற்று
வையகத்தில்பெருமையுடன் வாழ்குவாரே.

இ-ள். ஆருடங்கேட்க வந்தவர்கள் தாங்கள் குறிப்பித்திருக்கும் இடத்திற்குப்போகலாமா போகக்கூடாதா வென்று கேட்பவர்கள் தொட்டது கெற்பமானல் போகுமிடம் நிலைபெற்று கீர்த்தியுடன் புகழ் விளங்கியிருக்கு மென்றும், துவாரத்தைத்தொட்டால் அந்த இடத் திற்குப்போனல் நிலைபெருது. ஆகையால் அங்கே போகக்கூடா தென்றும், வான்மீகத்தைதொட்டால் போகிற இடத்தில் சித்திபெற்று சகலரும் புகழுந்தன்மையாய் பெருமையுடன் கீர்த்தி பொருந்தியிருப் பார்களென்றுரைப்பாய் எ-று. 84

வரவேண்டிய பொருள் நிலுவை

வருலாகுமா வென்று அறிய.

வருகுமோபாக்கிபொருள் தொகைதனக்கு
வாராதோவெனக்கேட்போர் கெற்பத்தைதொட்டால்
வருகாதுநிலுவைபொருள் தொகையென்றோது
வகையுடனேசென்றாலும் பலனேயில்லை

பெருமையுடன்துவாரத்தைத் தொடுவோரானால்
போனவுடன்பொருள் கிடைக்குமென்றேசொல்லு
அருமையாய்வான்மீகந் தொட்டாரானால்
அடுத்தடுத்துப்போய் வசூல்செய்யலாமே.

இ-ள். தமது பாக்கித்துகையை வசூல்செய்ய ஆரூடசக்கரத்தில் குறிப்பித்திருக்கும் கெற்பத்தைத் தொட்டால் பாக்கி நிலுவைவராது அதற்காகப்போனாலும் பிரயோசனமில்லை யென்றும், துவாரத்தைத் தொட்டால் போனவுடனே பொருள் கிடைக்குமென்றும் வான்மீகத்தைத் தொட்டால் அடுத்தடுத்துப் போனால் கொஞ்சங் கொஞ்சமாய் வசூலாகுமென்றும் சொல்லுவாய் எ-று. 85

தான்கொடுத்த துகைக்கு வட்டிவரவு அறிய.

தான்கொடுத்த முதலுக்குச்சேர்ந்தவட்டி
தனைக்கேட்டால் வருமோசொல்லீரென்றால்
மேன்மையுடன் கெற்பத்தைத்தொடுவோரானால்
வேண்டியே வட்டிபணம்வருமென்றும்
வான்மீகந்தனை தொட்டாலிந்தவேளை
வட்டிபணஞ்சிறிதேனும் வருகாதென்றும்
ஆண்மையுடன் துவாரத்தைத் தொட்டாரானால்
அசலுடனேவட்டியெல்லாம் கிடைக்கும்பாரே

இ-ள். ஒருவருக்குத்தாங்கள் கடனாய்க்கொடுத்த துகைக்கு வட்டி வருமா, வராதா? வென்று கேட்போர்கள் தொட்டது, கெற்பமானால் வட்டிபணம் கிடைக்குமென்றும், வான்மீகமானால் வட்டிபணம் இந்த சமயத்தில் கொஞ்சமேனும் வராதென்றும், துவாரமானால் தான்கொடுத்த அசலும் வட்டியும் அப்போதே வருமென்று சொல்வாய் எ-று.

தான்வாங்கிய கடன் நீங்குமோ நீங்காதோ வென்று அறிய.

தான்பட்டகடன்தீரும் தீராதென்று
தன்மையுடன்வந்து ஆரூடங்கேட்போர்
மேன்மையுடன்துவாரத்தை தொட்டாரானால்
மோசமில்லா அரைகுறையாய்தீருமென்றும்

வான்மீகமானால் கடன்தீருமென்றும்
வகையுடனேசொல்லுவாய் கெற்பமானால்
தான்தீராதென்று நீசொல்வாயவர்க்கு
தாரணியில்பக்குவமா யிருப்பாயென்றே.

இ-ள். தாங்கள் பட்டகடன் தீருமோ தீராதோ வென்று கேட்டு தொட்டது துவாரமானால் பயமுமில்லை மோசமுமில்லை அரைகுறையா கவாவது கொஞ்சங் கொஞ்சமாய்த் தாங்கள் பட்டகடன் தீருமென் றும், வான்மீகமானால், கடன் தீர்ந்து விடுமென்றும், கெற்பமானால் கடன் தீராதென்றும் சொல்வாய் எ-று. 87

கடன்கேட்கப்போனால் கிடைக்குமா கிடைக்காதா வென்பதை அறிவது.

தனக்குபணம்வேண்டுமென்றே தனவானைக்கண்டு
தருவானோதாரானோ கடனென்றெண்ணி
மனதிலேமதித்து கெற்பந்தன்னைத்தொட்டால்
முடியாது அவன்கொடுக்கமாட்டானென்பாய்
கனமுடனே துவாரத்தைத் தொடுவாரானால்
கடனைகப்பணந்தருவா னென்றுரைப்பு
முனதாகவால்மீகந் தொடுவாரானால்
முடியாது சாக்குபோக்குரைப்பானென்றே.

இ-ள். கடன் கேட்கப்போகுமிடத்தில் பணங்கொடுப்பார்களா வென்று ஆருடங் கேட்க வந்தவர்கள் கெற்பத்தைத் தொட்டால் போகு மிடத்தில் கடன் கிடையாதென்றும், துவாரத்தைத் தொட் டால், போய்க்கேட்டவுடனே கடன் கொடுப்பார்களென்றும், வால்மீ கத்தைத் தொட்டால் விருதாவாகப்போய் அலையவேண்டாம். எவ் வெவ்வித பிரயாசைப்பட்டாலும் கடன் கொடுக்கமாட்டான் என்று சொல்லுவாய் எ-று. 88

வர்த்தகஞ் செய்வதற்காக அறிவது.

வர்த்தகஞ்செய்தால் லாபங்கிடைக்குமோ வென்று
வந்தாருடங்கேட்போர் கெற்பந்தொட்டால்
வர்த்தகத்தில்லாபமது கிடைத்திடாது
வியாபாரகஷ்டமென்றே தெளிவாய்ச்சொல்லு

தற்சமயத்துவாரத்தைத் தொடுவாரானல்
தகுந்தவிதம்மத்திபமா யிருக்குமென்பாய்
வர்த்தகத்தில்லாபமுண்டு வான்மீகந்தொட்டால்
வகையுடனே கவனித்துச்சொல்லுவாயே.

இ-ள். வர்த்தகஞ் செய்தால் லாபங்கிடைக்குமோ கிடைக்காதோ வென்று ஆரூடங்கேட்க வந்தவர்கள் கெற்பத்தைத்தொட்டால், தான் செய்யும் வர்த்தகத்தில் லாபங்கிடைக்காதென்றும், துவாரத்தைத் தொட்டால் வர்த்தகம் பெருகி பெருமையாய் அதிகரித்து விசேஷ லாபங்கிடைக்குமென்றும், ஆனல் இடையில் நஷ்ட முண்டானலும் கொஞ்சம் அரைகுறையாய் மத்திபமாய் நடக்குமென்றும், வான்மீகத்தைத் தொடுவாரானல் கொஞ்சமும் நஷ்டமில்லாமல் வெகு லாபங் கிடைக்குமென்றும் சொல்வாய் எ-று. 89

கைத்தொழில், உத்தியோகஞ்செய்வது அறிய.

அன்புடனேதொழிலேனும் உத்யோகமேனும்
அகப்படுமாவென்றே ஆரூடங்கேட்போர்
தன்மையுடன்வான்மீகந் தொடுவாரானல்
தற்சமயம்தொழில் உத்யோகங்கிடைக்கும்
வன்மையுடன்கெற்பத்தைத் தொடுவாரானல்
வகையுடனேநாட்சென்றால் கிடைக்கும்பாரே
நன்மையில்லை துவாரத்தைத்தொட்டாரானல்
நடக்காதுதொழில் உத்யோகமென்றநவிலுவாயே.

இ-ள். ஆரூடங் கேட்கவருபவர்கள் தமக்கு உத்தியோகமாவது, கைத்தொழிலாவது கிடைக்குமா வென்றுகேட்பார்களானல், அவர்கள் தொட்டது வான்மீகமானல் உடனே கிடைக்கு மென்றும் கெற்பத்தைத் தொட்டால், சிலநாட்சென்று கிடைக்கு மென்றும், துவாரத்தைத் தொட்டால் எவ்வித பிரயாசைப்பட்டாலும் கிடைக்கா தென்றும் சொல்வாய் எ-று. 90

ஜீவனஞ் செய்வதற்கு சேவகம் கிடைக்குமா, கிடைக்காதா? வென்றறிவது

ஜீவிக்கத்திரவியந்தான் தேடுதற்கு
சேவகஞ்செய்யவே கேட்போர்வந்து

தாவியேகெற்பத்தைத் தொடுவோரானல்
தான்நினைத்தசேவகம் கிடைக்காதென்றும்
மேவியேதுவாரத்தை தொட்டாரானல்
மேதினியில்நாட்சென்று கிடைக்குமென்றும்
ஓவியமாய்வான்மீகந் தொடுவோரானல்
உடனேசேவகங்கிடைத்து வாழ்குவாரே

இ-ள். ஜீவிப்பதற்குத் தகுந்த சேவகம் கிடைக்குமா கிடைக்காதா வென்று கேட்பவர்கள் தொட்டது கெற்பமானல் சேவகம் கிடைக்காதென்றும், துவாரத்தைத் தொட்டால், சிலநாள் பொறுத்து கிடைக்குமென்றும், வான்மீகத்தைத் தொட்டால் உடனே சேவகங் கிடைத்து திரவிய சேகரஞ்செய்து வெகுபெருமையுடனே வாழ்ந்திருப்பார்களென்றும் சொல்ல வேண்டும் எ-று. 91

சிறுபிள்ளையை வித்தியாசாலையில் விடுத்தால் படிப்பு வருமா, வாராதா? வென்றறிவது.

அன்புடனேசிறுபிள்ளை படிப்பானேவென்று
ஆருடங்கேட்போர் கெற்பத்தைதொட்டால்
துன்பமாய்படிக்காமல் மறதியாலே
சொல்வித்தைகற்றுணரா னென்றுசொல்லு
இன்பமாய்துவாரத்தை தொடுவோரானல்
இனிதுடனேவித்தையிலே தேர்ந்துநன்றாய்
நன்மையுண்டு வான்மீகந்தொடுவோரானல்
நலமில்லைபடித்தாலு மென்றுசொல்வாய.

இ-ள். ஆருடங்கேட்க வருபவர்கள் தமது பிள்ளையை வித்யாசாலைக்கனுப்பிவைத்தால் படிப்பு நன்றாய் வருமா, வராதா? வென்று கேட்பார்களானல், அவர்கள் தொட்டது கெற்பமானல் எவ்வளவு கஷ்டப்பட்டுப் படிக்கவைத்தாலும், அப்போதைக்கப்போது மறதியாய் விடுவதுடன் படிப்பு வராமல் மந்தபுத்தியா யிருப்பானென்றும் துவாரத்தைத் தொட்டால் வித்யாசாலையிற் சென்றவுடன் வாத்தியார் சொல்லும் பாடத்தை வரிசைக்கிரமமாய் வாசித்து வித்யாபிவிர்த்தியாய் கல்வியில் தேர்ந்து சகலராலும் புகழ்ந்துரைக்கும் படியான கீர்த்திபெறுவானென்றும், வான்மீகத்தைத் தொட்டால், வாசித்தும் பிரயோசன மில்லையென்றும் சொல்வாய் எ-று. 92

ஆடை ஆபரணம் உடுத்துதற்கு அறிவது.

ஆடை ஆபரணங் களணிவதற்கு
ஆரூடங்கேட்போர்கள் கெற்பந்தொட்டால்
நாடாதேஇச்சமய மென்றுசொல்லி
நலமில்லைஒருமாதம் கழிப்பாயென்பாய்
தேடியே துவாரத்தைத் தொடுவாரானால்
தேவதைக்குப்படைத்துபின் அணிவாயென்பாய்
நாடியேவான்மீகந் தொடுவாரானால்
நன்மையாம் ஆடை ஆபரணம்பூணென்றேதே.

இ-ள். கோடி வஸ்திரம் புதிய ஆபரணம் உடுத்து வதற்கு ஆரூடங் கேட்க வந்தவர்கள் கெற்பத்தை தொட்டால் இச்சமயத்தில் வேண்டாம், இன்னும் ஒரு மாதங்கழிந்த பிறகு அணிந்துக்கொள்வீர் களென்றும், துவாரத்தைத் தொட்டால் உமது இஷ்ட தெய்வத்திற்கு வைத்துப் படைத்த பிறகு அணிந்துக்கொள்ளவும் வான்மீகத்தைத் தொட்டால் உடனே ஆடை ஆபரணம் அணிந்துக்கொண்டால் சவுக் கியமா யிருப்பீர்களென்றும் சொல்லுவாய் எ-று. 93

திரவியத்தைச் சேர்த்துவைப்பதற்கு சுபாசுப பலன் சொல்வது.

தான்தேடும்திரவியத்தை சேர்த்துவைக்க
தகுந்தபலன்கேட்போர்கள் துவாரந்தொட்டால்
மேன்மையுடன்வாழ்வுண்டா மென்றுசொல்லு
மெல்லிலனவே கெற்பத்தைதொடுவாரானால்
வீண்பிரயாசையது திரவியத்தை
விருப்பமாய்சேர்த்தாலே கலகமென்றும்
வான்மீகந்தனைத்தொட்டால் சேர்த்தசெல்வம்
வாழ்வுமிகதந்ததனால் பெருகும்பாரே.

இ-ள். மனிதர்களில் சிலர் தான் சேகரிக்கும் திரவியத்தில் செலவானதுபோக மீதியை சேர்த்து வைப்பதற்காக ஆரூடங் கேட்டால் அவர்கள் தொட்டது துவாரமானால் அதிகமாய் பொருள் சேர்ந்து பெருவாழ்வுண்டாகு மென்றும், கெற்பத்தைத் தொட்டால், சேர்த்து வைக்கும் பொருளால் கலகம் உண்டாகு மென்றும், வான்மீகத்

தைத் தொட்டால் தான் சேர்த்துவைக்கும் திரவியத்தினல் மேலும், மேலும் கீர்த்தியும் வாழ்வும் பெருமையு முண்டாகுமென்று சொல்வாய் எ-று. 94

தனது இஷ்ட தெய்வபிரார்த்தனை விரதமிருக்க சுபாசுப பலன் கவனிப்பது.

இஷ்டதெய்வபிரார்த்தனையின் விரதத்திற்கு
இனியசுபாசுப பலனை விரும்பிக்கேட்டால்
கஷ்டமாம் துவாரத்தைதொட்டதாலே
நலமில்லையென்றுரைப்பாய் அவர்கள்பின்னும்
இஷ்டமுடன்வான்மீகந் தொடுவாராகுல்
இனிமைசேர்சுபபலனே நடக்குமென்றும்
கிட்டமேகெற்பத்தைத் தொடுவாராகுல்
கீர்த்தியுண்டு பக்தியினுல்வாழ்குவாரே.

இ-ள். விரத மிருந்தால் நன்மையாகுமா? துன்பமாகுமா? என்று ஆருடங் கேட்கவந்தவர்கள் தொட்டது துவாரமாகுல், அந்த விரத நாட்களில் பலவிதமான கலகங்களும் கஷ்டங்களும் நேரிடுமாகையால் அனுஷ்டிக்கலாகாதென்றும், வான்மீகத்தைத் தொட்டால் பலவித மான நன்மையும், சுபபலன்களும் நடப்பதுடன் வாழ்வும் பெருமையும் கீர்த்தியும் உண்டாகு மென்றும் கெற்பத்தைத் தொட்டால் தெய்வபக்தியும் கீர்த்தியும் பலவித நன்மையும் நடக்கு மென்றும் சொல்வாய் எ-று. 95

வியாதியஸ்தர் அவிழ்தம் உண்பதற்கு ஆருடத்தில் கவனிப்பது.

கன்மநோய்தீர்வதற்கு அவிழ்தமுண்ண
கழறுவீராருட மென்றுகேட்போர்
அன்புடனேவான்மீகந் தொடுவாராகுல்
அப்போதேமருந்துண்டால் வியாதிநீங்கி
நன்மையாயிருக்குமென்பாய் கெற்பந்தொட்டால்
நலமில்லை அவுஷத்தாலென்றேசொல்லு
துன்பம்போம்வேறு மருந்துண்பாராகுல்
துவாரத்தைதொட்டாலே யென்றுரைப்பாய்.

இ-ள். வியாதியுடையவர்கள் அவிழ்தம் புசித்தால் தீருமோ தீராதோவென்று கேட்டால் அவர்கள் தொட்டது வான்மீகமானல் அந்த அவிழ்தம் புசித்தவுடனே சரீராரோக்யமாய் சவுக்கிய மடைவாரென்றும், கெற்பத்தைத் தொட்டால் அவ்வியாதி விலகாதென்றும், துவாரத்தைத் தொட்டால் மற்றொரு அவுஷதத்தால் சவுக்கியமாகு மென்றும் சொல்வாய் எ-று. 96

தீண்டிய விஷம் தீருமோ தீராதோ? என்று அறிவது.

தீண்டியதோர்விஷம்நீங்க கெற்பந்தொட்டால்
திருமந்தகொடிய விஷமென்றுரைப்பாய்
பூண்டதுன்பந்தீரும் கொஞ்சநேரத்திற்குள்
பொருந்தியவான்மீகத்தை தொட்டதாலே
நீண்டதுன்பத்தால்துடிப்பார் துவாரந்தொடடால்
நிற்காதுவிஷநோயும் மீளாதென்று
வேண்டிக்கொள்வீரிஷ்ட தெய்வந்தன்னை
வேதனைதீர்ந்திடுவீ ரென்றுரைப்பாய்தானே.

இ-ள். விஷந் தீண்டியதனல் மனந்துடித்துப் பரதவித்துக்கொண்டு வந்தவர்கள் கெற்பத்தைத் தொட்டால் பயப்படாதேவிஷந்தீர்ந்து சுகமா யிருப்பாயென்று வான்மீகத்தைத் தொட்டால் விஷமதிகரித்தும் துன்பஞ் செய்யாதென்று துவாரத்தைத் தொட்டால் விஷம் நீங்காமல் பலவிதமாய்க் கஷ்டப் படுத்தும் ஆகையால் அவர்களின் இஷ்ட தெய்வத்தைப் பூசித்து நேசித்துப் பிரார்த்தனை செய்துக்கொண்டால் சவுக்கியமாகு மென்றும் சொல்வாய் எ-று. 97

வந்தநோய் விலகுமா வென்று அறிய.

வந்தநோய்தீருமோ வென்றுகேட்போர்
மனமகிழ்ந்து கெற்பத்தைத்தொடுவாரானல்
எந்தவிதமானலும் தீருமென்பாய்
இனிதுடனேவான்மீகந் தொடுவாரானல்
சிந்தைமெலிந்துருகாதே உந்தன்நோய்தான்
சிறிதுநாட்பொறுத்தகலு மென்றுரைப்பாய்
நொந்திடுவோர் துவாரத்தை தொடுவாரானல்
நோய்தணியாதென்றுரைத்து அனுப்புவாயே.

இ-ள். வியாதியஸ்தர் வந்து தமக்குற்ற நோய் தீருமோ வென்று கேட்டால் அவர்கள் தொட்டது கெற்பமானால், எவ்விதமானாலும் அவுஷதாதிகள் புசித்து சுகமடைவார்களென்றும், வான்மீகத்தைத் தொடுவார்களானால், பலவிதமான மருந்துகள் புசித்துக் கொஞ்சங் கொஞ்சமாய்ச் சிறிது நாளைக்குள் வியாதிவிலகி சவுக்கியமடைவார்களென்றும், துவாரத்தை தொடுவார்களானால் வந்த வியாதிக்கு எந்த மருந்தைப் புசித்தாலும் தணியாமல் கஷ்டப்பட்டு வருந்தி கவலையடைந்தவர்களாய் வியாதி மேலும் மேலும் அதிகரித்து நோயாளியாய் வியாதி நீங்காதென்று சொல்லுவாய் எ-று. 98

காணாதிறந்தவன் காரணமறிய.

கண்ணிற்காணாத தொருவனிறந்தானென்னும்
காரணத்தைக்கேட்போர்கள் துவாரந்தொட்டால்
எண்ணியதோர் மனிதனுக்கு மாணாபத்து
எய்தியதுவென்றுரைப்பாய் கெற்பந்தொட்டால்
மண்மீதிலுயிருடனிருக்கின்றானென்றோது
வான்மீகந்தன்னையே தொட்டாரானால்
மண்பெண்பொன்னாசைதனை விட்டொழித்து
மரணமடைந்தானென்றே சொல்லுவாயே

இ-ள். தமது கண்ணிற் காணாத இடத்திலிருப்பவர் இறந்து போனார்களென்று யாராயினும் வந்து சொன்னால், அவ்வார்த்தையைக் கேட்டு சந்தேகமுடன் வந்து ஆரூடங் கேட்பவர்கள் தொட்டது துவாரமானால் மாணாபத்தாயிருக்கிறானென்றும், கெற்பத்தைத் தொட்டால் உயிருடனே இருக்கிறானென்றும், வான்மீகத்தைத் தொட்டால் மண்ணாசை, பெண்ணாசை பொன்னாசையெனும் மூவாசையையும் விடுத்து மரணமடைந்தது உண்மை யென்று சொல்லுவாய் எ-று. 99

துர்க்குணத்தால் சொன்னதோ வென்றறிவது.

வஞ்சகமாய்சொன்னாரோ வென்றாய்ந்து
வந்தாருடங்கேட்போர் கெற்பந்தொட்டால்
அஞ்சாதே அவ்விதமாயில்லையென்று
அனுப்பிவிடு துவாரத்தைத்தொட்டாரானால்
எஞ்சியவீண்வார்த்தை இறக்கவில்லை
இப்போதெகாணலா மென்றுசொல்லு

மிஞ்சியேவா ன்கந் தொடுவாரானுல்
மரணமுற்றதுண்மையென்று சொல்லுவாயே.

இ-ள். இதற்கு முன்பாட்டில் கண்ணிற் காணுத இருப்பவரின் மரணவதந்திதுர் அபிப்பிராயத்தின்மேல் சொன்னுர்; என்று கேட்டு கெற்பத்தை தொட்டால் அவர் சொன்னது துர் எண்ணத்துடன் இல்லை யென்றும் துவாரத்தை தொட்டால் இறக்க வில்லையென்றும் வான்மீகத்தை தொட்டால் மாண முற்றது உண்மை யென்றும் சொல்வாய் எ-று. 100

ஒருவன் சொன்னவார்த்தை உண்மையோ வென்றறிய.

ஒருவனுரைத்தது பொய்யோநிஜமோவென்று
உரைத்திடுவாயென்றவர்கள் கெற்பந்தொட்டால்
கருவமாயுரைத்திட்டான் பொய்யென்றோது
கலவரமாய்த்துவாரத்தை தொட்டாரானுல்
உறுதியாய்ச்சொன்னது மெய்யென்றேசொல்லு
உத்தமனேவான்மீகந் தொடுவாரானுல்
தருணமில்லாவிட்டாலும் பிறகுமெய்யாய்
சரியாகக்காண்பா யென்றேதுவாயே.

இ-ள். தனக்கொருவன்சொன்னது மெய்யோபொய்யோ வென்று ஆரூடங் கேட்க வந்தவர்கள், கெற்பத்தைத் தொட்டால் கர்வமாய் ஏமாற்றுந் தன்மையான பொய்யைச்சொன்னுன் எனறும், துவாரத் தைத் தொட்டால் உண்மையான வார்த்தைச் சொன்னுனென்றும் வான்மீகத்தைத் தொடுவாரானுல், சொன்னது உண்மையே ஆனுல் தற்சமய மில்லாவிட்டாலும், பிறகு உண்மையை நீயே கவனித்துக் கொள்வாயென்றும் சொல்வாய் எ-று. 101

மனை வீடு நிலம் வாங்குவதற்கு அறிய.

வீடுமனைநிலப் பூமி வாங்குதற்கு
விரும்புவோர் ஆரூடங்கேட்பாராகில்
வாடுங்கெற்பந்தனைத் தொட்டாலிந்தநாளில்
வாங்குதற்குமுடியாதென்றே யுரைப்பாய்
நாடும்வான்மீகத்தைத் தொடுவாரானுல்
நாட்சென்று பூமிமனைவாங்குவார்கள்

மாடுமனைமக்கள்விர்த்தி துவாரந்தொட்டால்
மகிழுடனே நிலம்வீடுவாங்குவாரே.

இ-ள். வீடாகிலும், மனையாகிலும், பூமியாகிலும் வாங்கு வதற்காக நினைந்து ஆருடங் கேட்க வந்தவர்கள் கெற்பத்தைத் தொட்டால் இந்த சமயத்தில் வாங்குவதற்கு முடியா தென்றும், வான்மீகத்தைத் தொடுவாரானால் சிலநாள் பொறுத்துதான் வாங்கமுடியு மென்றும், துவாரத்தைத் தொடுவாரானால் இக்சமயமே தாங்கள் நினைத்தமனை, வீடு, பூமி, வாங்குவீர்களென்பதாய்ச் சொல்வாய் எ-று. 102

வாதிபிரதிவாதி வியாச்சிய தீர்மான மறிய.

தான்தொடுத்தவியாச்சிய மெப்படியோவென்று
தான்கேட்போர் துவாரத்தைதொடுவாரானால்
வீண்வழக்குஅநுகூலந் தனக்கேநன்மை
விசனியாதே ஜெயந்தானென்றுசொல்லு
ஆண்மையுடன் கெற்பத்தைத்தொட்டாரானால்
அன்பாயிருகக்ஷி சமாதானமாகும்
வான்மீகந்தொட்டாலெதிரிஜெயிப்பாரென்றும்
விளம்புவாய் ஆருடங்கேட்போருக்கே.

இ-ள். தங்களுடைய வியாஜ்ஜியம் எவ்விதமாய் முடியுமோவென்று ஆருடங் கேட்பவர்கள் தொட்டது துவாரமானால் அந்தவியாஜ்ஜியத்தில் எதிர்கட்கு ஜெயங் கிடையாது தனக்கே நன்மையாகுமென்றும், கெற்பத்தைத் தொட்டால் இருகக்ஷியும் சமாதானமாய் விடுமென்றும், வான்மீகத்தைத் தொட்டால் எதிரி ஜெயிப்பானென்று சொல்லுவாய் எ-று. 103

எதிரிகளின் தொடுவழக்கின் கலகமறிய.

எதிரிகளின்வீண்வழக்கின் கலகந்தானும்
எப்படியாமோவென் றுருடங்கேட்டால்
மதித்தகெற்பந்தொட்டாலே கலகமில்லை
மனநடுக்கமில்லையென்று தெளிவாய்ச்சொல்லு
அதிதுரிதமாகவே துவாரந்தொட்டால்
அச்சம்வந்துநீங்குமென்று சொல்லுவாயே
சதிராகவான்மீகந் தொடுவாரானால்
சச்சரவால்கலகமும் உண்டென்றேசொல்லு.

இ-ள். எதிரிகளின் தொடுவழக்கினாலுற்ற வீண்கலகத்தினால் மனந்திகைத்து வந்து ஆரூடங்கேட்போர் கெற்பத்தைத் தொட்டால் கலகமில்லையென்றும், அதனால் யாதொரு பயங்காமும் மனநடுக்கமில்லையென்றும் சொல்லுவாய், துவாரத்தைத் தொடுவாரானால், அச்சமும் பயங்கரமும் இகிலும் வந்து நீங்கிவிடுமென்றும், வான்மீகத்தைத் தொடுவாரானால், சண்டை சச்சரவும் கலகமும் உண்டாகுமென்றும் சொல்லுவாய் எ-று. 104

பகைவர் சண்டையில் ஜெயாபஜெயமறிய.

சத்துருவின்சண்டையில் தன்ஜெயமோவென்று
சந்தோஷமாய்வந்து கேட்பாராகில்
அத்ததியேகெற்பத்தைத் தொடுவாரானால்
அஞ்சியேஅபஜெயமாய்ப் போவீரென்பாய்
ஒத்துப்போய்விடுவார்கள் துவாரந்தொட்டால்
ஒருபோதும் கலகமில்லையென்றேசொல்லு
இத்ததியேவான்மீகந் தொடுவாரானால்
எதிரிபடையை ஜெயிப்பீரென்றேசொல்லு.

இ-ள். பகைவர்களின் சண்டையில் தமக்கு ஜயமாகுமா அபஜெயமாகுமா வென்று ஆரூடங் கேட்கவந்தவர்கள் கெற்பத்தைத் தொடுவாரானால், எதிரியின் படைக்கு அஞ்சி இகிலுற்று அபஜெயமடைந்து தோல்வி யடைவீர்களென்றும், துவாரத்தைத் தொடுவாரானால் இருபடைகளும் சமாதானமாய் ஒற்றுமையடைந்து சமாதானமாய்விடுவார்களென்றும், வான்மீகத்தை தொடுவாரானால் எதிரிபடையை ஜெயித்து தாங்களே ஜயம் பெறுவார்களென்றும் சொல்லுவாய் எ-று. 105

இராஜாங்கத்தார் சண்டையின் விபரமறிய.

தமதுபடைஜெயிக்குமோ ஜெயிக்காதோவென்று
தார்வேந்தர்க்காகவே ஆரூடங்கேட்போர்
கமழ்கெற்பந்தனைதொட்டால் சிறிதுநாளில்
கலகமுண்டாகுமென்று தெளிவாய்ச்சொல்லு
நமக்குஜெயமாகுமென்று வான்மீகத்தை
நாடியேதொட்டால் தன்படைஜெயிக்கும்
சமமாகும்துவாரத்தைத் தொடுவாரானால்
சமாதானமாகுமென்று சொல்லுவாயே,

இ-ள். வேற்றரசர் படையெடுத்து வந்து தமது அரசனிடத்தில் சண்டை செய்தால் சண்டையின் விபரமெவ்விதமாகு மென்று ஆரூடங் கேட்கவந்தவர்கள் கெற்பத்தை தொட்டால் சிறிது நாளில் கலகமுண்டாகு மென்றும் வான்மீகத்தைத் தொட்டால் தமது சேனைகள் எதிரிகளின் சேனைகளை அடித்துத் துரத்தி ஜெயம்பெற்று வருமென்றும், துவாரத்தைத் தொட்டால் தமதரசனும் அந்நிய நாட்டரசனும் சமாதானமாவதுடன் இருதிறத்தார் படைகளும் நேசமாயிருப்பார்களென்று சொல்லவும் எ-று. 105

தமதுசேனைகளுடன் பகைவரிடத்தில் சண்டை செய்வதற்கு போகலாமா வென்றறிய

வன்மையாய்எதிரியுடன் சண்டைசெய்ய
வகையுடனேசேனைகளை சேர்த்துப்போனல்
நன்மையாய்ஜெயிப்போமோ வென்றுகேட்போர்
நலமுடனேதுவாரத்தைத் தொடுவாரானல்
அன்புடனேதன்சேனை ஜெயிக்குமென்றும்
அமர்முனையில்சேதமுண்டு கெற்பந்தொட்டால்
தன்மையாய்வான்மீகந் தொடுவாரானல்
தன்சேனைஎதிரிகளை துரத்தும்பாரே.

இ-ள். தமது பகைவர்களுடன் யுத்தஞ் செய்து ஜெயம்பெறவேணுமென்று சேனைகளை சேர்த்துக்கொண்டு போகிறவர்கள் ஜெயாபஜெயம் எந்தபக்கத்திலென்று ஆரூடங்கேட்க வந்தவர்கள் துவாரத்தைத் தொட்டால் தன்சேனைகள் எதிரியின் சேனைகளை ஜெயிக்குமென்றும், கெற்பத்தைத் தொட்டால் தமது சேனைகள் எதிரிகளினல் அடியுண்டு சேதமாகுமென்றும், வான்மீகத்தைத் தொட்டால், தமது படைவீரர் மகாசமர்த்துடனே எதிரிகளின் சேனைகளை யெல்லாம் சின்னபின்னமாயடித்துத் துரத்துவார்களென்று சொல்வாய் எ-று. 106

குற்றவாளியின் சிறை நீங்குமா வென்றறிவது.

சிறையிலுற்ற குற்றவாளிவிடுதலைக்குச்
சிந்திப்போர் கெற்பத்தைதொடுவாரானல்
சிறையிருப்பதுண்மையென்றே சொல்லுவாயே
சிக்கெனவே துவாரத்தைத் தொடுவாரானல்

சிறையிருந்து விடுதலையாவாரென்றும்
சொல்லுவாய் வான்மீகந்தொடுவாரானால்
சிறையிருப்புசிறிதுநாளில் தீருமென்று
சித்தமகிழச்சொல்வாய் தெளிவாய்த்தானே.

இ-ள். குற்றவாளியானவன் சிறையிலிருப்பானோ விடுதலையாவானோவென்று ஆரூடங் கேட்கவந்தவர்கள் கெர்பத்தைத் தொட்டால் அவனுடைய குற்றத்திற்குத் தகுந்ததண்டனையின்படி சிறையிருக்க வேண்டு மென்பது உண்மையென்றும், துவாரத்தைத் தொட்டால், சிறிது நாளில் சிறைச்சாலையை விடுத்து விடுதலையாவானென்றும், வான்மீகத்தைத் தொட்டால் சிறைச்சாலையின் விடுதலை சிறிதுநாளில் தீரு மென்றும் எ-று. 107

பூமியில் விதைவிதைப்பதற்கு அறிய.

அன்புடனேபூமியிலே தானியத்தை
அளவுபடியே விதைக்கவேணுமென்று
தன்மையுடன் ஆரூடங்கேட்போர்கெர்பந்
தனைத்தொட்டால் தானியங்கள்செழித்தோங்கி
நன்மையாய்ப்பயிராகி திரவ்யலாபம்
நாடுமேதுவாரந்தான் அரைவாசிலாபம்
வன்மையுடன்வால்மீகந் தொடுவாரானால்
வாடிபயிர்சாவியாய்ப் போகுந்தானே.

இ-ள். பூமியிலே தான்யாதிகளை விதைத்துப் பயிராக்கினால் இலாபம் வருமா வென்று ஆரூடங் கேட்டால் அவர்கள் தொட்டது கெர்பமானால், தான்யாதி பயிராகி செழித்து மேலும் மேலும் விர்த்தியாக வளர்ந்து அதிக திரவியலாபத்தைக் கொடுக்குமென்றும், துவாரத்தைத் தொட்டால் அரைவாசியாய்ப் பயிராகி கொஞ்சமாய் லாபநஷ்டமில்லாமல் சமானமாய்க் கஷ்டத்திற்குத் தகுந்த லாபங்கிடைக்கு மென்றும், வான்மீகத்தைத் தொட்டால், விதைத்தபயிர் சாவியாகி பிரயோசன மில்லாமல் போய்விடு மென்று சொல்வாய் எ-று. 108

கழனியில் போட்டிருக்கும் தானியவிளைவு விபரத்தைக் கவனிப்பது.

கழனியிலேபோட்டிருக்கும் விதைகளெல்லாம்
கதிரோங்கிபயிராமோ வென்றுகேட்போர்

வழங்குந்துவாரந்தொட்டால் பயிர்கொஞ்சமென்றும்
வான்மீகந்தொட்டாலே பயிர்களோங்கி
செழித்தகதிர்பெருகியே விளைந்ததான்யம்
செம்மையாய்முழுலாபக் தருகுமென்றும்
தழைத்தகெற்பந்தனைதொட்டால் கால்வாசியாக
தானியாதிவிளையுமெனச் சாற்றுவாயே

இ-ள். கழனியிலே விதைத்த தான்யங்கள் பயிராகுமோ வென்று ஆரூடங் கேட்கவந்தவர்கள் துவாரத்தைத் தொட்டால் விதைத்த தானியங்களுக்கு கொஞ்சம் விளைவென்றும், வான்மீகத்தைத்தொட்டால், விதைத்த தான்யாதிகள் விசேஷமாய்ப் பயிராகிகதிர்கள் பெருத்து விளைந்து முழுலாபந் தருகுமென்றும், கெற்பத்தைத் தொட்டால் கழனியில் விதைத்த கால்வாசி தான்யங்கள் பயிராகு மென்றும் சொல்வாய். எ-று. 109

தான்யாதிகளின் விலைவாசி விற்பனையை அறிவது.

உலகத்தில்தான்யாதி முதலானதெல்லாம்
உயர்தாழ்வைக்கேட்போர்கள் துவாரந்தொட்டால்
விலைவாசிமுன்போல் தானிருக்குந்தான்ய
விளைவுகளுமப்படியே யிருக்குமென்றும்
நலமுடனேகெற்பத்தைத் தொடுவாரானால்
நன்றாகசெழிப்புடனே யிருக்குமென்றும்
கலங்காமல்வான்மீகந் தொடுவாரானால்
கால்வாசிவிலைகுறையு மென்றுசொல்வாய்

இ-ள். பூமியில் தற்சமயம் தான்யாதிகளின் விலைவாசி எவ்வித மாயிருக்கு மென்று கேட்பவர்கள் துவாரத்தைத் தொட்டால் தான்யாதிகளின் விலைவாசி முன்போலவே தானிருக்கு மென்றும், கெற்பத்தைத் தொட்டால் பூமியிலே தான்யாதி முதலானவைகள் விசேஷமாய் விளைந்து செழிப்பாயிருப்பதுடன் விலைவாசி சகாயமாயிருக்கு மென்றும், வான்மீகத்தைத் தொடுவாரானால் தான்யாதிகளின் விலை குறையு மென்றும் சொல்வாய் எ-று. 110

பிரயாணத்திற்குப் போகும்வழியின் நதிப்பெருக்கத்தின் வெள்ளம் அதிகப்படுமோ குறையுமோ வென்பதறிய

ஆற்றுஜலப்பெருக்கமது வெள்ளமாக
ஆகுமோகுறையுமோ வென்றுகேட்போர்

தோற்றுகின்றகெற்பத்தைத் தொடுவாரானால்
 சிலநேரம் ஊற்றுநீரோடுமென்றும்
வேற்றுஜலம் ஓடுமென்பீர் துவாரந்தொட்டால்
 வேகமாய்வெள்ளம் போமென்பீர்
சாற்றுவீர்வான்மீகந் தொடுவாரானால்
 ஜலம்பெருகிவெள்ளம் போமென்றுசொல்வீர்

இ-ள். பிரயாணிகள் போகும் மார்க்கத்தில் ஆற்றில் வெள்ளம் வருமோ வாராதோவென்று ஆரூடங் கேட்போர் கெற்பத்தைத தொட்டால் வெள்ளம் அதிகரிக்காமல் சிலநேரம் வரையினும் ஊற்றுநீர் பெருகியோடு மென்றும், துவாரத்தைத் தொடுவாரானல் ஆற்றில் வெள்ளம் அதிகமாய் சுழலமிட்டுக்கொண்டு போகும் பிரயாணிகளிறங்கிப்போகலாகாதென்றும், வான்மீகத்தைத் தொடுவாரானல் ஆற்றில் தண்ணீர் வடியாமல் ஜலப்பெருக்கெடுத்து வெள்ளம் வடியாமல் போகுமென்றும் சொல்வாய் எ-று. 111

பூமியில் கிணறுவெட்டுவதற்கு அறிய.

ஜலமருந்தக்கிணறுவெட்ட கேட்போர்வந்து
 சந்தோஷமாய் கெற்பந்தனையேதொட்டால்
ஜலந்தெளிவாய் ஊற்றுநீர்பெருகுமென்று
 சாற்றுவாய் துவாரத்தைதொட்டாரானல்
பலமாகமெத்தத் தண்ணீருண்டென்றும்
 பகருவாய்வான்மீகந் தொடுவாரானல்
நலமில்லைகல்மண்ணும் சேறுண்டென்றும்
 நவிலுவாய் ஆரூடங்கேட்போருக்கே.

இ-ள். தமது மனையில் தாங்கள் நினைத்த இடத்தில் கிணறு வெட்டுவதற்காகவந்து ஆரூடங் கேட்போர்கள் கெற்பத்தைத் தொடுவார்களானல், அந்தஸ்தானத்தில் கிணறுதோண்டினல் ஊற்று நீர் பெருகு மென்றும், துவாரத்தைத் தொட்டால், கிணறு தோண்டும் போதே விசேஷஜலம் பெருக்கெடுத்து சுத்தஜலமாய் வருமென்றும், வான்மீகத்தைத் தொட்டால் கல்லுமணணும் சேறுண்டாகி மனவெறுப்புடையதா யிருக்குமென்றும் சொல்வாய் எ-று. 112

கிணற்றில் ஜலமுண்டோ இல்லையோ வென்பதறிய.

எடுத்தகிணற்றில்ஜலந்தா னுண்டோவென்று
 எதிரில்வந்துகேட்போர் கெற்பத்தைதொட்டால்
அடுததடுத்துஊற்றுநீர் பெருகுமென்றும்

அன்புடனேவான்மீகந் தொடுவாரானால்
தொடுத்தகிணற்றில் கங்கைமிகச்சுரந்து
தெளிவாகஜலம் பெருகுமென்றுசொல்லு
விடுத்துதுவாரத்தையே தொடுவாரானால்
வீணாகும் ஜலங்கிடையாதெனச் சொல்வீரே.

இ-ள். தமது வீட்டிலாகிலும் கழனியிலாவது ஜலம் வேண்டுமென்று கிணறு எடுப்பதற்காக வந்து ஆரூடங் கேட்பவர்கள் வந்து கெற்பத்தைத் தொட்டால் ஊற்றுக்கண்மடை திறந்து ஜலந்தெளிவாக சுரக்குமென்றும், வான்மீகத்தைத்தொட்டால் கிணற்றில் கபகபவென ஊற்றுநீர் விசேஷமாய்ப் பெருகி கங்கை சுரந்து கிணற்றில் எப்போதும் ஜலம் வடியாமலிருக்குமென்றும், துவாரத்தைத் தொடுவாரானால் வீண்பிரயாசையாய்க் கிணறுவெட்டினாலும் சதாகாலமும் ஜலமென்பதில்லாமல் பாழ்கிணறாய் மழைகாலத்தில் கொஞ்சந்தண்ணீறுஞ் சேறுமாயிருந்தாலும் வெய்யற்காலத்தில் காய்ந்தபூமியாயிருக்குமென்றும் சொல்வாய் எ-று. 113

இந்தவருஷத்தில் மழைபொழியுமா வென்றறிய.

அன்புடனேஇவ்வருஷம் மழைபொழிந்து
அவனிசெழிப்பாகுமோ வென்றுகேட்போர்
தன்மையாய்கெர்பத்தைத் தொடுவாரானால்
தாரணியில் மழைபொழியாதென்றுசொல்லு
நன்மையாய்த் துவாரத்தைத்தொடுவாரானால்
நல்லமழைபொழியுமென்று சொல்லுவாயே
வன்மையாய்வான்மீகந்தன்னை தொட்டால்
வருஷிக்கும்பின்னாலே மழையென்றோது.

இ-ள். இந்த வருஷத்தில் மழைபொழியுமோ? பொழியாதோவென்று ஆரூடங் கேட்போர்கள் கெற்பத்தைத்தொடுவாரானால் கொஞ்சங்கூடமழையும் பொழியிராதாலும் விழாதுயென்று சொல்லுவாய் துவாரத்தைத் தொட்டால், நல்லமழை பொழியும் பஞ்ச மில்லையென்றுசொல்வாய் வான்மீகத்தைத் தொடுவாரானால், பின்னாலே நல்ல மழை பொழிந்து நாடு செழிக்குமென்று சொல்லுவாய் எ-று. 114

மாதமழை பொழியுமா வென்றறிய.

இந்தமாதத்தில் மழைபெய்யுமோவென்று
அன்பாகவந்து ஆரூடங்கேட்போர்

சந்தோஷமாய் துவாரத்தைத்தொடுவாரானால்
சரமாரிபெருமழையாய்ப் பொழியுமென்பாய்
அந்தமுடன்வான்மீகந் தொடுவாரானால்
அவனியிலேதுளிதூரல் விழாதென்றோது
விந்தையாய்கெற்பத்தை தொடுவாரானால்
விசேஷமில்லை ஒருமழைபொழியுந்தானே.

இ-ள். இந்த மாதத்தில் மழைபொழியுமா, பொழியாதோ வென்றஆரூடங் கேட்கவந்தவர்கள் துவாரத்தை தொட்டால் விசேஷமாய் பெருமழை பொழியு மென்றும், வான்மீகத்தைத் தொடுவாரானால் துளிதூரல் கூட பூமியில் விழாதென்றும் சொல்லுவாய். கெற்பத்தைத் தொட்டால் விசேஷமாய் மழைபொழியா விட்டாலும், ஒரு மழையாவது பொழியுமென்று சொல்வாய் எ-று. 115

மாடுகன்று வாங்குவதற்கு ஆரூடங்கேட்பது.

மாடுகன்றுவாங்குதற்கு பிரியமாக
வந்தாரூடங்கேட்போர் துவாரந்தொட்டால்
நாடும்பசுகன்றுடனே வாங்கிவந்தால்
நலமுடனேபால்பாக்யம் பெருகுமென்பாய்
கேடுண்டாம்கெற்பத்தைத் தொடுவாரானால்
கெடுதியுண்டாம் நாற்கால்ஜீவன்வாங்காதென்பாய்
நீடுவான் மீகந்தொடுவாரானால்
நினைத்ததொருமாதத்தில் வாங்கநன்றே.

இ-ள். பசுவுங்கன்றும் வாங்கவேணு மென்று ஆரூடங்கேட்பவர்கள் துவாரத்தை தொட்டால் பசுவுங்கன்றும் வாங்கினால் மிகவும் உத்தமமென்றும், பால்பாக்கியம் விசேஷமாயுண்டாகு மென்றும் சொல்லுவாய், கெற்பத்தைத் தொட்டால் நாற்கால் ஜீவன்வாங்கினால் கெடுதியுண்டாகு மென்றுசொல்லுவாய். வான்மீகத்தைத் தொடுவாரானால் கன்றும்பசுவும் ஒருமாதம் பொறுத்து வாங்கினால் உத்தமமாகுமென்று சொல்லுவாய் எ-று. 116

காணாமற்போன நாற்கால்ஜீவன்கள்
அகப்படுமா? அகப்படாதா? வென்பதறிய.

மாடாடுமுதலான நாற்கால்ஜீவன்
மந்தைவிடுத்தேடிய தகப்படுமாவென்று
வாடியேகேட்போர்கள் கெற்பந்தொட்டால்
ஓடிவரும்சீக்கிரத்தி லென்றுரைப்பாய்

நாடியேதுவாரத்தைதொடுவாரானால்
நலமில்லை அகப்படாதென்றேசொல்லு
தேடியேவான்மீகந் தொடுவாரானால்
சிலநாட்சென்றால் வருகுமென்றேசொல்வாய்.

இ-ள். ஆடுமாடு முதலாகிய நாற்கால் ஜீவன்கள் மந்தையை விடுத்து வெளிதாண்டிப்போனதைத் தேடிப்பார்த்தால் அகப்படுமோவென்று ஆரூடங்கேட்க வந்தவர்கள் கெற்பத்தைத் தொட்டால் இனி அவைகளைத் தேடியலைய வேண்டாம் சீக்கிரமாய்த் தானாகவே ஓடி வருகுமென்றும், துவாரத்தைத் தொட்டால் எவ்வெவ்விதமாய்த்தேடியலைந்தாலும் அகப்படாதென்றும், வான்மீகத்தைத் தொட்டால் சில நாட் சென்றபிறகுதானே வந்து விடு மென்றும் சொல்லுவாய் எ-று.

தன்மனதிலிருப்பதென்னவென்று ஆரூடத்தாலறிவது.

மனதினிலேநினைத்ததைசொல் லென்றாரூடம்
மகிழ்ந்துகேட்போர் கெற்பந்தொடுவாரானால்
நினைத்ததுபக்ஷியைச்சேர்ந்த வஸ்துவென்றும்
நிசமாய்துவாரந்தொட்டால் கல்மண்சேர்ந்த
இனமென்றும்சொல்வாய் நீவிபரமாக
இனிதுடனேவால்மீகந் தொடுவாரானால்
கனிகாய்பூகிழங்கு முதலானவஸ்து
கருத்திலெண்ணி யிருக்கின்றாயென்றேசொல்லு.

இ-ள். ஆரூடங் கேட்கவந்தவர்கள்தான் நினைத்த வஸ்துவைச் சொல்வாயென்று கேட்பார்களானால், அவர்கள் தொட்டது கெற்பமானால் பக்ஷியைச் சேர்ந்தவகைகளென்றும், வான்மீகத்தைத் தொட்டால் காய், கனி, கிழங்கு புஷ்பவகைகளென்றும், துவாரத்தைத்தொட்டால் கல், மண், சேர்ந்தவஸ்து வென்றும் சொல்லுவாய் எ-று. 118

வேசிவீட்டுக்குபோவதற்காக ஆரூடங்கேட்பதறிய.

வேசிவீட்டுக்குப்போய் சுகாசுகங்கள்
விரும்பியேயனுபவிப்போ ராரூடங்கேட்டால்
நேசமுடன்துவாரத்தைத் தொடுவாரானால்
நேர்ந்தசுகானந்தலாப முண்டென்றோது
பாசமாய்வான்மீகந் தொடுவாரானால்
பணமெல்லாம்செலவாகும் யென்றுசொல்வாய்
காசுபணம்செலவாகும் கெற்பந்தொட்டால்
கலகமுடன்சண்டையுண்டா மென்றுசொல்வாய்,

இ-ள். வேசி வீட்டுக்குப்போய் சுகானந்தமாயிருப்பதற்காக மனதினில் நினைந்து வந்து ஆரூடங் கேட்போர்கள் துவாரத்தை தொட்டால் சுகானந்த சரசமாய் போகபாக்கியங் கிடைக்கு மென்றும், வான்மீகத்தைத் தொடுவாரானுல் கையிலுள்ள பணமெல்லாம் செலவாகு மென்றும், கெற்பத்தைத் தொட்டால் காசுபணம் செலவாவதுடன் கலகமும் வம்பும வாதும் சண்டை சச்சரவும் விசேஷமாய் நேரிடுமென்றும் சொல்வாய் எ-று. 119

கடல் மார்க்கமாய்க் கப்பல் யாத்திரை செய்யலாமா

வென்று கேட்பதை அறிய

கடல்மார்க்கமாகவே தீவிற்செல்ல
 கப்பல்யாத்திரைசெய்ய வேண்டுமென்போர்
இடமாகதுவாரத்தைத் தொடுவாரானுல்
 தீரமாய்ப்போகலாம் சுகமென்றேது
அடைவுடனே கெற்பத்தைத்தொடுவாரானுல்
 ஆழியில்கப்பல்யாத்ரை வேண்டாமென்றும்
தடைசெய்வாய் வான்மீகந்தொடுவாரானுல்
 தற்சமயம்போனுல் சுகமில்லையென்பாய்

இ-ள். தீவாந்திரயாத்திரை செய்வதற்காக கப்பலேறி கடல்மார்க்கமாக போகலாமா வென்று ஆரூடங் கேட்போர் துவாரத்தைத்தொட்டால் வெகுதைரியமாய் கப்பலேறி கடல்மார்க்கமாய் சுகமாய் யாத்திரைசெய்யலா மென்றும், கெற்பத்தை தொட்டால் கப்பலேறி கடல் யாத்திரை வாசியாய்ப் போனுல் அபாயமுண்டாகு ஆகையால்போக வேண்டா மென்றும் சொல்வாய் வான்மீகத்தைத் தொடுவாரானுல், தற் சமயம் போனுல் சுகமில்லை யென்று சொல்லுவாய் எ-று. 120

க்ஷேத்ரயாத்திரை செய்வதறிய.

அன்புடனே ஸ்தலக்ஷேத்ரயாத்ரைசெய்ய
 ஆரூடங்கேட்போர்கள் கெற்பந்தொட்டால்
நன்கல்லஸ்தல க்ஷேத்ரயாத்ரைசெய்ய
 நடவாதென்றேசொல்லு துவாரந்தொட்டால்
தன்மையாய்சிலநாட் பின்யாத்ரைசெய்ய
 தகுதியென்று நலமுடனேவிபரமாய்ச்சொல்
இன்புடனேவான்மீகந்தனையே தொட்டால்
 இக்ஷணமேயாத்ரை செய்ய நலமென்றேது.

இ-ள். திவ்ய ஸ்தலயாத்ரை க்ஷேத்ரயாத்ரை செய்வதற்கு மனதி லெண்ணி ஆரூடங்கேட்க வந்தவர்கள் கெற்பத்தைத்தொட்டால் அவர் ஸ்தலயாத்திரையாகிலும், க்ஷேத்ரயாத்திரை யாகிலும் செய்வதுதகுதி யல்ல வென்றும், எவ்வித பிரயாசை யெடுத்தாலும் யாத்திரை வாசி யாய்ப் போகமுடியாதென்றும், வான்மீகத்தைத் தொட்டால் இக்ஷ ணமே யாத்திரை செய்யலாமென்றும், அதனால் மிகவும் சவுக்கியமும் மேன்மையும் கீர்த்தியும் பெருகி நன்மையுண்டாகு மென்றும், துவார த்தைத் தொட்டால், சிலநாட் சென்றபிறகு யாத்திரை செய்யலாமென் றும் அதனால் வெகு நன்மையும், சிலாக்கியமும், பெருமையும், புக ழுங்கீர்த்தியு முண்டாகு மென்று சொல்லுவாய் எ-று. 121

ஊர்பிரயாணத்தின் வழியில் பயமுண்டோ வென்றறிய.

ஊர்ப்பயணம்போவோர்கள் வழியிலேபயந்தான்
உண்டோவென்று கெற்பந்தொடுவாரானால்
நேர்மையுடன் துன்பமுடன்பயமுங்கஷ்டம்
நேரிடுமென்றேசொல்லு துவாரந்தொட்டால்
பார்மீதுயாதொருகஷ்டமுமிராது
பயங்கரமுமில்லையென்று தெளிவாய்ச்சொல்லு
தார்மீதுவான்மீகந் தொடுவாரானால்
தைரியமுண்டுபயமில்லை சுகமென்றோது.

இ-ள். ஊர்ப்பிரயாணம் போவதற்குப்பிரியப்படுவோர் போகும் வழியில் பயமுண்டோ வென்று ஆரூடங்கேட்டால், அவர்கள் தொட் டது கெறபமானால் துன்பமும், துயரமும் பயங்காமும் கஷ்டமும் கவலையும நேரிடுமென்றும், துவாரத்தைத் தொட்டால் போகும் வழி யில் யாதொருபயங்கரமும் கஷ்டமு மில்லையென்று சொல்வாய் வான் மீகத்தைத் தொடுவாரானல் வழிப்பிரயாணஞ் செய்யும்போது யாதொ ருபயமு மில்லாமல், சுகானந்தமாய் தைரியத்துடன் மனோற்சாகமாய்ப் போவார்களென்றுசொல்வாய் எ-று. 122

தேசயாத்திரை, ஊர்ப்பிரயாணம் போவதற்கு அறிய.

அன்புடனேஊர்ப்பயணம் தேசயாத்ரை
அகமகிழ்ச்சியாய்ப் போகவேணுமென்று
தன்மையாய்க்கேட்போர்கள் கெற்பந்தொட்டால்
தகாதுகொடித்தடையென்றே விபரமாய்ச்சொல்

அன்புடனேதுவாரத்தைக் தொட்டாரானல்
இனிதுடனேபிரயாணஞ் செய்வதற்கு
நன்மையென்றேசொல்வாய் வான்மீகந்தொட்டால்
நலமில்லைவியாதியுண்டென்றே யுரைப்பாய்.

இ-ள். தேசயாத்திரையாகிலும், ஊர்ப்பிரயாண மாகிலும் போவதற்கு ஆருடம் கேட்போர்கள். கெற்பத்தைத் தொடுவாரானல் கொடித்தடையாகும் போல் பலகஷ்டம் நேரிடும் போகக்கூடா தென்று சொல்வாய். துவாரத்தைத் தொட்டால் மனமகிழ்ச்சியுடனே பிரயாணஞ் செய்யலாம் அதனுல் வெகுநன்மையுண்டாகு மென்று சொல்வாய் வான்மீகத்தைத் தொட்டால் பிரயாணஞ் செய்தால் வெளிதேசம் போனவர்க்கு உடனே பலவிதமான வியாதியுண்டாகு மென்றும், அதனுல் பலவித கவலையும் கஷ்டமும் நேரிடு மென்றும் சொல்வாய் எ-று.

ஊருக்குபோனவர் வருகையை ஆரூடத்தால் அறிவது.

ஊருக்குப்போனவர்கள் வருவாரோவென்று
ஊக்கமாயாரூடம் வந்துகேட்போர்
நேருடனேகெற்பத்தைத் தொட்டாரானல்
நேர்மையாய்போனவிடம் சுகமென்றோது
ஆரூடவான்மீகந் தொடுவாரானல்
அன்பாயிப்போது வருவாரென்றோது
சீருடனேதுவாரத்தைத் தொட்டாரானல்
சிறிதுநாட்சென்றால் வருவாரென்றோது.

இ-ள். ஊருக்குப் போனவர்கள் வருவாரோ வரமாட்டாரோ? அங்குஎவ்விதமாயிருக்கின்றார்களோ வென்று ஆரூடங் கேட்பவர்கள் கெற்பத்தைத் தொட்டால் போன இடத்தில் சவுக்கியமாயிருக்கின்றார்களென்றும், வான்மீகத்தைத் தொட்டால், இப்போதே வருவார்களென்றும், துவாரத்தைத் தொட்டால், இன்னுஞ்சிறிது நாட் சென்றபின் சந்தோஷமாய் வருவார்களென்றும் சொல்வாய் எ-று. 124

ஸ்திரீகள் தேசத்திற்குப்போன தமது புருஷன் எப்போது வருவாரென்பது அறிய.

தன்புருஷன்வருவாரா வென்றுகேட்கும்
தையலர்கள்கெற்பத்தை தொட்டாலேதான்

அன்பாயிப்போது காண்பாயென்றோது
அத்தருணம்துவாரத்தைத் தொடுவாரானல்
இன்புடனேதுவாரத்தைத் தொடுவாரானல்
இப்போதுவருகுவாரென்றுசொல்லு
நண்மையாய்வாண்மீகந் தொடுவாரானல்
நலமாயோர்மாதஞ்சென்று வருகுவாரே.

இ-ள். ஸ்திரீகள் வெளிதேசத்திற்சென்று தனதுபுருஷன் வீட்டுக்கு எப்போது வருவாரென்று ஆரூடங்கேட்டால் அவர்கள் தொட்டது கெற்பமானல் இப்போதே அவரைக் காணலா மென்றும், துவாரத்தைத் தொட்டால், இப்போது வருவாரென்றும், வாண்மீகத்தைத் தொட்டால் போன இடத்தில் சவுக்கியமாயிருக்கின்றார் இன்னும் ஓர் மாதஞ் சென்றபிறகு வருவாரென்றும் சொல்வாய் எ-று. 125

திருடிக்கொண்டுபோன பொருள் அகப்படுமா? அகப்படாதாவென்பதறிய.

திருடிக்கொண்டுபோனபொருள் அகப்படுமாவென்று
தியங்குவோர்துவாரத்தை தொடுவாரானல்
பொருள்தமக்குமறுபடியும் கிடைக்குமென்றும்
பொருத்தமாய்கவனித்து விபரமாய்ச்சொல்
அருமையாய் வான்மீகந்தொடுவாரானல்
அகப்படும் நான்கிலொருபங்கென்றோது
பொருந்தவேகற்பத்தைத் தொடுவாரானல்
போனபொருள் இனிகிடைக்காதென்றுசொல்வாய்.

இ-ள். திருடர்கள் அபகரித்துக் கொண்டு போனபொருள் கிடைக்குமா கிடைக்காதென்று ஆரூடங் கேட்பவர்கள் கெற்பத்தைத்தொடுவாரானல் திருடிக்கொண்டு போனபொருளை எடுத்தவர் காண்பிக்கமாட்டாரென்றும், எவ்வித முயற்சிசெய்தாலும் போனபொருள்கிடைக்காதென்று சொல்வாய், வான்மீகத்தைத் தொடுவாரானல் போனபொருளில் நான்கிலொரு பங்காயினும் பிரயாசைக்குத் தகுந்தபடியே கிடைக்குமென்றும், துவாரத்தைத் தொடுவார்களானல், கொஞ்சம் பிரயாசையுடன் ஆராய்ந்து பார்த்தால் காணமற்போன பொருளைக்காணலா மென்றும் சொல்வாய் எ-று. 126

திருடரைக் கண்டுபிடிப் பதறிய.

கள்ளர்களைகாணவே வேண்டுமென்று
கருதியேகெற்பத்தைத் தொடுவாரானல்

கள்ளர்களை சுலபமாய்ப்பார்க்கலா மென்றுசொல்லு
காணுந்துவாரந் தொட்டாலொருவாரத்தில்
கள்ளர்களைக் காணலாமென்று சொல்லு
கருணையாய்வான்மீகந் தொடுவாராகில்
கள்ளர்களோ வெளிதாண்டிப் போனாரென்றும்
காணமுடியாதென்றும் சொல்லுவாயே.

இ-ள். திருடர்களைக் கண்டு பிடிக்கலாமோ வென்று சந்தேக முடையவர்களாய் பலவித முயற்சிசெய்து திருடர்களைப் பிடிக்கவேணு மென்று ஆரூடங் கேட்கவந்தவர்கள் கெற்பத்தைத் தொட்டால், திருடிக்கொண்டுபோன கள்ளர்கள் சுலபமாய்க்காணலா மென்றும், துவாரத்தைத் தொட்டால் ஒருவாரத்திற்குள் கள்ளர்களைக் காணலாமென்றும், வான்மீகத்தைத் தொடுவார்களானால் திருடர்கள் வெளிதாண்டி ஓடிப் போனார்கள் இனிமேல் காண முடியாதென்றும் சொல்வாய் எ-று.

ஆபரணாதிகளை அபகரித்தவர்கள் ஆணென்றறிவது.

பொன்நகையைத்திருடிக்கொண்டு போனோர்தன்னை
பொருந்தியே ஆரூடங்கேட்போர்வந்து
அன்புடனேகெற்பமும் துவாரந்தொட்டால்
ஆணபிள்ளை அபகரித்தாரென்றுசொல்லு
தன்மையாய்வான்மீகந் தொடுவாராகில்
தங்கநகைதிருடியவள் பெண்ணென்றோது
இன்னவிதம்ஆரூடம் சொல்வாயாகில்
இதின்விபரமுண்மையெல்லாம் தெரியும்பாரே.

இ-ள். ஆபரணாதிகளை அபகரித்தவர்கள் ஆணோ பெண்ணோ வென்று ஆரூடங்கேட்பவர்கள் கெற்பத்தையாவது துவாரத்தையாவது தொட்டால் ஆபரணாதிகளை அபகரித்தவர்கள் ஆண்பிள்ளைகளென்றும், வான்மீகத்தைத் தொட்டால் பெண்பிள்ளைகள் யென்றும் விபரமாய்ச சொல்வாய் எ-று. 128

ஆபரணாதிகளை அபகரித்தவர்கள் அயலூரா உள்ளூரா வென்பதை அறிய.

தன்னுடைய ஆபரணம் அபகரித்தோர்
தானிருப்பதெந்தவிட மென்றேவந்து

அன்புடனேவான்மீகந் தொடுவாரானால்
அயலூரான அபகரித்துபோனானென்பாய்
உண்மையாய் துவாரத்தைத்தொடுவாரானால்
உள்ளூரான்கைக்கொண்டு போனானென்பாய்
தன்மையாய் கெற்பத்தைத்தொடுவாரானால்
தனைச்சேர்ந்தோரபகரித் தாரென்றேசொல்வாய்.

இ-ள். தம்முடைய ஆபரணாதிகளை அபகரித்துக்கொண்டு போனவர்கள் அயலூரா உள்ளூரா தங்களைச்சேர்ந்தவர்களா வென்று சந்தேகத்துடன்வந்து ஆரூடங் கேட்பவர்கள் வான்மீகத்தைத் தொடுவாரானால் வெளிதேசத்தாரென்றும், துவாரத்தைத் தொட்டால் உள்ளூரானென்றும், கெற்பத்தைத் தொட்டால் தங்களைச் சேர்ந்தவர்கள்தான் அபகரித்தாரென்றும் விபரமாய்ச் சொல்வாய் எ-று. 129

ஆபரணந்திருடிவைத்திருப்பவர் ஆரென்பதறிய.

அன்புடனேஆபரணம் அபகரித்தோர்
ஆரென்று ஆரூடங்கேட்போர்வந்து
தன்மையுடன் துவாரத்தைத்தொடுவாரானால்
தங்ககை ஆண்பிள்ளையெடுத்தானென்பாய
இன்பமாய் கெற்பத்தைத்தொடுவாரானால்
இதற்கும்ஆண்பிள்ளையென்று குறிப்பாய்ச்சொல்லு
நன்மையாய்வான்மீகந்தொட்டால் பெண்தான்
நகையைஅபகரித்தாளென்று றுதியாய்ச்சொல்.

இ-ள். தமது ஆபரணாதிகளை அபகரித்தோர்கள் இன்னாரென்றறிந்து கொள்வதற்காக ஆரூடங்கேட்க வந்தவர்கள் துவாரத்தைத் தொட்டாலும், அல்லது கெற்பத்தைத் தொட்டாலும், ஆபரணாதிகளை அபகரித்தவர் ஆண்பிள்ளையென்றும், வான்மீகத்தைத் தொட்டால் பெண்தான் ஆபரணாதிகளை அபகரித்துக்கொண்டு போனாளென்றும் சொல்வாய் எ-று. 130

காணாதமனிதரின் அளவைகவனிப்பது.

காணாதமனிதர்களின் அளவுதன்னைக்
கண்டுணர்வோர் வான்மீகந்தொடுவாரானால்
கோணாதநெடியோரென் றுரைப்பாய்நீயே
கெற்பத்தைத்தொட்டாலே குறியரென்பாய்

நாணமல்துவாரத்தைத்தொடுவாரானல்
நடுத்தரமானவரென்று றுதியாய்ச்சொல்
வீணகவெவ்வேறாய்ச் சொல்லவேண்டாம்
விபரமாய்கவனித்துப் புகலுவாயே.

இ-ள். தமது பார்வைக்குத் தெரியாத மனிதர்களின் உயர்வு, குறுகல் ஆகிய சரீர அளவை கவனிக்க விரும்புவோர் வந்து ஆரூடங் கேட்டு வான்மீகத்தைத் தொடுவாரானல் நெடியவரென்றும், கெற்பத்தைத் தொட்டால் குறியவரென்றும், துவாரத்தைத் தொட்டால் நடுத்தரமானவ ரென்றும் விபரமாய்ச் சொல்வாய் எ-று. 131

தாம்கோரிய மனிதரிருக்கும் திசை

தான்கோரும்மனிதரெந்த திசையிலுள்ளோர்
தானென்றாரூடத்தை கேட்போர்வந்து
மேன்மையுடன் துவாரத்தைதொடுவாரானல்
மேற்குதிசைகிழக்குதிசை யென்றேசொல்லு
மேன்மையுடன் கெற்பத்தைத்தொடுவாரானல்
கிழக்குதிசைதனிலிருப்பா ரென்றுசொல்லு
வான்மீகந்தொடுவாரான லப்போது
வடக்குதிசைதனி லிருப்பாரென்றேசொல்லு.

இ-ள். தாங்கள் கோரிய மனிதன் எந்த திசையிலிருக்கின்றானென்று கவனிப்பதற்காக வந்து ஆரூடங் கேட்பவர்கள் தொட்டது துவாரமானல் மேற்குதிசை யென்றும், அல்லது கிழக்குதிசை யென்றும் சொல்லுவாய், கெற்பத்தைத் தொடுவாரானல் கிழக்குதிசையென்றும், வான்மீகத்தைத் தொட்டால் வடக்கு திசையென்று சொல்லுவாய் எ-று. 132

கலியாணஞ்செய்தால் நன்மையா கெடுதியா?

நடக்குமா நடக்காதோ வென்பதறிய.

திருமணவைபவந்தான் செய்வதற்கு
சித்தமாய் ஆரூடங்கேட்போர்வந்து
பெருமையாய் கெற்பத்தைதொடுவாரானல்
பேசும்புகழ்கீர்த்தியுண்டு கலியாணஞ்செய்தால்
அருமையாய் வான்மீகந்தொடுவாரானல்
ஆகாதுகலியாண மென்றுசொல்லு

துரிதமாய்துவாரத்தைத் தொட்டாலே
துக்கமுண்டு கலியாணஞ்செய்திட்டாலே.

இ-ள். கலியாணஞ் செய்வதற்காக வந்து ஆரூடங் கேட்பவர்கள் கெற்பத்தைத் தொட்டால் கலியாணஞ் செய்தால் மிகவும், நன்மையும், கீர்த்தியும் பொருந்தி சுகவாழ்வாய் வாழ்ந்திருப்பதற்காகு மென்று சொல்வாய் வான்மீகத்தைத் தொடுவாரானல் தற்சமயம் பலவிதமான தடங்கலும், கலகமுமேற்பட்டு கலியாண மாகாதென்று சொல்லுவாய் துவாரத்தைத் தொட்டால் கலியாணஞ் செய்தால் தீராக்கவலையும் துக்கமும் கஷ்டமும் உண்டாகுமென்று சொல்வாய் எ-று 133

பெண்ணுக்கும் பிள்ளைக்கும் பொருத்தம் பார்க்க.

கலியாணஞ்செய்வதற்கு பெண்ணுக்கும் பிள்ளைக்கும்
காணுகின்றநற்பொருத்த முண்டோவென்று
சலியாமல்கெற்பத்தைத் தொடுவாரானல்
சற்றேனும்பொருத்தமில்லை யென்றுசொல்வாய்
வலுவாகும்துவாரத்தைத் தொடுவாரானல்
வாழ்ந்திருப்பாரென்றுரைப்பாய் வான்மீகந்தொட்டால்
கலியாணப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும்பொருத்தம்
கௌரவமாய்பொருந்து மென்றுரைப்பாய்தானே.

இ-ள். கலியாணஞ் செய்வதற்காக பிள்ளைக்கும் பெண்ணுக்கும் பொருத்தம் சரியாயிருக்குமா வென்று ஆரூடங் கேட்கவந்தவர்கள் கெற்பத்தைத் தொட்டால் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் கொஞ்சமும் பொருத்தமே இல்லையென்று சொல்லுவாய் துவாரத்தைத்தொட்டால் சரியான பொருத்தமாய் அமைந்து வாழ்ந்திருப்பார்களென்றும், வான்மீகத்தைத் தொட்டால் கலியாணமான வுடனே கௌரவமும் பெருமையுமாய் வாழ்ந்திருக்கும்படியான பொருத்தமாய்ப் பொருந்தி யிருக்கு மென்றும் சொல்லுவாய் எ-று. 134

கலியாணப் பெண்ணின் குணத்தையறிய

தற்சமயம்கலியாணஞ் செய்யும்பெண்ணின்
தன்குணத்தையறிவதற்கு துவாரந்தொட்டால்
சொற்பனத்திலுங்கூட நல்லகுணம்யில்லையென்று
சொல்லுவாய் கெற்பத்தைத்தொட்டாரானல்

பற்பலகுணமுள்ள பெண்ணென்றோது
பக்ஷமுடன் வான்மீகந்தொடுவாரானால்
நற்குணமாய்புருஷனுடன் சார்ந்தமாக
நலமாகவாழ்ந்திருப் பாளென்றுசொல்லு

இ-ள். கலியாணப் பெண்ணின் குணமெவ்விதமா யிருக்குமோ வென்று ஆரூடங் கேட்பவர்கள் துவாரத்தைத் தொட்டால் சொற்பனத்திலும் நற்குண மில்லாதவளாய் துர்க்குணமே யுடையவளாயிருப் பாளென்று சொல்லுவாய் கெற்பத்தைத் தொட்டால் நல்லகுண முடையவளாயிருப்பாள் யென்று சொல்லு, வான்மீகத்தைத்தொட் டால், புருஷவிஸ்வாசியாக நற்குணத்துடனே இல்லற தர்மத்தையனு சரித்து குடும்பரக்ஷகியாயிருப்பாளென்று சொல்லுவாய் எ-று. 125

விபசார ஸ்திரீயின் விபரமறிய.

சுபகரமாயிருப்பாளோ இலையோவென்று
சொல்லுவோர் கெற்பத்தைத்தொடுவாரானால்
உபாயமாய்விபசாரஞ் செய்கின்றுளென்று
உரைத்திடுவாய் துவாரத்தைத்தொட்டாரானால்
அபாயமுறும் சோரநாயகனைச்சேர
ஆசையாய்விருப்ப முற்றுளென்றேசொல்வாய்
சுபகரமாய்வான்மீகந் தொடுவாரானால்
சோரமில்லை கற்புடையாளென்றேசொல்லு

இ-ள். ஓர் பெண்மீது சந்தேகங்கொண்டு அவள் விபசாரத்வம் செய்கிறளோ கற்புடையவளா இருக்கின்றளோவென்று ஆரூடங் கேட்பவர்கள் கெற்பத்தைத் தொட்டால் எவர்களுக்குந் தெரியாமல் விபசாரஞ் செய்கிறுளென்றும், துவாரத்தைத் தொட்டால் சோரநாய கனைச்சேர ஆசைப்படுகிறுளென்றும் சொல்வாய் வான்மீகத்தைத்தொ ட்டால், விபசாரத்வ மில்லாமல் கற்புடைய ஸ்திரீயாகவே இருக்கின்று ளென்றும் சொல்லுவாய் எ-று. 136

கலியாணஞ் செய்வதற்குப் பெண்கிடைக்குமா வென்று அறிய.

கலியாணஞ்செய்வதற்கு பெண்ணைப்பார்க்க
கருத்துடனே ஆரூடங்கேட்கவந்தோர்

நலமுடனேவான்மீகந் தொடுவாராகில்
நாடியேசென்றவுடன் பெண்கிடைக்கும்
கலக்கமாய்த்துவாரத்தைத் தொடுவாராகில்
கலியாணப்பெண் கிடைக்காளென்றேசொல்லு
நிலையுடனேகெற்பத்தை தொடுவாராகில்
நின்றுவிடும்கலகத்தா லென்றேசொல்லு.

இ-ள். கலியாணஞ் செய்வதற்காக ஓர் பெண்ணைக் குறித்து இந்தப் பெண் இந்தப்பிள்ளைக்குக் கிடைக்குமா வென்று ஆரூடங் கேட்பவர்கள் வான்மீகத்தைத் தொட்டால் போனவுடன் பெண்கிடைக்குமென்றும் துவாரத்தைத் தொட்டால் அந்தப் பெண்ணுக்காக எவ்வளவு முயற்சி யெடுத்தாலும் கிடைக்காதென்றும் கெற்பத்தைத்தொட்டால் சண்டை சச்சரவினால் கலியாணம் நின்றுவிடு மென்று சொல்வாய் எ-று. 137

ஒருவன் ஒளித்துவைத்த பொருள் காணமுடியுமா வென்பதை அறிய.

மறைத்துவைத்தபொருள் கிடைக்குமாவென்றெண்ணி
மகிழுடனே கேட்போர்கள் துவாரந்தொட்டால்
நிறையுடனேகைகூடு மென்றுசொல்லு
நிதானமாய்வான்மீகந் தொடுவாராகில்
மறைபொருளாய்போனது காணமுடியாதென்று
வழுத்துவாய்கெற்பத்தைத் தொடுவாராகில்
அறைகுவாய்பின்னாலே காண்பாயென்று
அகப்படுந்தவறும லென்றுசொல்வாய்

இ-ள். ஒருவனால் ஒருபொருள் மறைந்திருந்ததைக் காணாமல் தேடியலைந்து ஆரூடங்கேட்க வந்தவர்கள் துவாரத்தைத் தொட்டால் உடனே கைகூடு மென்றும் வான்மீகத்தைத் தொட்டால் மறைபொருளாய்ப் போனது போனது தான் காணமுடியாதென்றும் சொல்லுவாய் கெற்பத்தைத் தொடுவாரானால் காணாமல்மறைந்தபொருள் பிறகு சிறிது நாட்சென்றவுடன் அகப்படு மென்று சொல்வாய் எ-று. 138

இந்தப்பெண்ணுக்கு பிள்ளையுண்டோ வென்பதறிய

அன்புடனிப்பெண்ணுக்குப் பிள்ளையுண்டோவென்று
ஆரூடங்கேட்போர் வான்மீகந்தொட்டால்

கன்மவினையால்பிள்ளைபெறு மலடியென்றும்
கழறுவாய் துவாரத்தைத் தொடுவாரானால்
துன்பமாய் சிசுபிறந்திறந்தேபோகும்
துக்ககரமிதுவென்றே சொல்லுவாயே
நன்மையாம்கெற்பத்தைத் தொட்டாரானால்
நல்லபிள்ளையைப் பெறுவாளென்றேசொல்லு.

இ-ள். இந்தப் பெண்ணுக்குப் பிள்ளைபிறக்குமோ வென்று ஆரூடங்கேட்பவர்கள் வான்மீகத்தைத் தொட்டால் அவளுடைய கன்மவினையினால் பிள்ளை பெறு மலடியென்று சொல்வாய் துவாரத்தைத் தொட்டால், பலவித துன்பங்கள் நேரிட்டு பிறந்த குழந்தையும் நிலைக்காமல் இறந்துவிடு மென்றும் சொல்வாய் கெற்பத்தைத் தொட்டால் நல்ல உத்தம பிள்ளைகள் பிறந்து சுகானந்தமாய் வளர்ந்து சரீராரோக்கிய தீர்க்காயுசாக ஜீவித்திருக்கு மென்று சொல்வாய் எ-று. 139

கருப்பத்திலிருக்கும் குழந்தையின் விபரமறிய

கருப்பவதியா யிருக்கும்பெண்களுக்கு
கருவிலுற்ற சிசுவிபரமறிவதானால்
அருமையுடன்கெற்பத்தைத் தொடுவாரானால்
ஆண்குழந்தைபிறக்குமென்று விபரமாய்ச்சொல்
தருணமேவான்மீகந் தொடுவாரானால்
தையலென்றபெண்குழந்தை பிறக்குமென்பாய்
வருந்தவே துவாரத்தை தொடுவாரானால்
வருத்தமுடன்கருவழிந்து போகுமென்றுசொல்வாய்.

இ-ள். கருப்ப வதியாயிருக்கும் பெண்களின் வயற்றிலுள்ள சிசு ஆணோ? பெண்ணோ வென்று அறிய வேண்டுமென ஆரூடங்கேட்பவர்கள் கெற்பத்தைந் தொட்டால ஆண்குழந்தை பிறக்கு மென்றும், வான்மீகத்தைத் தொட்டால் பெண்குழந்தை பிறக்கு மென்றும் சொல்வாய், ஆனல் துவாரத்தை தொட்டால் கருப்பத்திலேயே கரு வழிந்து போனாலும் போகும் அதுபிறந்தாலும் இறந்து விடுமென்று விபரமாய்ச் சொல்வாய் எ-று. 130

பிறக்கும் குழந்தை கறுப்பு, சிவப்பென்பதை கவனிப்பது அறிய.

கருப்பத்திலேயிருக்கும் சிசுவின்நிறந்தான்,
கறுப்புசிவப்போவென்று கேட்போர்கெற்பந்தொட்டால்

கறுப்புநிறமுள்ள சிசுபிறக்குமென்றும்
கழறுவாய்வான்மீகந் தொடுவாராகுல்
தருணமே மாநிறமாயிருக்கும்பிள்ளை
தாம்பிறக்குமென்று சொல்வீர் துவாரந்தொட்டால்
பிறக்கின்றகுழந்தை சிவப்பென்றுரைப்பாய்
பிசகிலா ஆரூடங்கேட்போருக்கே.

இ-ள். கர்ப்பஸ்திரீயின் வயற்றிலிருந்து பிறக்கும்பிள்ளையின் நிறமெவ்வித மிருக்குமென்று ஆரூடங் கேட்பவர்கள் கெற்பத்தைத் தொட்டால் கறுப்பு நிறமான குழந்தைபிறக்குமென்றும், வான்மீகத்தைத் தொடுவாராகுல் மாநிறமாயிருக்கும் குழந்தை பிறக்கு மென்றும், துவாரத்தைத் தொட்டால் சிவப்பு நிறமான குழந்தைபிறக்குமென்றும் சொல்வாய் எ-று. 131

காலிமனையில் வீடு கட்டுவதறிய.

அன்புடனேகாலிமனையில் வீடுகட்டி
அமர்ந்திருக்கலாமோ வென்றுரூடங்கேட்போர்
மன்னுபுகழ்கெற்பத்தைத் தொடுவாராகுல்
மங்களமாய் மனைக்காலலாமென்றேது
வின்னமாய்துவாரத்தைத் தொடுவாராகுல்
வீடுகட்டிகுல் மாணமென்றேசொல்லு
வன்மைசேர்வான்மீகம் சதிபதிக்கு
வம்புசண்டை சச்சரவாயிருக்கும்பாரே.

இ-ள். காலிமனையில் வீடுகட்டிகுல் அதில்குடியிருந்து வாழ்ந்திருப்பதற்காகுமோவென்று ஆரூடங் கேட்பவர்கள் கெற்பத்தைத் தொட்டால் மங்களகரமாய் மனைகோலி வீடுகட்டி வாழ்ந்திருக்கலாகுமென்றும், துவாரத்தைத் தொட்டால் வீடுகட்டி குடிபோவதற்குள் மரணம் சம்பவிக்கு மென்றும், வான்மீகத்தைத் தொட்டால் வீடுகட்டுவதிலிருந்து குடிபோகும் வரையிலும் புருஷனும் மனைவியும் சண்டை சச்சரவு செய்துக்கொண்டே கடைசிவரையிலும் கலகமாகவேயிருக்குமென்று சொல்வாய் எ-று. 132

புதுவீட்டுக்குக் குடித்தனம்போக அறிய.

புதிதாககுடிபோக வேணுமென்போர்
புகழ்கெற்பந்தொட்டாலே நன்மையென்பாய்

மதிமயங்கி துவாரத்தைத் தொடுவாரானல்
மனவியாகூலமா யிருப்பாரென்றும்
விதிவசமாய் வான்மீகந்தொடுவாரானல்
வியாதிமெலிந்துழல்வா ரென்றேசொல்லு
ததியினிலே அவ்வீட்டிற்கேகவென்ருல்
தகாதென்றுசொல்வாய் நீவிளங்கத்தானே.

இ-ள். ஒருவர் தாங்கள் சொந்தமாய்க் கட்டின வீடானலும் சரி குடிக்கூலி வீடானலும் சரி குடிபோனல் சவுக்கியமடையலாமோ வென்று கேட்டால், அவர்கள் தொட்டது கெற்பமானல் குடித்தனம் போக மிகவும் நன்மை யென்று சொல்வாய். துவாரத்தைத் தொட்டால் குடிபோனல் மனவியாகூலமா யிருப்பார்களென்று சொல்வாய், வான்மீகத்தைத் தொட்டால் வியாதியால் மெலிந்து கஷ்டப்படுவா ரென்றும் குடிபோனல் பலவிதகஷ்டமும் கவலையும் நேரிடு மென்றும் சொல்வாய் எ-று. 133

மீனம் உபயம்	மேஷம் சரம்	ரிபஷம் ஸ்திரம்	மிதுனம் உபயம்
கும்பம் ஸ்திரம்	பனிரெண்டு இராசி ஆரூடம்.		கடகம் சரம்
மகரம் சரம்			சிங்கம் ஸ்திரம்
தனுசு உபயம்	விருச்சிகம் ஸ்திரம்	துலாம் சரம்	கன்னி உபயம்

எண்சீர் விருத்தம்.

உலகமதிலுள்ளவர்கள் சுகதுக்கத்தை
உண்மையாயனுபவிக்கும் போதெண்ணத்தைப்

பலவிடத்திலேசெலுத்தி முயற்சிசெய்தால்
பக்ஷமுடன்ஜீவிப்போ மென்றேயெண்ணி
நலமுடனேதிரவிய சம்பத்துற்சாகம்
நாடினுல்மகிழ்வார் துக்கமுற்றுல்
தலைவிதியென்றே கலங்கிதுடிப்போருக்கு
தகுந்தவிதம் ஆரூடஞ்சொல்லுவோமே.

இ-ள். உலகத்திலுள்ள மனிதர்கள் தமது வாழ்நாளின் சுகதுக்கத்தை அனுபவிப்பது அவரவர்களின காலநிலையின் காரணமாகும், ஆனல் சுகத்தையனுபவிக்கும்போது தனது முயற்சியினுல் திரவியஞ் சேகரித்து சகலரும் புகழுந்தன்மையாயிருக்கின்றே மென்றும், துக்கம் வரும்போது தலைவிதியால் நேரிட்ட தென்றும் சொல்லிக்கொண்டிருப்பார்கள். ஆகையால் இவைநட்டு ஆதாரமான ஆரூடசாஸ்திரத்தைக் கவனித்து தனக்கு நேரிடும் பலாபலத்தை கவனிப்பது தான் சிரேஷ்டமாகும் எ-று. 134

ஆரூடத்தின் நிலை.

அன்புடனே பூலோகந்தன்னில்வாழும்
அறிவுடையமனிதர்களின் வாழ்நாள்தன்னில்
துன்பமதுவந்தாலே துயரமுற்று
துடிதுடித்துக் கலங்கியேவிசனமுற்று
கன்மவிதிதனையொழிக்கும் காரணத்தை
கண்டுணர ஆரூடங்கேட்போருக்கு
நன்மைதுன்பம்இரண்டுமே ஆரூடத்தால்
நலமுடனேகவனித்தால் தெரியும்பாரே.

இ-ள். மனிதவகுப்பார்களில் சுகதுக்கம் வரும்போது இவையனைத்தும் பிராரத்வ கன்மத்தினுல் நேரிட்ட தென்றெண்ணுமல் கலங்கும்போது இதனுண்மை இரகஸியத்தை ஆரூடத்தால் கவனித்துப் பார்த்து சமயோசிதமாய் நடந்துகொள்வதே தகுதியாகும். ஆகையால் சுகமனுபவிக்கும்போது மனமகிழுவதும், துக்கம் வரும்போது விசனப்படுவது மாகாது. அதற்காக ஏதேனும் ஓர் காரியத்தைச் செய்தால் ஆரூடம் பார்த்தால் அவைகளின் நன்மையாயிருந்தால் செய்யலாம். துன்பமும் கலகமு மாயிருந்தால் சும்மாயிருப்பதே சுகமாகுமென்று சொல்வாய் எ-று. 135

நவநாதர்களின் செய்கையின் விபரம்.

பருதிமதிகுஜபுதனும் வியாழன்சுக்ரன்
பராக்கிரமசனிராகு கேதுவென்னும்
பெருமையுள்ள நவக்கிரகங்களென்னும்
பேசுபுகழ்நவநாதர் மனிதர்கட்கு
அருமையாய்ச்சுகதுக்க மனுபவிக்க
அனுக்கிரகஞ்செய்வதினால் மனிதருக்கு
வருவதெல்லாம் ஆரூடசாஸ்திரத்தில்
வகையுடனேவிபரமாய்த் தெரியும்பாரே.

இ-ள். சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி, இராகு, கேது வென்னும் ஒன்பது கிரகங்களாகிய நவநாதர்கள் மனிதர்களுக்கு அந்தந்த காலத்தில் சமயோசிதமாய் சுகதுக்கத்தை உண்டாக்கி அவரவர்கள் முன்ஜனனத்தில் செய்த பாபபுண்ணிய பலனுக்குத் தகுந்த விதமாய் சுகதுக்கத்தை அனுபவிக்கச் செய்கின்றார்கள். இதனைக்கவனிக்க வேண்டுமென்றே ஆரூட சாஸ்திரத்தில் பார்த்து தாங்கள் செய்யும் காரியத்தால் நன்மையோ கெட்டதோ வென்று பகுத்தறிவினால் கவனித்துக்கொள்ள வேண்டும் எ-று. 136

நவக்கிரகங்கள் ஸ்தானமாகிய துவாதச ராசிகள்.

மேடமிடபம்மிதுனங் கடகம்சிங்கம்
மேன்மையுறுங் கன்னி துலாம்விருச்சிகந்தனுசு
நாடுமகரங்கும்பம் மீனமென்னும்
நலமானராசிபனி ரெண்டுதன்னில்
கூடுசரம்ஸ்திரம் உபயமென்றுசொல்லி
குறிப்பிட்டராசிதனைத் தொட்டாலெந்த
வீடோதானென்றெண்ணி பலாபலத்தை
விளம்பினல்பலாபலன்கள் தெரியும்பாரே.

இ-ள். நவக்கிரகங்களுக்கு ஆக்ஷி, உச்சம், பகை, நீச நட்பு வென்னும்படியான இராசிகள் பனிரெண்டு அவைகளில் கிரகங்கள் வரும்போது மனிதர்களின் பிராரத்வ கர்மவினையின்படியே சஞ்சிதத்தில் சுகாசுகத்தை யனுபவிக்கும்படியான பலனைத் தருவார்கள். அந்த பனிரெண்டு இராசிகளின் விபரம் எவ்விதமெனில், மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிங்கம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனமென்னும் பனிரெண்டு ராசிகளின் சரம்,

ஸ்திரம், உபயமென்னும் விபரத்தை கண்டுணர்ந்து ஆரூடத்தின் கணிதத்தின்படியே பலன்களை விபரமாய்த்தெரிந்துகொள்வதற்காகும்.

துவாசதச ராசியில் சரம் ஸ்திரம் உபயமறிய.

சரராசிமேஷம் கடகம் துலாமும்
சார்ந்தமகரம் மாகுமென்றினிதாய்ச்சொல்லு
தாணியிலே ஸ்திரராசி ரிஷபம் சிங்கம்
தேள்கும்பமாகுமென தெளிவாய்ச்சொல்லு
விரகமுடன்மிதுன கன்னிதனுசுமீனம்
விளப்புவாய்உபயராசி யென்றேநீதான்
விரலினால்இராசிதன்னை தொடவேசொல்லி
விளம்புவாய்பலாபலனை விரிவாய்த்தானே.

இ-ள். மேஷம், கடகம், துலாம், மகரமாகிய நான்கும் சரராசியாகும், ரிஷபம், சிங்கம், விருச்சிகம், கும்பம் இந்நான்கும் ஸ்திரராசியாகும், மிதுனம், கன்னி, தனுசு, மீனம் இந்நான்கும் உபயராசியாகும் இவற்றையெல்லாம் சரியாய் ஆராய்ந்து பார்த்துக்கொண்டு ஆரூடங் கேட்கவந்தவர்களை தமது விரலால் ஓர் இராசியை தொடச்சொல்லி அதன் பலனை விபரமாய்ச் சொல்ல வேண்டும் எ-று. 138

மேஷராசியின் பலன்.

மேஷத்தைத்தொடுவாராகில் திரவ்யலாபம்
மேன்மையும்புகழுமுண்டு சரராசியாலே
நாடோறத்தவீண்டம்பம் செய்வாரின்னம்
நவிலெணு மனோற்சாகமதிகரித்து
வீடெங்கும் பிரகாசமாகவேதான்
விளங்கும்படி பந்துஜன கூட்டம்சேரும்
தேடியேசிநேகிதர்கள் சேர்க்கையாவார்
தெளிவாகநற்காலம் வருகுந்தானே.

இ-ள். மேஷமென்னும் சரராசியைத் தொடுவார்களானால் திரவிய லாபம் கிடைத்து அதனால் வீண்டம்பம் செய்து விசேஷமாய் செலவு செய்து வீட்டுக் கலங்காரமாய் விருந்து முதலானவைகள் செய்து பந்து மித்திர கூட்டத்துடனே மனோல்லாசமாய் கீர்த்தியுடனே வாழ்ந்

இருப்பார்கள். சரீராரோக்கியமா யிருப்பார்கள். பார்ப்போர்கள திச யிக்கும் படியான பிரபுவைப்போல காணப்படுவார்கள் எ-று. 139

ரிஷபராசியின் பலன்.

அன்புடனேரிஷபராசியென்னு ஸ்திரத்தை
அச்சமயம்தவறாமல் தொடுவாராகில்
இன்புடனே தான்நினைத்த காரியமெல்லாம்
இனிதாகக்கைகூடும் லாபம்கல்வி
நன்மையாய்கிடைக்கும் லக்ஷ்மீகடாக்ஷம்
நாடுமேதேகாரோக்கியமும் மேன்மை
தன்மையாயுண்டாகுமென்று நீதான்
சாற்றுவாய் ஆரூடங்கேட்போருக்கே.

இ-ள். தமக்கு இனி எவ்விதமாயிருக்குமென்று ஆரூடங் கேட்பவர்கள் ரிஷபராசி யென்னும் ஸ்திரராசியைத் தொட்டால் தான் நினைத்த காரியமெல்லாம் கைகூடு மென்றும், இலக்ஷ்மிகடாக்ஷமும், தேகாரோக்கியமும் மேன்மையும், கிடைப்பதுடன் சகலவித காரியமும் ஜெயமாய் விளங்கி ஞாபகசக்தியும் உண்டாகு மென்று சொல்வாய் எ-று. 140

மிதுனராசியின் பலன்.

மிதுனராசியென்னும் உபயத்தைத்தொட்டால்
மேன்மையுடன்தன்வார்த்தை மேன்மையாகும்
அதிகமகிழ்வாய் தன்மனைவிசுகமதாக
ஆண்பிள்ளைபெற்றிடுவாள் போனோர்மீள்வர்
நிதிமிகுந்துமணங்கூடும் செட்டுஞ்சேரும்
நீணிலத்தில்வெகுலாபம் கிடைக்கும்பாரே
விதிமதியும்ஆராய்ந்து பலனைச்சொல்வாய்
விமரிசையாய் ஆரூடபலனுஞ்சேர்த்தே.

இ-ள். மிதுனராசி யென்னும் உபயத்தை தொட்டால் மேன்மையும் கீர்த்தியும் பொருந்தி தான் சொல்லும் வாக்கியமே சகலரும் சரி சரி யென்று சம்மதித்துக்கொள்ளும்படியான கௌரவத்தைக் கொடுக்கும், தனது மனைவி சுகானந்தமாக ஆண்பிள்ளையைப் பெறுவாள். வெளிதேசத்திற்குப் போனவர்கள் மீண்டுவருவார்கள். தாங்கள் செய்

யும் வியாபாரத்தில் நஷ்டமடையாமல் செலவு குறைந்து லாபமும் கிடைக்குமென்று சொல்வாய். இதனுடன் அவர்களுடைய இலக்கின இராசிபலனை திசாபுத்திபலனையும் ஆராய்ந்துணர்ந்து ஆரூடத்திற் கிசைந்தபலனை விபரமாய் சொல்வாய் எ-று. 141

கடகராசியின் பலன்.

கடகமென்னும்சரராசி தொடுவாராகில்
  நன்னல்செந்நெல் விளைவதற்குமழையுண்டாகும்
திடமுடனேவீடுகட்ட செல்வமுண்டாம்
  தீரமு[illegible]பொருள்சேர்க்க திறமையுண்டாம்
நடவுமிகஉண்டாகும் நாற்பாங்கெல்லை
  நற்பயிர்கள்தான்விளையும் பெருமையோங்கும்
கடனில்லாதுலகமதில் தனவானாக
  களிப்புடனே ஜீவிப்பாரென்றுசொல்லே.

இ-ள். கடக மென்னும் சரராசியைத் தொட்டால் விசேஷமழை பொழிந்து நவதான்யாதி செந்நெல் முதலானவையும் விளைந்து செழிப்படைவதற் கிசைந்த மழைபொழியும், வீடுகட்டுவதற் கிசைந்த தனலாபம் கிடைக்கும் திரவியஞ் சேகரிப்பதற் கிசைந்த திறமையும் சாமர்த்தியமு முண்டாகும். தமதுகழனியின் நாற்பாங்கெல்லையிலும் தான்யாதிகள் செழுமையாய் வளர்ந்து வெகுபொருள் சேகரித்து கடனில்லாமல் தனந்தான்ய ஆஸ்திபூஸ்திதியுடைய தனவானாக யிருப்பதற்காகுமென்று சொல்வாய் எ-று. 142

சிங்கராசியின் பலன்.

சிங்கராசியாகிய ஸ்திரத்தைத்தொட்டால்
  திரவியலாபஞ்சேர்ந்து மழையும்பெய்து
மங்காதசம்பத்தும் தானியாதி
  மகிழ்ச்சியுடனேசேர்க்கும் திறமைவாய்ந்து
எங்குமுள்ளோர்தான்புகழ வாழ்வுண்டென்றும்
  எத்தேசமாகினும் போனோர்மீள்வர்
சங்கையிலாபந்துக்கள் சேர்ந்துவாழ்வார்
  சதாகாலநன்மையுண்டு மென்றுசொல்வாய்.

இ-ள். சிங்கராசியாகிய ஸ்திரத்தைத் தொட்டால் திரவியலாபமும் கிடைப்பதுடன் வெகுபொருள் சேகரஞ் செய்வதற்காகும், பந்

துக் கூட்டங்கள் புகழுந் தன்மையான கீர்த்தியும் வாழ்வும் மேன்மையும் கிடைத்து சுகசௌக்கியமா யிருப்பதற்காகும் வெளிதேசத்திற்குப் போனவர் மறுபடியும் வருவார்கள். சதாகாலமும் நன்மையும் சரீராரோக்கியமும், வியாபாரவிர்த்தியும் உத்தியோக சம்பத்தும் கிடைக்குமென்று சொல்வாய் எ-று. 143

கன்னியாராசியின் பலன்.

கன்னியாராசியென்னும் உபயத்தொட்டால்
கவனிப்பாய்நீசெய்யும் கருமத்திது
இன்னலுடன்மனையாட்கு கர்ப்பமில்லை
இனியமழைபொழியாது துன்பமுண்டாம்
நன்மணமும்நடக்காது போனோர்மீளார்
நற்பயிரும்விளையாது நலமேயில்லை
தன்மைபாய்யாதொன்றும் செய்யாமற்றன்
ஜாக்கிரதையாயிருப் பீரென்றுசொல்வாய்.

இ-ள். கன்னியாராசியாகிய உபயத்தைத் தொட்டால் செய்யும் படியான தொழிலால் பலவித கஷ்டமுண்டாகு மென்றும், வறுமையும் துன்பமும் சூழ்ந்து மனைவிக்கு கர்ப்ப மில்லை யென்றும் மழை பொழியாமல் துன்பமும் துயரமு முண்டாகு மென்றும், கலியாணகாரிமும நடவாதென்றும் சொல்வாய் வெளிதேசத்திற்குப் போனோர் வர மாட்டார்களென்றும், தான்யாதி பயிர்கள் விளையாதென்றும் சொல்வாய் இத்தியாதி கஷ்டபலனைப் ஆரூடத்திற் சொல்வதினால் ஜாக்கிரதையாயிருக்கும் படியாகச் சொல்வாய் எ-று. 144

துலாராசியின் பலன்.

ஆரூடங்கேட்கவந்தோர் துலாராசிதன்னை
அன்புடனேதொட்டாலே கருமம்நன்று
கூறுநல்லபயிருமுண்டு லாபமுண்டு
குறித்ததெல்லாம் கைகூடும்பந்துகூட்டம்
சாருமேஆடை ஆபரணமெல்லாம்
சஞ்சலங்கள்வருகாது சொர்ணமுத்துஞ்
சேருமேசகலருமே புகழ்ந்துகூறச்
செம்பொன்னும்சேருமென திடமாய்ச்சொல்வாய்

இ-ள். ஆரூடங் கேட்க வந்தவர்கள் துலாராசியாகிய சாத்தைத் தொட்டால் தாங்கள் நினைத்த காரியம் ஜெயமாகும் கழனியில் விதைத்தபயிர்கள் மிகவும் செழிப்பாய்வளரும், பந்து ஜனக்கூட்டம் மிகவும் ஆசாபாசத்துடன் வந்து சேர்ந்திருப்பார்கள். ஆடை ஆபரணாதிகளும் விசேஷமாய் சேரும், திரவியலாபமும், கீர்த்தியும் மேன்மையும் பொருந்தி சகலரும் புகழ்ந்து பேசும் படியான கௌரவமும், வித்தையும், புத்தியும், ஞாபகசக்தி உண்டாகுமென்றுசொல்வாய் எ-று 145

விருச்சிகராசியின் பலன்.

அன்புடனே விருச்சிகத்தைத்தொடுவாரானால்
அறிவிப்பாய்பெண்ணென்று விபரமாக
அன்புடனேவளர்த்தவர்கள் தாழ்வாராப்பா
இனியபால்தயிரில்லா ஏழையாக
துன்பமேயடைவார்கள் பொசிப்பில்லாமல்
தோற்றும்பின் இளையவளோ சிறந்தவாழ்வு
நன்மையுண்டு மகிழ்ச்சியுண்டு
நலமென்றோதே.

இ-ள். விருச்சிகராசியைத் தொடுவார்களானால் அவர்கள் நினைத்தபெண்ணை வளர்த்தவர்கள் பால் தயிர் குன்றி வறுமையடைந்து ஏழையாகி துன்பத்தை யனுபவிப்பார்களென்றும், இரண்டாவது வருகிற பெண்ணால், பலவித நன்மையுண்டாகுமென்றும் மனமகிழ்ச்சி தனதான்ய பசுபுத்ர லாபமும் உண்டாகுமென்று சொல்வாய்.

தனுசுராசியின் பலன்.

தனுசென்னும்ராசிதனைத் தொடுவாரானால்
சஞ்சலமுமிகவுண்டாம் சுகமிராது
மனஞ்சலித்தெங்கேனும் போவதென்றால்
வறுமையினால் துயருற்றுகலங்குவார்கள்
தனகனமும்பெருமையும் போய்வறுமைசூழ்ந்து
தவித்திடவேசெய்யுமது மற்றோரிடத்தில்
வினைவசத்தால்கடன்கேட்டால் தருகார்பத்னி
வியாதியினாலே மெலிவாளென்றுசொல்லே

இ-ள் தனுசுராசியைத் தொடுவார்களாகில் மனசஞ்சலமும் இதிலும்கஷ்டமும் கவலையுமாகும் ஸ்தானம் மாறுதலாக வேறேரிடத்திற்

சென்றாலும் வறுமையினால் துயருற்றுக் கலங்குவார்கள் தனது கால வித்தியாசத்தினால் கௌரவமும் பெருமையும் போய் துயரடைவார்கள் தமது கஷ்டத்தைச் சகிக்கமுடியாமல் கடன்கேட்டாலும் அகப்படாது தனது மனையாள் வியாதியினால் மெலிந்து மனமுருகி துன்பத்தையனுபவிப்பாளென்றும் சொல்லுவாய் எ-று. 147

விருச்சிகராசியின் பலன்.

அன்புடனே விருச்சிகத்தைத்தொடுவாரானால்
அறிவிப்பாய் பெண்ணென்றுவிபரமாக
அன்புடனேவளர்த்தவர்கள் தாழ்வாரப்பா
இனியபால்தயிரில்லா ஏழையாக
துன்பமேயடைவார்கள் பொசிப்பில்லாமல்
தோற்றும்பின் இளையவளோசிறந்தவாழ்வு
நன்மையுண்டு மகிழ்ச்சியுண்டு
நல மென்றோதே.

இ-ள். விருச்சிக ராசியைத் தொடுவார்களானால் அவர்கள் நினைத்த பெண்ணை வளர்த்தவர்கள் பால் தயிர் மோரில்லாத வறுமையடைந்து ஏழையாகி துன்பத்தை யனுபவிப்பார்களென்றும், இரண்டாவது வருகிற பெண்ணால், பலவித நன்மை யுண்டாகு மென்றும் மனமகிழ்ச்சி தனந்தான்ய பசுபுத்ரலாபமும் உண்டாகு மென்று சொல்வாய் எ-று. 148

தனுசு ராசியின் பலன்.

தனுசென்னும்ராசிதனைத் தொடுவாரானால்
சஞ்சலமுமிகவுண்டாம் சுகமிராது
மனஞ்சலித்தெங்கேனும் போவதென்றால்
வறுமையினால்துயருற்று கலங்குவார்கள்
தனகனமும்பெருமையும் போய்வறுமைசூழ்ந்து
தவித்திடவேசெய்யுமது மற்றோரிடத்தில்
வினைவசத்தால்கடன் கேட்டால்தருகார்பத்னி
வியாதியினாலே மெலிவாளென்றுசொல்லே

இ-ள். தனுசு ராசியைத் தொடுவார்களானால் மனசஞ்சலமும் திகிலும் கஷ்டமும் கவலையுமாகும் ஸ்தானம மாறுதலாக வேறோரிடத்திற் சென்றாலும் வறுமையினால் துயருற்றுக் கலங்குவார்கள் தனது

காலவித்தியாசத்தினல் கௌரவமும் பெருமையும் போய் துயரடைவார்கள். தமது கஷ்டத்தைச் சகிக்க முடியாமல் கடன் கேட்டாலும் அகப்படாது தனது மனையாள் வியாதியினல் மெலிந்து மனமுருகி துன்பத்தை யனுபவிப்பாளென்றும் சொல்லுவாய் எ-று. 149

மகரராசியின் பலன்.

ஆரூடங்கேட்கவந்தோர் மகாராசி
அன்புடனேதொட்டாலே கவலையாலே
தாரணியிலலைந்தாலும் இனிமேல்நன்று
தன [illegible] பெறுவாளின்னும்
பாரதிலேதனக்கு வெகுலாபமுண்டு
பக்ஷமுடன்நினைத்தது கைகூடுமின்னும்
நேரதாய்லக்ஷ்மி கடாக்ஷமுண்டு
நேர்மையுடன்சுகவாழ்வு பெருகுந்தானே.

இ-ள். ஆரூடங் கேட்கவந்தவர் மகாராசியைத் தொட்டால் இத்தனை நாளாய் மனக்கவலையால் திகிலடைந்திருந்தாலும் இனிமேல் சுகசவுக்கியமாயிருப்பதுடன் தனதுமனையாள் புத்திரபாக்கியம் பெற்று சுகமாயிருப்பாளென்றும், தாங்கள் நினைத்த காரியம் நிறைவேறுமென்றும், இலக்ஷ்மிகடாக்ஷத்தினல் சகல நன்மையும் சுகவாழ்வும் பொருந்தியிருக்குமென்றும் சொல்வாய் எ-று. 150

கும்பராசியின் பலன்.

மனஞ்சோர்ந்துகும்பத்தைத் தொடுவாரானல்
மதிமிகுந்துபொருள்சேரும் வியாதிபோகும்
கனமுடனேநவரத்ன முத்துசெம்பொன்
கனகபணிபூஷணமும் ஆடையுண்டாம்
இனஜனமும்புகழ்ந்துரைக்க பெருமைவாய்ந்து
இலக்ஷ்மிகடாட்சத்தினல் மிகுந்த
தனதான்யசம்பத்து மிகவுண்டாகி
தாரணியில்சிறந்து சுகவுண்டாமே.

இ-ள். கும்பராசியைத் தொட்டவர்கள் மிகவும் புத்தி சாதுர்யமாய் திரவியம் சேகரிக்குந்தன்மையான சமர்த்தா யிருப்பார்கள். வியாதிகள் விலகி சுகசவுக்கியமாயிருப்பார்கள். நவரத்னபரணங்களும், முத்தாபரணங்களும் பொன்பணிபூஷணதி யணிந்து சுகசவு

க்கியமாயிருப்பதுடன் இனஜன பந்துக்கூட்டங்கள் புகழுந்தன்மை யான பெருமையும்கீர்த்தியும் பொருந்தி இலக்ஷ்மி கடாட்க்ஷத்துடன் சிறந்து வாழ்ந்திருப்பார்கள் எ-று. 151

மீனராசியின் பலன்.

அன்புடனேமீனராசி தன்னைத்தொட்டால்
அகவிலைகுறையுமென்று தெளிவாய்ச்சொல்லு
தன்பமுடன்வனயாத்ரை கலகமுண்டாம்
துயரமுண்டுதையலாள் வரவுமில்லை
நன்மையுடன்தேசயாத்ரை மேல்
நலமுடனேவருகுவாரென்று சொல்லு
இன்பமுடன்பலநன்மை பின்புண்டாகும்
இலக்ஷ்மிகடாக்ஷ மினிகிடைக்கும்தானே.

இ-ள் மீனராசியைத் தொட்டால் அகவிலை குறையும் ஆரண்ய மார்க்கமாகச் சென்றால் வழிபறித்திருடர்களால் பலவித கலகமும் கஷ்டமும் நேரிடும் மாமியார் வீட்டிற்குபோன தனதுமனையாளை அழைத்து வருவதற்காகாது தூரதேசத்திற்போயிருந்தவர்கள் வரு வார்கள் சிலநாளைக்குள்ளாக பலவித நன்மையும் உண்டாகும், இலக்ஷ்மிகடாக்ஷம் பெருகி தனதான்யசம்பத்துடன் வாழ்ந்திருப்பதற்காகும்.

வான்மீகர் ஆரூடசாஸ்திரம் 150-பாடல்

முற்றிற்று.

ஆண்டாள் திருப்பாவை	0	2	0
ஷை 30 பாசுரம் மூலம் உரையுடன்	0	2	0
மோக்ஷராமாயணம்	0	1	0
கெருடதியாணம்	0	1	0
வேதாந்தராமாயணம்	o	1	0

டி. சாரதா புத்தகசாலை:

நெ. 23, பாளையப்பன் தெரு,

சோதிட தினுசுகள் விளம்பரம்.

	ரூ.	அ.
ஜாதகசிந்தாமணி திக்கடிதம்	1	8
ஷை கலிகாபைண்டு	2	0
ஜாதக அலங்காரம் மூலம்	0	12
ஷை மூலமும் உரையும்	1	8
அகஸ்தியர் பஞ்சபக்ஷி மூலம்	0	8
மெற்படி மூலமும் உரையும்	0	12
வினாடிபஞ்சபட்சிசாஸ்திரம்		
மூலமும் உரையும்	1	4
ஷை மூலம்	0	12
போகர் பஞ்சபக்ஷி சாஸ்திரம்		
மூலமும் உரையும்	1	0
சுருக்குபஞ்சபச்சி	[illegible]	[illegible]
கமலமாமுனி அஸ்[illegible]		
சாஸ்திர மூலமும் உரையும்	1	[illegible]
ஆண்பெண் ரேகைசாஸ்	0	8
அஸ்தரேகைசாஸ்திரம்	2	0
இராமதேவர்ரேகைசாஸ்	1	0
ஸ்திரீபுருஷ லக்ஷணகுறி	0	12
சாமுத்திரிகாலக்ஷணம்	0	12
அனுபோகஜாதகரகசிய	0	12
அனுபோகபிரசினை ஆரூடம்	0	8
அஷ்டதிக்கு ஆரூடம்		
5 சேர்ந்தது	0	12
ஆரூடசேகரம் 12-சேர்ந்தது	0	12
சோதிட பிரஞ்ஞான தீபிகை	3	0
குமாரசாமியம் திக் கடிதம்	1	8
கந்தர் நாடி	0	8
சுகர் நாடி	1	4
ஈஸ்வர நாடி	1	8
சோதிடசந்திரநாடி	0	12
கணிதமுருகசேகரம்	1	0
ஓரா சாஸ்திரம்	1	0
சோதிடசூத்திர விளக்க		
வினவிடை	0	6
நந்திவாக்கியம் 1-ம்பாகம்	1	8
மெற் 2-ம்பாகம்	1	8
கௌசிகசிந்தாமணி 1-ம்		
பாகம் திக் கடிதம்	0	14
ஷை 2-ம் பாகம்	1	4
ஷை 3-ம் பாகம்	1	0
மெற் 3 சேர்ந்த ஓரேகட்டடம்	2	8
சர்வ கினவின் பலன்	0	8

	ரூ.	அ.
நஷ்டசிந்தனை யென்னும்		
களவுகாணும் சாஸ்திரம்	0	4
சகுனசாஸ்திரம்	0	6
சுந்தரசேகரம் 1-ம்பாகம்	0	12
ஷை 2-ம் பாகம் தியாகராச	0	12
3-வது பாகம் ஆனந்தக்களிப்பு	0	12
சோதிட கோச்சாரசிந்தாமணி	1	0
சோதிடமர்மசாஸ்திரம்	0	12
சோதிடகடலகராதி	0	12
சோதிடகளஞ்சியம்	0	12
நிமித்தியகுறி சாஸ்திரம்	0	3
தினகர்சோதிடம்	0	8
பாச்சிகை சாஸ்திரம்	0	1
மலையாளகுறி சாஸ்திரம்	0	1
தொடுகுறி சாஸ்திரம்	0	1
கெவுளி சாஸ்திரம்	0	1
பெண்கள் ருதுஜனன		
பாவபலன்	0	4
அசுவலக்ஷண விளக்கம்	0	2
சர்வார்த்த சிற்பசிந்தாமணி	1	8
அனுபோக ஆரூடசிந்தாம	0	8
கணேச ஆரூட தீபிகை	0	12
சோதிடபாலசிக்ஷை	0	8
வால்மீகர் ஆரூடசாஸ்திரம்		
150-பாடல்	0	8
ஷை 40-பாடல்	0	3
பாலகிரகதோஷம்	0	1
பஞ்சபக்ஷி ரத்தினம்	0	12
சோதிடமுகூர்த்தவிதா	0	12
சோதிடசில்லரைக்கோர்வை	2	0
சிற்பசாஸ்திர களஞ்சியம்	2	0
சிற்பநூல்பொக்கிஷம்	1	0
அஸ்தரேகை சாஸ்திரம்		
200-படங்களுடன்	2	0
சப்தரிஷிவாக்கியம் 5500		
பாடல் கலிகாபைண்டு	3	8
மெற்படி 1000-பாடல்	0	12
ஜாதகநுட்பநூல்	0	8
பாக்கிட்சோதிடம்	1	4
சோதிடகன்மகாண்டம் மூலமும்		
விசேட உறையும்	0	6
துய்யகேரளம்	0	6

டி. சாரதா புத்தக சாலை,

நெ. 23, பாளையப்பன் தெரு, மின்ட் போஸ்டு, மதராஸ்.

மகாமகுத்துவம் பொருந்திய கும்பமுனிவர் திருவாய்மலர்ந்தருளிய

உமாமஹேஸ்வர ஸம்பாஷணையாகிய

ஈஸ்வர நாடி சோதிடம்,

இந்த ஓர் அருமையான சோதிட நூல்.

அன்பர்காள்:—உலகில் ஜனனமான மானிடர்கள் வாழ்நாட்களைக் குறித்து "ஈஸ்வரநாடி" என்னும் சோதிடம் இதுவரையிலும் வெளிவராதிருந்தன தற்சமயம் நாங்கள் சில எட்டுப் பிரதிகளைக்கொண்டு தக்க சோதிடர்களால் சீர் திருத்தபெற்று வெளிவந்திருக்கின்றன.

இதில் பிதுர்காரகனாகிய சூரியகாண்டம்	1	8	0
மாதுர்காரகனாகிய சந்திரகாண்டம்	1	8	0
சகோதரக்காரகனாகிய குஜகாண்டம்	1	0	0
வித்தியாகாரகனாகிய புதகாண்டம்	1	0	0
புத்திரகாரகனாகிய குருகாண்டம்	1	0	0
களத்திரகாரகனாகிய சுக்கிரகாண்டம்	1	0	0
ஆயுள்காரகனாகிய சனிகாண்டம்	1	0	0

ஆகிய சப்தகாண்டங்களும் வசன ரூபமாய் அந்த அந்த லக்கணங்களுக்கு சக்கரங்களை ஏற்படுத்தி காண்டம் ஒன்றுக்கு 720-சக்கரங்கள் அமைத்து தற்சமயம் அச்சிட்டு வெளிவந்திருக்கின்றன.
7-காண்டங்களும் மொத்தமாக வாங்குபவர்களுக்கு விலை ரூபா 7 0 0

சர்வரிஷிகள் சம்மதமாகிய சோதிட சாரமென்னும்

பாக்கெட் சோதிடம்.

அஷ்ட ஐஸ்வர்யமளிக்கும் அவனியுளை ஆன்மகோடிகளே இச்சிற்றளவிலுள்ள சோதிட நூலானது சோதிடம் கற்றோர்க்கும், கற்போருக்கும், ஓர் ஆசானைப்போல் ஆதரவாகி அனேக விஷயங்களைத் தன்கர்ப்பத்திலடக்கியது மூன்றுபாகங்களுள்ளது.

இதன் விலை ரூபா 1 8 0

ககதேவர் அருளிசெய்த நிமித்த சூடாமணி என்னும்

சாகதேவ சாஸ்திரம்.

இதன் விலை அணா 0 4 0

போகமுனிவர் திருவாய் மலர்ந்தருளிய

போகர் பஞ்சபட்சி சாஸ்திரம்

நிமிஷப் பஞ்சபட்சி என்னும்

சுருக்கு பஞ்சபட்சி சாஸ்திரம்

மூலமும் - உரையும்.

இஃது மிக்க மேன்மைதங்கிய சோதிட சாஸ்திரங்களில் ஒன்றென்பதை பூர்வீக சோதிடர்களும் இக்காலத்துச் சோதிடர் அனைவரும் மறிவார்கள்.

இதுவரையில் வடமொழியிலிருந்த இச்சாஸ்திரத்தை (சோதிட மணிதேவேந்திரன்) என்பவரால் லோகோபகாரமாகும்படி பாட்டும் மிக எளிய தமிழ் நடையில் உரையை எழுதி அடியிற் கண்ட எம்மால் அச்சிடப்பட்டிருக்கின்றது.

இதன் விலை அணா 0 14 0

அகஸ்தியர் பஞ்ச பட்சி சாஸ்திரம்.

மூலமும் - உரையும்.

ஆதியில் அருந்தமிழ் ஓதிவைத்த அகஸ்தியமாமுனிவர் அருளிச்செய்த பஞ்சபட்சி சாஸ்திரமாகிய இவ்வரிய நூல் இதுவரையில்மூலமாக யிருந்ததை பண்டித சாஸ்திர வல்லவராகிய சாந்தலிங்க சுவாமிகளைக்கொண்டு நூதன உரை எழுதிவைத்தும் யிதுவரையில் கடைவீதி புத்தகங்களில் விட்டுப்போன பஞ்சபட்சி படங்கள், கணிதாரூட சக்கிரம் காலசக்கரம் பூர்வபட்சவாரம் 1-க்கு 60-நாழிகைக்குறிய பட்சிகள் வருமுறை சக்கரம், நட்சத்திரம், அமைத்து சுத்தமாக அச்சிட்டிருக்கின்றது.

புத்தகம் விலை அணா 0 12 0

ஞானசார நூல் மூலம்-உரை.

இதனால் யோகசாதன முடையவர்களுக்கு அறிவிப்பது என்னவென்றால் சங்கரனார் உமயவளுக்கு உபதேசித்த ஞானசாரநூல் மூலமும் உரையும் தெய்வீகத்தன்மை பொருந்திய ஔவையார் திருவாய் மலர்ந்தருளிய உயர் ஞானசாரநூல் மூலமும் உரையும் பீர் முகம்மது அருளிச்செய்த திருதமஞ்ஞான சாரநூல் மூலமும் இம்மூன்றும் ஓரே புத்தகத்தில் அச்சிட்டிருக்கிறது.

புத்தகம் விலை அணா 0 4 0

3908

908

நீங்கள் எதிர்பார்த்திருந்த

இன்ப ரகசியம்!

வெளிவந்து விட்டது!   வாங்கி வாசித்துப்பாருங்கள்!!

	ரூ.	அ.	ப.
ஜீவவசியபரம ரகசியம்	3	0	0
மணவாழ்க்கையின் மர்மம்	2	4	0
இல்வாழ்க்கையின் இரகசியம்	2	0	0
மதிமோசக் களஞ்சியம் 2-பாகம்	2	0	0
மனோவசிய சாஸ்திரம்	1	8	0
கைத்தொழில்வணிகரகசியம்	1	8	0
மாயாஜால விநோதம்	1	0	0
சதிபதிகளின் மர்மம்	1	0	0
சரீரமர்ம சாஸ்திரம்	1	0	0
பிரமஞான பரம ரகசியம்	1	0	0
ஸ்திரீ புருஷ சமத்துவம்	1	0	0
கொக்கோகம்	1	0	0
மதனரதி ரகசியம்	1	0	0
ஸ்திரீ புருஷ ரகசியம்	1	0	0
மதன சிங்கார ரகசியம்	0	12	0
[illegible]கிர சிந்[illegible]மணி	0	8	0
இரகசியசாஸ்திர சிந்தாமணி	0	8	0
விகட சித்தர் கோவை	0	8	0
காதலின் வெற்றி	0	6	0
ஆர்மோனிய சங்கீத பால வித்திய போதினி	0	12	0
ஆர்மோனிய அனுபவ சங்கீத ரத்னாகாரம்	1	0	0

பகவத்கீதை வசனம்.

பாக்கெட் அளவு 18 அத்தியாயங்களும் அடங்கியது

படங்களுடன் சுத்தப்பதிப்பு.

இதில் வேதாந்த ரகஸ்யத்திற்கு உபமானமாய் ஸத்தர்ப்பானுசாரமாய் உபநிஷத்வாக்கியங்கள் ஆங்காங்கு உபயோகிக்கப் பட்டிருக்கின்றன. யோகஞானங்களை விளக்கிக்காட்டும் நூல்களில் இதுவே முதன்மை பெற்றதுவாம். அலையுமனதை அகத்தில் அடக்குவதற்கு அரிய பெரிய கருவியாகும். ஏழைகளும் எளிதில் வாங்கும் பொருட்டே பாக்கெட் அளவில் விலைமிகவும் சஹாயமாய் ஏற்படுத்தப்பட்டது.

இதன்விலை ராப்பர் பயிண்டு	0	8	0
ஷை கலிகோ பயிண்டு	0	10	0
ஷை வசனம் பெரியது	1	8	0

வான்மீகர் ஆரூட சாஸ்திரம் 150-பாடல்

மூலமும் - உரையும்.

இது ஜோதிடர்களுக்கு முக்கியமான புத்தகம்.

இதன் விலை அணா 0 8 0

டி. சாரதா புத்தகசாலை

நெ. 23, பாளையப்பன் தெரு,

மிண்ட், போஸ்டு, மதராஸ்.

வெளிவந்து விட்டது. வெளிவந்து விட்டது

கமலயாமுனிவர் இயற்றிய

அஸ்தரேகை சாஸ்திரம்.

மூலமும் - உரை.

மேல் குறித்த ரேகை சாஸ்திரம் இல்லரத்தாரும் ஜோசியர்களும் சுலுபமாக தெரிந்துக் கொலலும் பொருட்டு தகுபானவிதவானகளாள உறை யெழுதப்பட்டு அஸ்தபடங்களுடன் இருக்கிறது இதுவிவாகம் ஆயுள் இல்லர சுகம் சந்தானம் ஐஸ்வரியம் வியாதி காரிய சக்தி தேக ச[illegible]கியம் தன நஷ்ட[illegible] மரணம் முதலிய பல விஷயங்களை சுலபமாகத் தெரிந்துக் கொள்ளலாம்.

இதன் விலை ரூபா 1 8 0

புதிய புஸ்தகம்! வெளிவந்துவிட்டது!!

சங்கீத பால வித்தியா போதினி.

இஃது ம-ா-ா-ஸ்ரீ, வித்துவான் காஞ்சிபுரம் பிட்டில் கிருஷ்ணய்யா அவர்களாலும். ம-ா-ா-ஸ்ரீ, பிட்டில் துரைசாமி நாயுடு மாணவர், ஜலதரங்கம் எம். அப்பாயி நாயுடு அவர்களாலும் இயற்றப்பெற்றது

அன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுவதாவது என்னெனில் பாடகர்கள் வழிதெரிந்து (கீதஞானம், இலகுஞானம், தாளஞானம் சுத்திஞானம் பாடுதற்கும் சிறுவர் சிறுமிகள் ஆரம்பத்திலேயே சுலபமாகவும் தெளிவாகவும் முறையாகக்கற்று ஐயந்திரி பறப்பாடும் பொருட்டு அனுபவத்தைக் கொண்டு முன்னோர்கள் வரையறுத்ததில் சிற்சிலவைகளை கலந்தும் தொகுத்தும் சங்கீத பாலவித்தியா போதினி என்ற மகுடமமைந்து ஓர் சிறு புத்தகமாக எல்லோரும் வாங்கி வாசித்து எளிதாக வெகு தீவிரத்திற்கற்று பாடுந்திறமை பெற்று ஆனந்திக்க வெகு விபரமாய் எழுதி அச்சிட்டு இருக்கிறது.

இதன் விலை அணா 0 12 0

டி. சாரதா புத்தகசாலை,

நெ 23, பாளையப்பன் தெரு, மின்ட் போஸ்டு, மதராஸ்.